OFFICE ... 7- AP... MADRAS.


# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,

முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம்.ஏ., எல்.டி. பத்திராதிபர்.

| புஸ்தகம் I. Vol I. | சௌம்யஞு மாசிமாதம் February 1910 | சஞ்சிகை 6 No. 6 |
|---|---|---|


## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினனே."

இந்தியா கவர்ன்மெண்டாருடைய புதிய சட்ட நிருபண சபை.

'விஹாரிணி' முதல் நம்பரில் இந்தியா கவர்ன்மெண்டு விமர்சனத்தைப் பற்றி நாம் கொஞ்சம் விவரித்தெழுதினேமல்லவா? அந்த ஏற்பாட்டை யனுசரித்துப் பிறந்த புதுச்சட்ட நிருபண சபை, சென்ற ஜனவரி 24. தேதி யன்றைக்குக் கல்கத்தாவில் கூடிற்று. இராஜப் பிரதிநிதியவர்களும், இந்தியா கவர்ன்மெண்டு முக்கிய உத்தியோகஸ்தரும், மதிராசு முதலிய இடங்களிலிருந்து போன பிரதிநிதிகளும் ஆஜரானார்கள். இராஜப்பிரதிநிதியவர்கள் வந்தவர்களுக்கு நல்வரவு கூறி, இந்தியாவில் இங்கிலீஷ் துரைத்தனமேற்பட்டது முதல் நாளதுவரை சட்ட நிருபண விஷயத்தில் நடந்த விசேஷங்களை யெல்லாம் சுருக்கியுரைத்தார்கள். பிறகு சென்ற இருபது வருஷகாலமாக ஆசியா கண்டத்தில் ஜப்பான், பர்சியா, சீனு முதலிய தேசங்களில் நடந்தும், நடந்து வந்துகொண்டுமிருக்கும் பெருங் காரியங்களை விவரித்து, அதனுல் இந்தியாவிலும் 'பழையன கழிந்து, புதியன புகுந்து' வருதல் நியாயமென்று விளக்கிக் காட்டினுர்கள். ஆகவே இதை யனுசரித்துப் பிறந்திருக்கும் புதிய சட்ட நிருபண சபைகளையும், அவைகளிலாகவேண்டிய காரியங்களையும் மகா ஜனங்கள் செம்மையாயறிந்துகொள்ளவேண்டுமென்றும், மகா ஜனங்களுக்குப் பிரதிநிதிகளாக வருபவர்கள், இதுவரையிலிருந்ததைவிட அதிக எச்சரிக்கையுடன், சர்க்காருக்கும், தங்களைப் பிரதிநிதிகளாக்கிய மகா ஜனங்களுக்கும், நடுநிலையிலிருந்து, நாணயமாய் உழைத்து, இருதிறத்தாருக்கும் அனுகூலமுண்டாகும்படி பார்க்கவேண்டுமென்றும் வெகு ஆதரவோடு வற்புறுத்தினுர்கள்.

இப்படி நடந்துவரும் சுபமுகூர்த்தத்தில், 'கலப்பாலில் துளிவிஷம்' சேர்ந்துவிட்டதால், அதைப் பற்றியும் அவர்கள் பேசாமலிருக்க முடியவில்லை. அது நமக்கெல்லாம் மெத்தவும்

விசாரத்தையுண்டாக்குகிறது. ஏனெனில், அன்றையதினமே, கல்கத்தா ஹைகோர்ட்டில் சர்க்கார் காரியமாக வந்திருந்த மஹம்மதீய போலீஸ்டிப்டி சூப்பரிண்டாண்டு, ஷம்ஷியர் ஆலம் என்பவரை ஒரு பங்காளிப் பையன் சுட்டுக் கொன்றுவிட்டான். இவர் அலிப்பூர் வெடிகுண்டு கேசில், சர்க்கார் பக்ஷமாக ஆதிமுதல் நாணயமாய் உழைத்து வந்தவர். சுட்டுக் கொன்றவனுக்குச் சுமார் 18-வயது. இவன் ஒரு கைத்துப்பாக்கியை வைத்துக்கொண்டு கோர்ட்டுக் கச்சேரியில் இங்குமங்கும் சுற்றிக் கொண்டிருந்து, சமயம் பார்த்து அவரை யெதிர்த்துத் திடீரென்று சுட்டு அவரைக் கொன்றுவிட்டான்.

ஆதலால் இராஜப்பிரதிநிதியவர்கள் இதைச் சுட்டிப் பேசி, இனி யிம்மாதிரிக் கொலைகளை வேரறுக்க வேண்டிச் சர்க்கார் நிச்சயித்து விட்டதால், புதிய சட்டநிரூபணச் சபையாரும், நிர்வாக தரபில் உன்னத பதவிகளை வேண்டும் நம்மவர்களும், இவ்விஷயத்தில் நாணயமாய் உழைத்துச் சர்க்காருக்கு உதவி செய்ய வேண்டுமென்றும், இனி யிம்மாதிரிப்பாதகங்கள் நடவாமல் கட்டோடு நிற்கும்படிபார்க்க வேண்டுமென்றும்சொல்லி முடித்தார்கள்.

சமீபகாலத்தில் இம்மாதிரிக் கொலைகள் ஐந்தாறுக்குமேல் ஆகிவிட்டதால், நம்மவர் இனியாகிலும் கண்விழித்து, எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்பதில் ஆக்ஷேபமில்லை. ஏனெனில் இதைப் பிரபலிக்க விட்டால், யாரும் தப்புவதற்கில்லை. இப்பாதகர்களுக்கும், புலிக்கும் வித்தியாசமில்லை. புலிக்குத் ‘தன் காடென்றும், பிறன்காடென்றும்’ இல்லாதது போலவே, இவர்களுக்குமென்று அறிதல் வேண்டும். பேசுவதற்கெல்லாம், ‘குண்டு வாங்கிக் கொள்,’ என்றால் தேசக்ஷேமம் விர்த்தியாகுமல்லவா?

நிஜாம் பஹதூர் அவர்களுடைய ராச்சிய தருமம்.

ஆனால் மேற்சொல்லிய ‘துளி விஷக்கலப்பினால்,’ இந்தியா கவர்ன்மெண்டார் தாம் செய்வதாக மேற்கொண்ட காரியத்தை நழுவவிடார் என்று நமக்குப் பூரண நம்பிக்கை. இதற்கு அத்தாக்ஷியாகச்சமீபகாலத்தில் மேற்படியாருக்கு ஐதராபாத்து அதிபதியாகிய நிஜாம் பஹதூர் அவர்கள் எழுதியதைச் சந்தோஷத்துடன் மொழிபெயர்த்துச் சேர்க்கிறோம். ராஜத்துரோகம் வலுக்காமலிருக்கும்படி தேசீய ராஜாக்களையும் தங்களுக்கு அனுகூலமாய் நடக்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் சிலமாதங்களுக்கு முன் எழுதியதற்குப் பதில் அனேக ராஜாக்கள் அனேக விதமாய் எழுதினார்கள். நிஜாம் பஹதூர் மட்டும் தனித்தொருவிதம் இவ்வாறெழுதுகிறார்.—"நமது பிரஜைகளுக்கு அதிருப்தியென்பதே யில்லை. அவரவர் தத்தம் காரியங்களைப் பார்த்துக்கொண்டு சுகமாய் வாழ்ந்து வருகிறார்கள். இதற்குக்காரணம் நமது புத்தி வைபவமல்ல, நம் முன்னோர்கள் தேடி வைத்த புண்ணியத்தின் பலனும். அவர்கள் துரைத்தனம் நடத்தியது வெகு நல்ல தந்திரம். ஆதலால் நமது ராச்சியத்தில் இந்து வென்றும், மகம்மதீய னென்றும் தாரதம்மியம் காணுவதில்லை. எல்லா வருக்கத்தாரும் நம்மிடத்தில் ஒரே ரீதியாய் அதிகாரம் பெற்றுப் பக்ஷபாதமென்பது சிறிதுமின்றி அமுல் நடத்திவருகிறார்கள். இந்தத் தருமம் இந்தச் சமஸ்தானத்திற்குப் பரம்பரையாய் ஏற்பட்டது. தற்காலம் நமக்குப் பிரதான மந்திரியாகிய மகாராஜா கிருஷ்ணப் பிரஸாத் பஹதூர் ஹிந்துவாம். அவருக்கு முன் அனேகம் ஹிந்துக்கள் இவ்வாறு முதற்பதவி வகித்து வந்திருக்கிறார்கள். இது போலவே மற்றைய வருக்கத்தாரும். ஆதலால் சமஸ்தான உத்தியோகஸ்தர் எல்லா வருக்கத்தவராயு மிருப்பதில் நமது துரைத்தனம் சகல

ஜனங்களுக்கும் சம்மதமாகிப் பலத்து வேரூன்றியிருக்கிறது. நாம் சுன்னத்து மகம்மதீயராகியிருந்த போதிலும், இந்த ராச்சிய தந்திரத்தை நாம் கைவிடாததுகொண்டு, நமது துரைத்தனத்திற்கு ஒரு லோபமுமில்லை. ஆதலால் இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய முக்கிய மந்திராலோசனைச் சபைகளில் இந்தியர்களை நியமிக்கத் தீர்மானித்தது வெகு நல்லயோசனை. அதனால் நமக்கு அவ்விஷயத்தில் சந்தோஷம் வெகு அதிகம். மஹா ராணியவர்களுடையவும், அவருக்குப்பின் மஹாராஜச் சக்கிரவர்த்தியவர்களுடையவும், வாக்கியங்களை யனுசரித்தே இக்காரியம் நடப்பது கொண்டு, அதில் வித்தியாசஞ் சிறிதும் நமக்குக் காணவில்லை.

ஒருகை அடித்தால், மற்றது ஆதரிக்க வேண்டுமென்பது நம்முடைய முக்கியசித்தாந்தம். அனுபவத்தினால் இது நம்மனதில் நன்றாக வேரூன்றி வந்திருப்பது. ஆகலால், கொஞ்ச காலமாகக்காணும் கொலை முதலிய கலக காரியங்களை நடத்திவரும் ராஜத்துரோகிகளுக்கு எவ்வளவு கடூரமாக வேண்டுமானாலும் சிக்ஷை விதித்துக் கலகத்தை அடக்கி வேரறுப்பது நமது முதற்கடமை ஆயினும், அத்துடன் நிற்காமல், ராஜபக்தி, வேறு நற்குணங்கள் இவை நிறைந்துள்ள பெரும்பாலாராகிய இந்தியப் பிரஜைகள் விஷயத்தில், ராஜாங்கத்தார் எவ்வளவுதூரம் ஆதரவாயிருந்தாலும் அது இருதிறத்தாருக்கும் நன்மை செய்வதாகும். ராஜாங்கத்தார் இப்பிரஜைகளாகிய மகா ஜனங்களிடத்தில் பூரண விசுவாசம் வைத்து, ஜாதி, மதம், வருணம், முதலிய யாது காரணத்தினாலும் பாரபக்ஷம் காணாமற் பார்த்து வந்தால், அதனால் இருகக்ஷிக்கும் நன்மை பெருகுமென்பதிற் சந்தேகஞ்சிறிதுமில்லை. இந்தப்படி நாம் எண்ணியிருப்பது இந்தியா கவர்ன்மெண்டுக்கும் சம்மதமென்று கேட்க நமக்குண்டாகும் சந்தோஷத்திற்கு அளவில்லை.”

இவ்வாறு இம்மகானுபாவர் எழுதிய வசனங்கள் எல்லோர் மனத்திலும் உறைத்து, இதை யனுசரித்து நடக்கவேண்டுமென்னும் புத்தி எல்லோருக்குமுண்டாகி, ராஜாக்களும் பிரஜைகளும், ஒரு மனப்பட்டுச் சுகமடையும்படி சருவேசுவரனருள்வராக.

**ஓர் புதிய இந்திய யூனிவர்ஸிட்டி.**

சென்ற சஞ்சிகையில் சமாசாரக் குறிப்பில் இவ்விஷயமாய் எழுதியதுபோதாதாகையால், இன்னும் தெரிய வேண்டியவைகளை யிங்கு சுருக்கி யெழுதி விடுகிறோம்.

இந்தியாவில் இங்கிலீஷ் துரைத்தனம் ஏற்பட்டபின் சென்ற 55௵ காலமாக இந்தியா கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் யூனிவர்ஸிட்டிகளும், அவைகள் மூலமாய் நடந்துவரும் பரீக்ஷைகளும், அவற்றில் தேறிய சிலருக்கும், அவர்களால் மற்றவருக்கும், பல விதங்களில் நன்மை தந்து வந்திருக்கின்றனவென்பதில் சமுசயம் சிறிதுமில்லை. சர்க்கார் காரியம் வெகு சீராக நடந்துவருகிறது. பெரிய உத்தியோகஸ்தரில் அனேகர் பாபபுண்ணியத்திற்குப் பயந்து நடக்கிறார்கள்.

என்றாலும், இத்தேசத்தில் பூர்வந்தொடங்கி வந்திருக்கும் மதசம்பந்தமாகவும், ஆசார சம்பந்தமாகவும், அவற்றைப் பரிபாலித்து வந்த பெரியோர் சம்பந்தமாகவும், யாதொரு பேச்சும் இப்பாடசாலைகளிலிருந்து வந்ததில்லை. அம்மட்டே யல்லாமல், இவைகளை மாணாக்கர் தூஷித்துக் கைவிட்டுவிடவும் ஏற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இடிந்த கோவிலை மறுபடி கட்டுவது அழகே தவிர, இடித்தெறிந்து நிரவிவிடுவது அழகல்ல. ஆதலால் மறுபடி மதம், ஆசாரம் இவ்விஷயங்களில் மாணாக்கருக்குப் பக்தி யுண்டாகும்படி அவைகளை இக்காலத்திற்கேற்க உபதேசித்து வரவேண்டுமென்கிற எண்ணம் கொஞ்சகாலமாகப் பலத்து வருகிறது. அதற்குச் சாக்ஷியமாக ஸ்ரீ காசியிலும்,! வேறு சில இடங்களிலும், ‘சனாதனதரும’ பாடசாலைகள்

ஏற்பட்டு, மேனாட்டுப் படிப்புடன் தேசிய பாஷையாகிய சம்ஸ்கிருதத்தையும், வைதிக தருமங்களையும் கூட்டிப்படிப்பு நடந்து வருகிறது. ஆனால் கோடிக்கணக்கான ஜனங்களடங்கிய இப்பாரத வருஷத்தை உத்தாரஞ் செய்வதற்கு இரண்டொரு காலேஜ்களால் முடியாதாகையால் இனி யிம்மாதிரிக்காலேஜ்கள் எங்கும் செழிக்க வேண்டுமென்றும், அவையனைத்தையும் ஒன்று சேர்த்து அமுல் நடத்தி வர ஒரு யூனிவர்ஸிட்டி புதிதாக ஏற்படவேண்டுமென்றும் மாதோ ஸ்ரீ அன்னி பிஜாண்டு அம்மாள் அவர்களுக்கு நிஷ்கரிஷையா யிருக்கிறது. அதை யனுசரித்து வேண்டியபடி நடவடிக்கையும் நடந்துவருகிறது. இந்த யூனிவர்ஸிட்டிக்கு டைரெக்டர்கள் அனேகமாய் எல்லோரும் இந்தியர்களேயாம். இதற்கு அடங்கி வளர்ந்து வரும் ஸ்கூல்கள், காலேஜ்கள், ஆகிய இவைகளில், மதம், ஆசாரம் முதலிய விஷயங்களில் உபதேச மிருந்து தீரவேண்டும். ஆனால் மதங்களும், ஆசாரங்களும் பல வகைப்பட்டிருப்பதால், சிஷ்டாசாரங்களையும், சன்மார்க்கத்தையும், அந்தந்த மதஸ்தர்கள் இஷ்டம்போல் உபதேசித்து வரலாம். முக்கியமாக வேண்டியது பகையின்மை. புத்தமதம், இந்துமதம், அதிலுள்ள பரஸ்பரபேதங்கள், மகம்மதீய மதம், கிறிஸ்து மதம், எல்லாம் இந்தக்கட்டில் அடங்கவேண்டியவைகளே. ஆதலால் இந்தக்காரியம் மாதோ ஸ்ரீ அவர்கள் இஷ்டம் போல நிறைவேறு மென்றும், அது காலக்கிரமத்தில் எல்லோருக்கும் அபிமதமாகி, நமது ஜனங்களுக்குள் தெய்வபக்தியும், சீலமும் பிரபலிக்கு மென்றும் நம்புகிறோம். ஈசுவர கிருபை இம்மாதிரிக்காரியங்களுக்கு இருக்கு மென்பதில் நமக்கு ஐயஞ் சிறிது மில்லை.

**விவசாயக் கோ ஆபரேஷன்.**

பாபட்லா மிஷனைச்சேர்ந்த தாம்ஸன் பாதிரியார் 'மெயிலில்' இவ்வாறு எழுதுகிறார்:—சென்ற கிறிஸ்துமசுப் பண்டிகை தினம் பாபட்லாவில் இவ்விஷயமாய்ச் சங்கம் ஒன்று ஏற்பட்டது. எல்லோரும் அதை ஆசீர்வதிக்கவேண்டும். இச்சங்கம் விவசாய விர்த்திக்கென்றே ஆரம்பித்ததாகிலும், வர்த்தகம், கைத்தொழில், பாங்கு முதலிய விஷயங்களும் காலக்கிரமத்தில் வந்து சேரலாம்.

தற்காலம் இச்சங்கத்திற்கு விவசாயத்தின் பேரிலேயே முக்கிய திருஷ்டி. பாபட்லா சர்க்கார் தருசுகளிலும், புறம்போக்குகளிலும் புற்பூண்டுகள்கூட வளருவதில்லை. ஆனால், ஜனசகாயமும், சர்க்கார் உதவியும், ஈசுவர கிருபையுமிருப்பதாக இப்போது நமக்கு வெளியாவதால், கூடிய சீக்கிரத்தில் இப்பிரதேசமெங்கும் தான்னிய லக்ஷ்மி கூத்தாடுவாள். ஏனெனில் இக்காரியத்தில் ஜாதி, மதம், முதலியவற்றால் இடையூறு உண்டாகாது. வயிறு எல்லோருக்கும் ஒன்றேதான். ஆதலால் எல்லோரும் ஒருமனப்பட்டு உழைக்க நல்ல தருணம் ஏற்பட்டிருக்கிறது. 'கோ ஆபரேஷன்' என்றால், 'அன்னியோன்னிய சகாயம்,' என்று பொருள். இந்த முறையில் விவசாயம் நடந்தால், கலியுகம் சீக்கிரத்தில் மாறிக் கிருதயுக தருமம் இனி யொருமுறை செழிக்கு மென்பதில் தடையேயில்லை.

ஜர்மனி தேசத்தில் 1848-ம் ௵ முதல் இந்த முறையாக விவசாயந் தொடங்கியதில், நாளது தேதியில் ஜர்மானியக் குடித்தனக்காரர்களுக்கு வயிறு நிறையச் சாப்பாடும், வேண்டுமளவிற்குச் சலீசாகக் கடன்வாங்கி முன்னுக்கு வரப் பாங்குகளும் கிடைத்திருக்கின்றன. அவ்வாறே இந்தியாவிலும் இப்போது நாம் செய்யும் ஆரம்பமானது காலக்கிரமத்தில் இந்தியக் குடியானவர்களுக்கு எல்லா நன்மையையும் கொடுக்கும். ஜனங்களுக்குள் 'சுதேசி' அபி

மானம் அதிகரித்து வருகிறது. 'கோ ஆபரேஷன்' இரகசிய மறிவோரெல்லாம் அவ்விஷயத்தில் ஆக்கிரகப்படுகிறார்கள். ஆதலால் இந்தியாவுக்கும் நல்லதசை யிருப்பதாக எனக்கு நம்பிக்கையிருக்கிறது.

ஏழைகளுக்கு வேண்டியது அன்னசத்திரம், ஊட்டுப்பிறை முதலியவைகளல்ல. தத்தமக்கு வேண்டிய உணவு, துணி, வீடு முதலியவற்றைத் தாமே சம்பாதித்துக்கொள்ள ஏற்படும் சாதனங்களேயாம். இவை 'கோ ஆபரேஷன்' முறையாக உழைத்தால் அவர்களுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும். ஏழைக்கிரங்குவதில் இந்தத்தருமத்தை நாம் கவனிக்கவேண்டும். அதாவது :—"ஏழைகளில் சிலருக்கு * நாம் எக்காலத்தும் உதவவேண்டும்; ஒரோர் காலத்தில் ஏழைகளெல்லோருக்கும் உதவத்தான் வேண்டும்; ஆனல் ஏழைகளெல்லோருக்கும் எல்லாக் காலத்திலும் உதவுவது அவருக்கும் நல்லதல்ல, நமக்கும் நல்லதல்ல," என்பதேயாம்.

கானடாவில் முன்னொரு காலத்தில் விவசாயமென்றால் ஜனங்களுக்கெல்லாம் வெகு கசப்பாயிருந்தது. 'கோ ஆபரேஷன்' ஏற்பட்டபின்னேவென்றால்,சங்கதியே வேறாகிவிட்டது. இப்போது 'வேளாண்மையும், அதை யனுசரித்த கறவை முதலிய காரியங்களும் வேண்டியப்படியே நடந்து வருகின்றன. நமது ராஜப்பிரதிநிதியவர்கள் கானடாவிலிருந்த காலத்தில் இம்முறை பிரபலிக்க வேண்டிப்பலவிதத்திலும் சகாயம் செய்துவந்தவர்கள். ஆதலால் இந்தியாவிலும் இவர்கள் காலத்தில் இது பிரபலத்திற்கு வருவதில் தடையிராதென்று நம்புகிறேன். பாபட்லாவில் இது முதன் முதலாரம்பிப்பதில் எனக்குப் பெருமை வெகு அதிகம். ஏனெனில் நான் அதை எனக்கு அபிமான பூமியாக ஸ்வீகரித்துக் கொண்டிருக்கிறேன்."

படிப்பவரனைவரும் இதைக் கவனித்து மேல் நடக்கவேண்டியதை யறியவேண்டும்.

* சப்பாணி, குருடு, நொண்டி, சண்டி முதலியோருக்கு.

குவாலியர் சமஸ்தானத்தில் பெண் கல்வி

**பெண்கல்வி அபிவிர்த்தி.**

பரவவேண்டி, சர்க்கார்செய்து வரும் உபாயங்களிரண்டைச் சென்ற மாதத்தில் குறிப்பிட்டோம். லாகோர் ஆசார விமர்சன சபையில் இது விஷயமாக இப்படித் தீர்மானிக்கப்பட்டது :—"இந்த ராச்சியத்தில் உபாத்திச்சிமார் வேண்டிய மட்டில் இப்போது அகப்படுவதில்லை. இதனல் பெண் கல்வி அபிவிர்த்தியாவதற்கு இடையூறு நேரிட்டிருக்கிறது. ஆதலால் இப்போது கல்வி கற்றுப் பெருமையடைந்திருக்கும் பெண்மணிகளோவ்வொருவரும், தத்தமக்கியன்றமட்டில் ஒழிவு உண்டாக்கிக்கொண்டு, தத்தம் வீடுகளுக்கு அருகில் பெண்கள் பாடசாலைகளிருந்தால் அவைகளில் உழைத்து வரவேண்டும். இல்லாவிட்டால், அக்கம் பக்கங்களிலிருக்கும் பெண்குழந்தைகளில் ஏழைகளாயிருப்பவரை வரவழைத்துக் கொண்டு தமதகத்தில் சிறிது சிறிதாகக் கல்வி புகட்டி வரவேண்டும். இப்படியேதாகிலும் செய்து வருவதை இப்பெருமாட்டிகள் விரதமாகக் கொள்ளவேண்டுமென்று அவர்களை இச்சங்கத்தார் நமஸ்கரித்துக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்," என்று.

இதைப்படிக்கும் ஒவ்வொரு பெண்மணியும் இவ்விஷயத்தில் தம் சக்திக்கேற்க ஏதாகிலும் காலதாமச மின்றிச் செய்யப் பிரயத்தனப்படுவா ரென்று நம்புகிறோம். இப்போதிருக்கிற ரீதிக்கு அனேகமாய்ப்படித்த பெண்கள் பட்டணவாசிகளே. அவர்களில் ஏறக்குறைய எல்லோருக்கும் பகற்பொழுதில் இடையுண்டு. அதை ஊர் வம்பு அளப்பதிலும், சச்சரவு செய்வதிலும், கழிப்பதைவிட, அக்கம் பக்கங்களிலுள்ள ஏழைப் பெண்குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து வந்தால், புண்ணியம், புருஷார்த்தம் இரண்டும் கிடைக்கும். நிச்சயம். இதை முக்கியமாகத் தனவான்களான உத்தியோகஸ்தர் வீட்டு ஸ்திரீகளும், பெரியவக்கீல்கள் முதலியோர் வீட்டு ஸ்திரீகளும் கவனிக்கவேண்டும்.

சிறிதுசிறிதாக 'க்ஷணப்பொழுது, கணமாத்திரம்,' என்னும் நியாயத்திற்கிணங்கச்செய்து வந்தால், சீக்கிரம் 'பலதுளி பெருவெள்ளமாம்' என்பதற்குச் சந்தேகமில்லை. பட்டணங்களிலெல்லாம், ஒவ்வொரு தெருவிலும் இம்மாதிரி சில 'ஹஜாரப் பள்ளிக்கூடங்கள்' ஏற்பட்டால், அதிலிருந்து பெருங் காரியங்களாகாமற் போகாது. இதுவரையில் தக்ஷிண தேசத்தில் நமது ஸ்திரீகள் படித்து நாகரிக முதிர்ந்ததற்கு ஒரு அடையாளம்தான் கண்டிருக்கிறோம். மற்றவரைவிட விலையுயர்ந்த ஆடையாபரணங்களைத் தரித்து மினுக்குவதும், சவாரி முதலியன செய்வதும், வீட்டுவேலை பார்ப்பதற்குக்கூட தேக பலமற்று, சாருவ காலமும் வைத்தியம் செய்துகொண்டிருப்பதுமாம். இனியாகிலும் படித்த ஸ்திரீகள் 'கொள் என்றால் வாயைத்திறப்பது, கடிவாளமென்றால் பல்லைக்கிட்டுவது' என்று குதிரைக்குச் சொல்லும் நியாயத்தை அனுசரியாமல், தங்களுக்குப் படிப்பு வந்ததற்குப் பலன் தாங்கள்மட்டும் சுகித்திருப்பதன்று, ஏழைகளுக்குக்கூடியமட்டில் வித்தை வருவிப்பதும் தங்கள் காரியமே, என்று கொண்டு நடக்கவேண்டும்.

இப்படியேதாகிலும் சிறிய காரியங்கள் ஆரம்பமானால், ஸ்திரீகளுக்குள் காணும் பரஸ்பர மாச்சரியம் குறைவதற்கும், காலக்கிரமத்தில் ஜாதி, மதம் முதலியவற்றால் அனுவசியமாக நம்மை யுபத்திரவிக்கும் பிணிகள் நீங்குவதற்கும், பொது நன்மைக்காக ஸ்திரீகளுடைய சகாயம் கிடைப்பதற்கும் வழியேற்படும். தற்காலத்தில் ஸ்திரீகளாலாகவேண்டிய அனேக காரியங்களுக்கு மாமூலைவிட்டு நடப்பதற்கில்லாமல் நாம் விழிப்பது மெய்யே. என்றாலும் இவ் விஷயத்தில் மாமூலை விடுவதற்கு ஆக்ஷேபமொன்றும் காணவில்லை. ஏனெனில் மாமூல் என்பது பதர்ப்பேச்சே தவிர வேறொன்றுமல்லவாதலால், அதையொழித்து ஏதோ சக்திக்கிணங்க நற்காரியஞ் செய்கிறோமென்றால், ஆக்ஷேபிப்பவர் ஒருவருமில்லை. ஆரம்பிக்க முகூர்த்தமும் பார்க்க வேண்டியதில்லை. எல்லா முகூர்த்தங்களும் சுபமுகூர்த்தங்களேயாம். ஆதலால் இனியொரு டிசம்பர்மீ த்தில் இந்த விஷயத்தைக்குறித்துப் பேசத் தருணம் வருவதற்குள் மதிராசிலும், மற்ற பெரிய பட்டணங்களிலுமாவது, இம்மாதிரிப் பிரயத்தனம் நடந்துவருவதாகக் கேட்க வெகு ஆவலாயிருக்கிறோம்.

**ஸ்ரீமகாபாரதம், சரியான பதிப்பு.**

'பன்னியுரைத்திடிலோ, பாரதமாம்,' என்பது நமக்குள் வெகுநாளாய் வழங்கிவரும் பழமொழி. பல திக்கிலிருந்தும், பலகாலத்திலும், வந்துசேர்ந்தகதைகளும், தருமோபதேசங்களும் கூடி, இந்தப்புஸ்தகம் கங்கையைப்போல் பெருகி, நமக்குள் 'உச்சிமேற் புலவர்கொள்ளும்'படி வெகு நாளாக வேதங்களுக்குச் சமதையாக ஐந்தாம் வேதமென மதிக்கப்பெற்றுள்ளது. இந்தக் கிரந்தத்திற்கு ஸ்ரீவியாசபகவான் கர்த்தாவென்று சாதாரணமாய்ச் சொல்லுவதுண்டு. இது பதினெட்டுப் பருவங்களடங்கியதென்றும், லக்ஷம் சுலோகங்களோ, இரண்டு லக்ஷமோ கொண்டதென்றும் வித்துவான்கள் சொல்லிவருவதும் சாதாரணம்.

ஆனால் இந்துஸ்தானத்தில் காணும் பிரதிகளிலொன்றை யெடுத்து, அதை நமது தேசத்திலுள்ள ஓலைப் பிரதிகளிலொன்றுடன் சரிபார்த்தால், இரண்டும் வியாசபகவானுடைய கிருதி யென்றாலும், ஒன்றுக்கொன்று அனேக இடங்களில் பேதப்பட்டுக் காணுகிறது. ஒரு புஸ்தகத்தில் அனேக அத்தியாயங்கள் கூடிக் காணுகின்றன. மற்றொன்றில்சுலோகங்கள் கூடியும், திரிந்தும் காணுகின்றன. 'பருவங்கள் பதினெட்டு,' என்பது கூட நிச்சயமில்லை. ஏனெனில், 'ஹரிவமிசம்' என்பது பதினெட்டில் சேருகிறதில்லை. இதே இப்படியென்றால் சுலோகங்களுக்குக் கேட்பானேன்?

ஆகையால் இப்படிப் பலவிதத்திலும் சூழம்பிப்போய், மலையாளத்தில் 'அவியல்,' என்று சொல்லும் கறிவகையைப்போல், எல்லா தினுசுக் காய்கறிகளும் கலந்து வைத்திருக்கும் இந்தக் கிரந்தத்தை ஜாக்கிரதையாய் விமர்சனம் செய்து, ஸ்ரீவியாச கிருதமானது இது என்றும், பிற்பட்டு வந்தது இது என்றுங் கண்டு, நல்ல பிரதியாக இதை அச்சிடுவது பெரிய புண்ணிய காரியம். இத்தனை காலங்கழிந்த பின் இது எப்படிச் சாத்தியம், என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். ஆனால் காவிய விஷயத்திலும், சாரித்திர விஷயத்திலும் உழைத்து வந்திருக்கும் பெரியோர் மேற் கொண்டால், மொத்தத்தில் இது அசாத்தியமாகாது. உதாரணமாக ஒரு சில்லரை விஷயத்தைப்பார்ப்போம். அர்ச்சுனன் தீர்த்த யாத்திரைப் படலத்தில், அவன் மதுரைக்கு வந்ததாகவும், அவ்விடத்தில் போர் நடந்ததாகவும் கதை சொல்லுவதில், இந்தப்போரை வருணிப்பவர்,

வடுகரெல்லாம் நீளுஎன்பார்,
வன்றமிழர் தண்ணீரென்பார்,
துலுக்கரெல்லாம் பாணியென்று
புலம்புகிறூர் பாளையத்தில்,

என்று எழுதியிருப்பாராகில், இந்தப்பாகம் துலுக்கர்தென்னிந்தியாவுக்குவந்து நெடுநாளாகிய பின்தான் எழுதிச் சேர்த்திருக்கவேண்டுமென்று ஏற்படுகிறதல்லவா? இப்படிப் போலவேமற்றவைகளையும் பரிசோதித்துச் சுமாராகக் கால நிர்ணயம் கண்டு, சுலோகங்களையும், அத்தியாயங்களையும், பருவங்களையும் பரிஷ்காரப்படுத்தி வைக்கவேண்டியது, உடைமைக்காரராகிய நமது முதற்கடமை. ஆனால் நாமோ இப்போது பலவிதத்திலும் நொந்து போயிருப்பதில், நற்காரியமொன்றுக்கும் உதவாதவர்களாயிருக்கிறோம்; புஸ்தகங்களை வசம்புப்பொடி போட்டுக் கட்டிவைத்து விட்டோம். ஏதோ சில மூலைக்காடுகளில் புராணிகர் பாரதம் படிக்கிறார். அவரவர் பிரதி அவரவருக்குச் சரியாக இருக்கிறது. ஒரு பதத்திற்கு நூறு அர்த்தமும், ஒரு வாக்கியத்திற்கு ஆயிரம் அர்த்தமும், சொல்லிக்கொண்டோ, அல்லது சொல்வது சாத்தியமென்று பிதற்றிக்கொண்டோ, காலங்கழித்து வருகிறோம்.

ஆகவே இந்நாட்டில் சம்ஸ்கிருதம், தமிழ் முதலிய பாஷைகளிலும் ஆகவேண்டிய முக்கிய காரியங்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலுமே நடக்கவேண்டியவைகளாயின. அவ்விடங்களில்தான் நமது கிரந்தங்கள் பரிமளிப்பது. அவ்விடத்திய வித்துவான்களுடையவும், தனவான்களுடையவும் முயற்சியால்தான் நமது புராதனக் கிரந்தங்கள் ஜீர்ணோத்தாரம் அடைந்து வருகின்றன. சமீபகாலத்தில் ஸ்ரீ மகாபாரதத்தைப் பரிஷ்காரப் படுத்தவேண்டிப் பிரயத்தனம் நடக்கிறது. இந்தத் தேசம் இன்னும் 'பெருங்காயம் வைத்தபானை'யாயிருப்பதால், இந்தக் காரியத்தில் யாராகிலும் சிலருக்காவது அபிமானமிருக்குமென்றும், அதற்கு வேண்டிய சகாயம் அவர்களால் கிடைக்குமென்றும் நம்புகிறோம்.

**இந்து மகம்மதீயருள் ஒற்றுமை.**

சென்ற ஜனவரி௴ 29 தேதி டில்லியில் இந்தியா மகம்மதீய மகா ஜன சங்கம் வருஷவாரியாகக் கூட்டிற்று. அதில் அக்கிராசனம் வகித்திருந்த ஆகாகான் பஹதூர் அவர்கள் இந்திய ஜனங்களுக்குள் ஒற்றுமை வேண்டியிருப்பதை விவரித்துப் பேசினார். அவர் சொல்லியது:—"சட்ட நிரூபண சபைகளிலும், வேறிடங்களிலும் மகம்மதீயப் பிரதிநிதிகளாய்ப் போகிறவர்கள் கவனிக்க வேண்டியது இது. முதலாவது தாங்கள் இந்தியச் சக்கரவர்த்திக்குட்பட்ட தருமப் பிரஜைகளென்பதும், அதற்குப் பிற்பட்டுத்தான் தாங்கள் மகம்மதீயப் பிரதிநிதிகளென்பதுமே. ஆதலால் இந்திய மகா ஜனங்களுடைய க்ஷேமத்திற்காக எந்தக் காரியமாக வேண்டுமோ அதில் இதர வகுப்பினருடன் கலந்து காரியம்

சீராக நடக்கும்படி பார்க்கவேண்டும். இந்தத் தேசத்தில் வித்தியாப்பியாசம், வியாபாரம், கைத்தொழில், விவசாயம், கனிவருக்கம், கோ ஆபரேஷன், முதலிய சாதனங்கள் பெருக வேண்டியது நம்மெல்லோருக்கும் அவசிய மான காரியம். இவைகளில் இந்து, மகம்மதீய னென்கிற பேதம் ஏற்பட நியாயமேயில்லை, இவைகளைப் பொறுத்தமட்டில் எல்லா வருக் கத்தவரும் சேர்ந்தே உழைக்கவேண்டும். இவைகளொழிந்தபின் மகம்மதீயராகிய நமக் குமட்டும் ஆகவேண்டியவைகளைக் கவனிக்க வேண்டும்.''

இப்படி யிவர் சொல்லியதை நாம் மனப்பூர் வமாய் ஆமோதிக்கிறோம். ஏனெனில் ஒரு பெரிய ரகசியத்தை நாம் ஒருவரும் மறக்கக் கூடாது. மகம்மதீயருக்குப் புண்ணியபூமி அரேபியாவே. காலிப் துருக்கியிலிருப்பதாக வும் வைத்துக்கொள்ளலாம். ஆனாலும் இந் திய மகம்மதீயர் அனேகமாய்ப் பிறப்பில் இந் தியர்களாயும், வளர்ப்பிலும் இந்துக்களுடன் சேரவேண்டியவர்களாயும் இருப்பது பிரத்தி யக்ஷம். அதாவது, இந்துக்களும் மகம்மதீயர் களும் இந்நாட்டிலேயே பிறந்து இறக்கிறவர்கள். ஆகவே ஒருவர் தாக்ஷண்ணியம் மற்றவருக்கு இருந்தே தீரவேண்டும். இருதிறத்தாரிலும் விவேகிகள் இதையெப்போதும் ஞாபகத்தில் வைத்துப் பேசவும், எழுதவும் வேண்டும்.

இவ்விஷயமாக முன்னொருகாலத்தில் அயோ த்தியா நவாப்பாக இருந்த ஷுஜாவுத்தௌலா சொன்னதை நாம் மறக்கவே கூடாதாகையால் அதை எத்தனைமுறை வேண்டுமானாலும் சொ ல்லிக்கொள்ளலாம். 1761-ம்௵த்தில் பானிப் பட்டுச் சண்டையில், மராட்டியர்களும், மகம்ம தீயர்களும் போராடியதில், மகம்மதீயர் வெற்றி யடைந்தார்கள். அந்தக் கக்ஷிக்குச் சேனாதிபதி யான ஆமத்ஷா அப்தலியும், அவருடைய சமஸ் தானப் பிரபுக்களும், அவர்களுக்குச் சகாயமா யிருந்த மேற்சொல்லிய அயோத்தியா நவாப் பும், மறுநாட்காலையில் கூடி, தர்பார் செய்து வருகையில், யுத்தத்தில் இறந்துபோன எதிரி முக்கியஸ்தர்களுடைய பிரேதங்களையும், சிறை பிடிபட்டவர்களையும் சேவகர்கள் இவர்கள்முன் கொண்டுவந்தார்கள். அப்பிரேதங்களில், பேஷ் வாவின் மூத்தமகனாகிய விசுவேசராவுடைய வடிவழகைக் கண்டு ஆப்கானியப் பிரபுக்களில் சிலர் அதிசயித்து, ''இப்பிரேதத்தை க்ஷேமித் துக் காபூல் கண்காக்ஷி சபையில் வைத்து விட லாம்,'' என்ன, ஆமத்ஷாவும் அதற்குச் சம் மதிப்பவர் போலிருந்தார். உடனே அயோத்தி யா நவாப்பு எழுந்து அவரைச் சலாம்செய்து, ''ஐயா, ஒருமனுச் செய்து சொள்ளுகிறேன். இந்தியாவில் யுத்தம் நடக்கும்போதெல்லாம் ஒரு தருமம் வெகு காலமாக நடந்து வரு கிறது. அதாவது தோற்றவருக்குள்ள மரியா தையாம். இப்போது தாங்களும் தங்கள் பரிவாரமும் ஏதோ நாலுநாளைக்கு இங்கிருந்து விட்டுப் போகிறவர்கள். நாங்களோ இவ்விடத் திலே பிறந்து இவ்விடத்திலேயே மாண்டுமடிந்து போகவேண்டியவர்கள். இதைத் தாங்கள் கவ னிக்கவேண்டும். யுத்தம் என்றால் ஜயாபஜயம் ஒருவர் பங்கல்ல. இன்றைக்குத் தோற்றம ராட்டியர்கள் நாளைக்கு மறுபடி நம்முடன் யுத் தத்திற்கு வரலாம். அவர்கள் கையில் நாமும் தோல்வியடையலாம். அப்படி நேரிடும்போது அவர்களுக்கும் இந்த ஞாபகமிருந்தால்,நமக்கெ ன்னகதி? சொல்லவேண்டும். தவிர நமக்கு உயி ருடனிருப்பவர்களோடு விரோதமும்,யுத்தமும் தரு மமே தவிரப் பிராணனையிழந்தவருடன் அன்று. ஆதலால் தாங்கள் தயவுசெய்து இந்தப் பிரே தங்களில் பிரதானங்களாகிய பேஷ்வா மக னுடையதையும், சேனாபதியாகிய சதாசிவராவு டையதையும் என்வசம் ஒப்புவிக்கவேண்டும்,'' என்றுகேட்டு வாங்கிக்கொண்டு, தன் செல வில் அவ்விருவருக்கும் அவர்களுடைய குலமு றையை யனுசரித்துத் தகனம் முதலிய கிரியை களைச் சம்பிரமமாக நடப்பித்தாராம்,

இந்து மகம்மதியர்களில் முக்கியஸ்தர்களே, இந்தப் பழங்கதையை ஞாபகத்தில் வைத்து க்ஷேமமடையுங்கள். அதிகம் சொல்வது அனுவசியம்.

இக்காலத்தில் முப்பது வயது கூடுமுன் 'பதினறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்து,' தேகமெலிந்து, தம்மக்கள் ரயிலில் எல்லாச் சௌகரியத்துடனும், பட்டணம் போய்ப் படிப்பதென்முல் நடுங்கும் ஸ்திரீகள் தம் முன்னோர் முன்னொருகாலத்திலிருந்த வரிசையை அப்போதப்போது சிறிது ஞாபகப்படுத்திக் கொள்ளுதல் நலம். சீதையம்மாள், துரௌபதியம்மாள் முதலியோரை நம்பா விட்டாலும், ராஜபுத்திரர், மராட்டியர், சீக்கர் முதலியவர்களில் கீர்த்திபெற்ற பத்மினி முதலிய பெண்மணிகளின் சரித்திரத்தைக் கேட்டிருப்பவர்களுக்கு நாம் அதிகம் சொல்லவேண்டியதில்லையல்லவா? ஆனல் இவ்வாறு நாம் கேட்டு வருவதெல்லாம் விசேஷமாக 'வடக்கத்திய' சமாசாரமாதலால், தென்னட்டில் பழைய காலத்தில் பெண்களிருந்த வரிசையின்னதென்று அனேகருக்குத் தெரியாமலிருக்கலாம். அவ்வகையோருக்கு உபகாரமாக 'உதயதாரகை'யில் ஒரு நண்பர் எழுதியதையிங்கு வெகு சந்தோஷமாகச் சேர்க்கிறோம். இலங்கை யென்பதை நாம் ராவணுலயமாக வெகு நாளாய் நம்பி வருவதால், இதைப் படிப்பவருக்கு அப்பெண் மக்களில் சிலர், "ராக்ஷசிகள்" என்றே காணலாம். அப்படிக் காணுவதற்குநியாயம் ஒன்றேதான். நாம் அவர்களுடைய குலமக்களாயினும், அவர்களுக்கும் நமக்கும் சில நற்குணங்களில் பேதம் வெகுவாகிவிட்டதென்பதாம். இனியாகிலும் நல்லறிவு அதிகரித்து முன்னுக்கு வர மார்க்கம் ஏற்பட வேண்டும்.

இந்து ஸ்திரீகளின் தைரியம்.

---

## தாயர் துணிவுக்கிலக்கிய சான்றுகள்

சமீபகாலத்து நடந்தேறிய ருஷிய ஜப்பானிய யுத்தத்தில் ஜப்பானிய பெண்கள் காட்டிய தைரியமான செயல்கள் பல உலகமெல்லாம் விதந்து பேசப்பட்டன. தங்கணவர் புதல்வர் முதலியோர் யுத்தகளத்திற்கஞ்சாது செல்லவும், அவ்விடத்துயிர் துரும்பு எனமதித்துப் போர்புரியவும், பல புத்திமதி புகட்டி முன்னேறச் சென்றுரென்றதில் உலகம் எவ்வளவு மதிப்புக்கொடுத்தது. தம் மைந்தரைக் கோழையராக்கும் மாதாமார் இதைக் கவனிக்கத் தக்கது. நம் சாதியின் பூர்வநிலைமையை நன்கறியாத சிலர், எங்குலமகளிர்க்கு அச்சமே எக்காலத்தும் ஆபரண மென்றும், அதுபற்றியே மேலைத்தேசத்துப் பிள்ளைகளிலும் நம் நாட்டுக்குமரர்கள் முன்னேற்றம் பெறவில்லையென்றும் கூறுவர். ஆனல் பழைய இலக்கியங்களுடன் ஊடாடும்போது நமது முற்கால மாதாமார் எவ்வளவு மனவுறுதியோடு பிள்ளைகட்குத் துணிவுறுத்தினரென்பது தெரியவரும்.

போன்முடியார் என்ற பெண்புலவர் கூறிய போதனை பின்னே வருகின்றது:—

"ஈன்ற புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ான்னடை நடக்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கு
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

இதில் "என்றலை" என்பது மாதாவைக் குறிக்கும். "காளை" என்பது மைந்தனைக் கருதும். மற்றையபொருள் வெளிப்படை.

தாயொருத்தி தனது தந்தை தலைவன் என்பார் முன் யுத்தத்திற் பட்டுப்போயும், தனது ஒரேமகனை யுத்தத்திற்கனுப்பினளென ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்மணி கூறிய கவியின் ஒருபகுதியை இங்குக் காட்டுதும்:—

" * * * * * இன்றும்
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வல்கைக் கொடுத்து வெளிதுவி ரித்து உடீஇ
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமக னல்லது இல்லாள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே."

பூங்கணுத்திரை என்ற வேறொரு பெண்புலவர், இன்னொரு வீரத்தாயின் செயலை விவரித்திருக்கிறார். அது வருமாறு :—

"வானக் கூந்தல் முதியோள் சிறுவன் களிறெறிந்து பட்டனனென்னு முவகை யீன்ற ஞான்றினும் பெரி" தாயவட்குத் தோன்றிற்றென்பது.

ஒரு கிழவி தன் மகன் யுத்தத்து யானையாற் கொல்லப்பட்டானென்றதிற் பெற்றபோதிருந்த மகிழ்வினும் பெருமகிழ்வடைந்தாள் என்பது கருத்து.

தன்மகன் போரிற் புறங்கொடுத்தானென்ற சொற்கேட்ட மாதாவொருத்தி, பெருந்திகிலடைந்து, என்பாலுண்டுவளர்ந்த மகன் புறங்காட்டினனென்பது ஐயம், அதைப் பார்த்து வருவேனென்று யுத்தகளஞ்சென்று தனையன் இரு துண்டாய் மடிந்து கிடப்பதைக்கண்டு உவகையுற்றாளென்பது பின்வரும் நச்சோள்ளையார் என்ற மாதுசிரோமணி கூறிய கவியால் அறியலாம்.

'முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
* * * *
கொண்ட வாளோடு படுபிணம் பெயர்த்துச
செங்களத் துழாவு வோள்சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவர் தனளே"

இத்தகைய பல உதாகரணங்கள் நம் இலக்கியங்களில் மலிந்திருக்கக்காணலாம். S. M. K.

## கம்பர் இராமாயணம்பாடி அரங்கேற்றிய வரலாற்றின் ஆராய்ச்சி

ஸ்ரீமான்-ஸி. கே. நாராயணசாமி முதலியார்

(172-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இனி இராமாயணம் பக்தி விசேடத்தாலன்றி ஒன்றிருவர் வேண்டுகோளாற் பாடப்பட்டதல்ல வென்பதற்குப் பிரமாணம் வருமாறு :—

" அரும்பெறன் மணியும் பெரும்பெயரமிழ்துமே நிறையப்பெற்ற பாற்கடல் போலப் பரந்து விளங்குகின்ற இராமாயணமென்னுந் தெய்வவான்பனுவலைக் கம்பர்பாடியதற்குக் காரணம், இவரது ஸ்ரீராமபக்தியேயன்றி வேறில்லையென்பது, இவர்,

" ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிவ்
வேசில் கொற்றத் திராமன் கதையரோ"

எனவும்,

" ஆங்கவன் புகழ்ந்த நாட்டை
யன்பெனு நறவ மாந்தி
மூங்கையான் பேச லுற்று
னென்னயான் மொழிய லுற்றேன்"

எனவும், இராமாவதாரத்துரைத்துப் புகுந்த வாற்றால் நன்கறியத்தக்கது. இவர்,

" முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்தமக் கவிகட் கொன்று ணர்த்துவேன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ"

என்றதும் இக்கருத்தையே வலியுறுத்தும். இவர் வளர்ந்து சிறத்தற்குக் காரணமான சடையவள்ளல் குடிக்கும் இந்த ஸ்ரீராமபக்தி உண்டென்பது, அவ்வள்ளற்குச் "சடராமன்" எனப் பெயரிட்டு வழங்கிய வாற்றால் ஊகிக்கப்படும். அக்குடிப்பரிசயம் இவரது பக்திக்கு ஓர்காரணமாயினும் ஆம். அன்றியும், வான்மீக முனிவர் திருவாய்மலர்ந்தருளியஸ்ரீராமாயணத்தின் திட்பநுட்ப ஒட்பங்களே இவர் காலத்து யாண்டும் பரந்து விளங்கி மேம்பட்டன என்பதும், அக்காலத்தறிஞரெல்லாம் ஸ்ரீராம கதையை அமிழ்

தினும் அதிகமாகமதித்து வந்தனரென்பதும்,

"வைய மென்னே யிகழவு மாசெனக்
கெய்தவும்மிதியம்புவ தியாதெனிற்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகழ்
தெய்வ மாக்கதை மாட்சி தெரிக்கவே"

"நொய்தி னெய்ய சொன்னூக்க லுற்றேனெனை
வைத வைவின் மராமர மேழ்துளை
யெய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே" ()

"வாங்கரும் பாத நான்கும்
வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத்
தேவரும் பருகச் செய்தான்"

* "எரிகட லுலகந் தன்னு
ளின்றமிழ்ப் புலவர்க் கெல்லா
முறுவலுக் குரிய தாக
மொழிந்தனன் மொழிந்த வென்சொற்
சிறுமையுஞ் சிலையி ராமன்
கதைவழிச் செறித றன்ன
லறிவுடை மாந்தர்க் கெல்லா
மமிழ்தமொத் திருக்கு மன்றே"

என இவர் இராமாவதாரத்து வழங்கிய வாற்றால் உய்த்துணரப்படும். இவ்வாறு அறிஞரெல்லாம் ஒருங்கு பாராட்டும் ஸ்ரீராம கதையின் தெய்வமாட்சி இப்பெரும் புலவரது அறிவுடைய நெஞ்சினையும் நன்கு கவர்ந்ததாதலின், அதனையே தமது "செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூறிய தீஞ்சொல் வல்லிய" தமிழ்ப் பாக்களாற்பாடிப் புகழ்நிறுத்துதற்கு ஆசைப்பட்டனர் எனினும் அமையும்.

இவர் இராமாயணத்தைப் பெரும்பான்மை வெண்ணெய்நல்லூரிலும், சிறுபான்மை ஒற்றியூரிலும் இருந்து பாடினரெனவும், ஒற்றியூரிலிருந்தபோது இந்நூலை இரவிலே பாடினரெனவும், அக்காலத்து மாணக்கர் பலர் பிந்தாமலெழுதுவதற்கு அவ்வூர்க் காளியைத் தீப்பந்தம் பிடிக்கப் பாடினரெனவும்,

"தொடை நிரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே" ()

"ஒற்றியூர் காக்க வுறைகின்ற காளியே
வெற்றியூர்க் காகுத்தன் மெய்ச்சரிதை—பற்றியே
நந்தா தெழுதுதற்கு நல்லிரவின் மாணக்கர்
பிந்தாமற் பந்தம் பிடி" (தமிழ் நாவலர் சரிதை)

என வருவனவற்றால் அறியப்படுகின்றன."

அன்றியும், கம்பர், அரவந்தீண்ட இறந்த தில்லை மூவாயிரவர் மகவை யுயிர்ப்பிக்கப் பாடிய மூன்று வெண்பாக்களும், கம்பர் "ஏரெழுபது" என்னும் நூலை அரங்கேற்றுகையில் திருவெண்ணெ சடையவள்ளலுடனிருந்து கேட்ட புதுவைச் "சேதிராயன்" என்னும் ஓர் உபகாரியை விடந்தீண்ட அவர் பொருட்டுப் பாடியதாகக் கம்பர் பாடிய "திருக்கை வழக்க"க் கலியடிகளினொன்றில்,

"..................................பாவலர் தா"
மேரெழுப தோதியரங் கேற்றுங் கயிலைளரி
காரிவிட நாகங் கருக்குங் கை.

எனவும், இதனுக் கெடுத்துக்காட்டி யாகத் "தொண்டைமண்டல சதக"த்தில்,

"அழுவதுங் கொண்டு புலம்பாது
நஞ்சுண் டதுமறைத்தே
ரெழுபதுங் கொண்டு புகழ்கம்பவாண
னெழுப்பவிசை
முழுவதுங் கொண்டாரு
சொற்பேச நெய்யின் முழுகிக்கையின்
மழுவதுங் கொண்டு புகழ்கொண்ட
தாற்றொண்டை மண்டலமே"

என வருவனவற்றால், கம்பர் எதன்பொருட்டு அம்மூன்று பாடல்களும் பாடியிருப்பாரென்பதை அறிவின்மிக்கார் ஊகித்தறிதல் வேண்டும். தில்லை மூவாயிரவர் விஷயமாக இவர் பாடியதற்குத் தக்க சான்றின்மையாலும், ஏரெழுபது விஷயமாகப் பாடியதற்குத் தக்க சான்றுளதாலும், இவை சுத்த அபத்தமென்பதுணரப்படும்.

மேலே விவரிக்கப்பட்டனவற்றால், கம்பர், இராமாயணம் பக்தி காரணமாகப் பாடினரென்பதறியப்படுகின்றதன்றி, மற்றொருவர் வேண்டுகோளாற் பாடப்பட்டதல்ல வென்ப

* இச்செய்யுள் பழைய ஏடுகளிலுள்ளது.

* 'செந்தமிழ்' தொகுதி 3. பகுதி 2.

தறியப்படும். அங்ஙனம் ஒருவர் வேண்டு கோளாற் பாடப்பட்டதெனின், "வில்லிப்புத்தூரர்" பாரதத்தில் அவர் குமாரர் "வருந்தருவார்" பாடிய பாயிரத்தில் "வக்கபாகை கோங்கர்குல வரபதியாட்கோண்டான்" என்னும்பிரபுவின் வேண்டுதலின்படி வில்லிப்புத்தூரர் பாரத விருத்தம் பாடினரென்பதை,

"பிறந்துய்யக் கொண்டவனிப் பேருலகம்
பெருவாழ்வு கூறு நாளி
னிறைந்தபுகழ்ச் சனிநகர்வாழ் வில்லிபுத்தூ
ரனைநோக்கி நீயும் நானும்
பிறந்ததிசைக் கிசைநிரப்பப் பாரதமாம்
பெருங்கதையைப் பெரியோர் தங்கள்
சிறந்தசெவிக் கமுதமெனத் தமிழ்மொழியின்
விருத்தத்தாற் செய்க வென்றான்"

எனக் கூறியதுபோல இவரும் இராமாயண காவியத்தில் எங்கேனும் ஓரிடத்தில் குறித்திருக்க வேண்டுமே? அங்ஙனமேனில்லை? இக்காரணங்களாலேயே விநோதரஸமஞ்சரியிற் கூறப்படுகிற "கம்பர் இராமாயணம் பாடியரங்கேற்றிய வரலாறு" சுத்த கற்பனைக் கிடமாமென்பதை உணர்ந்து கொள்க.

அன்றியும், விநோதரஸமஞ்சரி முதலிய நூற்களிற் கூறப்படுகிற இராமாயணம் பாடிய வரலாற்றின் உண்மைகள் மேலே விவகரிக்கப்பட்டதல்லாமல் பின்னும் ஆழ்ந்து விசாரிக்கப்புகின் பல ஆட்சேபங்களும், கம்பர்மேல் பழிபாவங்களுமேற்படுகின்றன. அருட்கவியாகிய கம்பர்பேரில் அகாரணமாக இங்ஙனம் பழி சுமத்தத் தொடங்கிய தென்னையோ? "குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கோண்ட" கதையொப்ப கம்பர்பால் பெருமை கற்பிக்கத் தொடங்கியோர் இழிவையே தேடிவைத்தனர் என்னலாம். 'ஆராயாது செய்கருமங்களெல்லாம் முடிவில் இழுக்கையே தருமன்றோ? இது பற்றியே,

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு."

எனப் பெரியாரும் பணித்தனர். முஹூர்த்துமாக்களுடைய சரித்திரங்களை உலகத்திற்கு வெளிப்படுத்தும் மேதாவியர் செவ்வனே பரிசீலனை செய்து வெளிபிடுவதன்றோ புகழ்ச்சிக்குரியதாகும். அங்ஙனமின்றி உண்மைக்கு விரோதமாய் ஒழுங்கீனமாகவிருந்தால் வெளியிடமுற்பட்டவர்கட்குச் சரித்திர ஞானமே கிடையாதென்றல்லவோ நினைக்க வேண்டியதாகின்றது. நிற்க.

இனிக் கம்பர் விஷயமாக வெழும் ஆட்சேபங்களையும் பழிபாவங்கள் நேருவதையும் முக்கியமான சில விஷயங்களால் விளக்கி எடுத்துக்கொண்ட வியாசத்தை இனிது முடிப்பாம்.

கம்பரானவர் தனக்குத் தந்தை யொப்ப அன்ன வஸ்திராதிகளைத் தந்தாதரித்துக் கல்வி கற்பித்து மணவினையாதிகளை முடித்து ஆபத்துக்கெல்லாம் அருந்துணையாக விருந்து காத்த சடைய பிள்ளையின் விழைவைச் சட்டை செய்யாதவராயிருந்தபோதே,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னு மிலக்கணத்திற்கு இலக்காயினர். இஃதிங்ஙனமாக அச்சடையபிள்ளை சோழராசன் முன்னிலையிற் சொல்லுவித்தும், அதனையுங் கடந்தவராய்ப் பின்னிருவரு நேரிலழைத்துக் கேட்டபோது,

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்பதைத் தானேநதியிருந்தும் பேசியபொய்,

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்றபடி யார்க்கென்ன தீங்கை யொழித்து நன்மையைத் தந்தது? அப்பொய்யில் பிறருக்கொரு நலமில்லாதபோதே தனது சுப நலத்தைக் கருதிக்கூறிய பொய்யாகித் தன்னையே சுடுமென்பதற்கையமென்னை? இதனாலன்றோ தேவர்,

"உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்"

எனமீண்டும் வற்புறுத்திக் கூறினர். இத்தகைய செய்ந்நன்றி மறக்கும் பொய்யருக்குக் கலைவாணியின் கடாக்ஷ மிருப்பதென்பதியாங்ஙனம்?

அல்லாமல், அரசன் அக்காவியத்தை விரைவிற்பாடி முடிக்கக் கம்பரையும் ஒட்டக்கூத்தரையும் நியமித்தானாயின், அதனைப் பப்பாதியாகப் பகிர்ந்து தந்து, "கந்தப் புராணச் சப்த காண்டங்க"ளையும் "கச்சியப்பசிவாசாரி"யருங் "கோனேரியப்பநாவ"லரும், "காஞ்சிப் புராண வுபயகாண்டங்க"ளையுஞ் "சிவஞான சுவாமி"களுஞ் "கச்சியப்பமுனிவரும்" பகிர்ந்து கொண்டு பாடியதுபோலப் பாடச் செய்தல் விதி. அவ்வாறின்றித் தனித்தனிப்பாடச் செய்தானென்பதற்குக் காரணம் யாது?

கம்பர் தாம் பேசிய பொய்க்கிணங்கப்பாடி வந்த சேதுபந்தனப்படலத்தினோர் பாட்டில் "துளி" என்னும் பதத்திற்கு ஆகுபெயராய்த் "துமி" எனப் பிரயோகித்திருப்பதில் கூத்தனுரையங்கொண் டாக்ஷேபித்தன ரென்றால், இத்தகைய பிரயோகங்கள் பலவிலக்கிய நூல்களில் "எதுகை"யின் கண்ணும், "மோனை"யின் கண்ணும் இன்னும் பல சீரின்கண்ணு மெத்தனையோ கண்டுந் தாமே கையாடியுமிருக்கு மவருக்கு அதிற் சந்தேகம்வந்தது மிகவாச்சரியமே. அன்றியு மித்தகைய விகற்பங்கள் தானேதியுள்ள "சிந்தாமணி" முதலிய காவியங்களிலேயே செப்பரிதா யுள்ளன. இவை சுட்டும் விதியோ எல்லா விலக்கண நூல்களினு மெண்ணிலவாயுள. இத்தகைய வோரற்ப காரியார்த்தமாக "கலைமகளார்" ஒரிடைச்சியாக விடையர் சேரியின்க ணெழுந்தருளி அச்சந்தேகத்தினைத் தீர்த்து, அதனினு மிகவாச்சரியமே. இத்தமிழ் நாட்டின்கண் ணுள்ள இலக்கிய நூல்களில் இத்தகைய பிரயோகங்கட்கெல்லாம் கலைமகளார் வந்துதான் கண்டிறக்கவேண்டும் போலும்.

கம்பரைத் தேவவருளாற்பாடும் "வரகவி"யெனக்கருதி யஞ்சிக் கூத்தர் தாம்பாடிய இராமாயணத்தைக் கிழித்தெறிந்தன ரென்றால், இப்புவியிலிதுகாறு மெத்தனையோ வரகவிகளிருந்து பாடிய பாக்களைக்கண்டு பயந்து எத்தனைபே ரெத்தனை பிரபந்தங்களைக் கிழித்தெறிந்தார்கள்? இடையில் வெறிபிடிக்கப்பட்ட வித்துவான்களுங்கூடத்தாம் பாடிய பாக்களைக் கிழித்தெறிய மனங்கொள்ளார்களே. அப்படியவருண்மையாகக் கடல்காண் படலம் வரையிற்பாடி யிருந்தும், கம்பரதற்குமேல் சேதுபந்தனப் படலம் வரையிற் பாடி யுள்ளேனெனப் பொய்சொல்லிப் பின்னர் பாடிவந்த அப்படலத்தில் தாம் "துமி" என்பதற்குப் பொருள்தெரியாது மயங்கி, அது முன்னிலையிற் கம்பர் கலைவாணியி னருள்பெற்ற வரகவியெனத்தெரிந்து கொண்டாரேல், அப்போதேயன்றோ தாம் பாடியவரையிற் கிழித்தெறிதல் வேண்டும். அப்பா லாறுமாதம் வரையிற் கஷ்டப்பட்டு முன்பாடிய ஐந்துகாண்டச் செய்யுள்களைக் கொள்ளற்பாலன வாகிய மற்றையிரண்டு காண்டங்களை ஏனவர்வீணே பாடல் வேண்டும்?

கம்பரது கவிக்கெதிரே நமது கவி கவின் செய்யமாட்டாதெனக் கிழித்தெறியத் தலைப்பட்ட கூத்தர் "நானூறு காண்டமே பாடியேழாவதற்கிதனை வைத்துக்கொள்ளுகிறேன்" என அவ்வுத்தரகாண்டத்தைக் கம்பர் கேட்டபோது அப்படியே செய்யுமென்று கூறிக்கொடுத்தாரெனில், தமது கவி அவர்கவிக்குமுன் தாழ்ந்து போமென் றுட்கினவர், எப்படி யதிலொருகவி யெனுங் கொடுப்பர்? உடனே கிழித்தெறிந்தனவற்றையும் பொறுக்கிச்சேர்த்து அவர்கண்முன் தானே நெருப்பிலிட்டுத் தீய்த்திடுவரன்றோ? அந்தோ! இவைகளையெல்லாம் அறிவின்மிக்கார் யோசிக்குமிடத்து நம்பத்தக்கனவாமா?

—

## இந்தியா எப்படியுண்டாயிற்று?

ஸ்ரீமான்-கோள கோவிந்தன் எம். ஏ.

புராணக் கதைகளிலும், சாமான்னியப் பேச்சிலும், நாம் வசிக்கும் இப்பூமியைச் சில சமயங்களில் பூராவாயும், வேறு சமயங்களில் அரைகுறையாயும், சமுத்திரம் விழுங்கிவிட்டதாகவும், அதனால் பிரளயமுண்டானதாகவும் கேட்டிருக்கிறோமல்லவா? தவிர, அகஸ்திய முனி வெகு சிறிய உருவம் படைத்தவராதலால், ஒருக்கால் விந்திய பருவதத்தைக் கடக்கமுடியாமல் அதைச் சற்றுத் தாழ்ந்திருக்கும்படிக் கேட்டதாகவும், அப்பருவதமும் அதற்குச் சம்மதித்துத்தாழ, முனிவர் அதைக் கடந்துவந்து நின்று, "ஓ, பருவதமே, தெற்கே ஒரு காரியமாகப் போகிறேன், திரும்பி வருமளவும் நீ இப்படியே இரு," என்று சொல்லிப்போனதாகவும், நாளதுவரை திரும்பிவராததால் விந்தியம் இன்னும் அப்படியே தாழ்ந்திருப்பதாகவும், ஒரு கதை கந்தப் புராணத்தில் படித்திருக்கிறோம். அப்படியே மலையாளத்திய பூமி முன்னொரு காலத்தில் கடலிலமிழ்ந்திருந்ததாகவும், பரசுராமனுக்குத் தன் மதியீனத்தினால் ஒரு சந்தர்ப்பத்தில் இருக்க இடமில்லாமற் போகவே, மேற்குக் கணவாய் மலைமேலேறித் தன் கையிலிருந்த பரசுவை (கோடாலியை) எறிந்து அது போய் விழுந்த எல்லைவரையிலும் சமுத்திரத்தை விலகியிருக்கும்படி உத்தரவளிக்க, அதுவும் அப்படியே இடைந்து சென்று, இக்காலத்திலுள்ள மலையாளிமாருக்கும், பட்டன்மார் முதலியோருக்கும் சுகமாய் வசிக்க இடமுண்டாயிற்றென்று கேரளோற்பத்தி புராணத்திற் காணுகிறது.

இப்படியெல்லாம் ஆங்காங்கு காணுங்கதைகளுக்கு என்ன அர்த்தமென்று நாம் யோசிக்க வேண்டும். தீர்க்கமாய் ஆலோசிக்குமிடத்து இது வாஸ்தவமென்று விளங்கும். அதாவது, எப்படி மனிதராகிய நமக்குச் செல்வமும் தரித்திரமும் மாறி வருகின்றனவோ, எப்படி, "எழுநிலை மாடங் கால் சாய்ந்துக்குக் கழுதை மேய் பாழாயினும், ஆகும்" என்று தெரிகிறதோ, எப்படிச் சேர சோழ பாண்டியராகிய தமிழ்நாட்டு மூவேந்தரும் எவ்வளவோ செழித்தோங்கி, ராஜ்ஜியபாரஞ்செய்து, இக்காலத்தில் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விட்டனரோ, எப்படி முற்காலத்திலிருந்த புற்பூண்டுகளிலும், பக்ஷிமிருகாதிகளிலும், அனேகவகைகள் அடியோடு அற்றுப்போய் அவற்றின் எலும்புகள் மட்டும் இங்குமங்கும் காண்கின்றனவோ, அதுபோலவே நாம் வசிக்கும் இப்பூமியும் அடிக்கடி உருமாறுகிறதென்பதேயாம்.

இதற்குச்சாக்ஷியம் வெகு சுலபம். நதிகள் போக்கு மாறியும், சமுத்திர நீர் கரையெறிந்தும், எட்டிப்போயும், ஜனங்களுக்குக் கஷ்டத்தையோ சுகத்தையோ விளைவிப்பது இக்காலத்திலும் பிரத்தியக்ஷமே. சில சமயங்களில், பூகம்பங்களாலும், எரிமலையின் உற்சாகத்தினாலும், பெரிய அனர்த்தங்கள் விளைந்து, பூமிதேவி தன் பெருவாயைத்திறந்து அகப்பட்டயாவையும் விழுங்கி விடுவதும், அப்போதப்போது நமது காதில் விழுந்து வருகிறது.

இதனால் நாம் வாசஞ்செய்யும் இந்தியாவானது இப்போது படத்திற் காணுவது போலவே எக்காலத்திலுமிருந்ததில்லையென்பதை நிச்சயமாகக் கொள்ளலாம். இப்படி மாறி வருவது நிச்சயமென்றால், அதற்குக் காரணங்களையும், அக்காரணங்களால் அவ்வித மாறுதல்களுண்டாகும் கிரமங்களையும், அறிந்துகொள்வது வெகு அவசியமாயாக வேண்டிய காரியம். பூகம்பத்தினால் நமது வீடுவாசல் முதலியவையெல்லாம் நடுங்கும்போது, ஆதிசேஷனோ, திக்கு யானையோ, சிரமத்தைப் பரிகரித்துக்கொள்ளுவதாகச் சொல்லுவது இனிமேல் நமக்கு அழகல்ல.

நாம் வீடுவாசல்களைக் கட்டி, வயல், வாய்க்

OFFICE OF THE ... REGISTERED 7 - APR 1910 MADRAS.

கால், தோட்டம், துரவுகளை உரிமையாக்கிக் கொண்டு, "சந்திராதித்தியருள்ளவரை, புத்திர பௌத்திர பாரம்பரியமாய், தானாதி விக்கிரயங்களுக்கு யோக்கியமாய், அனுபவித்து வரும்" இப்பூமியானது ஒரு பெரிய கோளம், என்றால் உருண்டையென்பதும், அதை நாம் பிரதக்ஷிணஞ்செய்து எங்கே பார்த்தாலும், மேற்பரப்பில் நாம் காணுவது நிலம், நீர் என்று இருவகைப்பட்டிருக்கிற தென்றும் எல்லோரு மறிவார்கள். ஆனால் சுரங்கமுண்டாக்கிப் பூமிக்குள்ளேயே போய்க் கொண்டிருந்தால் போகப் போக எப்படியிருக்கு மென்பது அனேகருக்குத் தெரியாது. ஆதலாலிது விஷயத்தில் அனுபவமுள்ளவர்கள் சொல்லுவதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். அதாவது, நாம் போகப் போக உஷ்ணமதிகரிக்கிறதென்றும், அப்படி உஷ்ணமதிகரித்துவரவே, சுமார் 50 மைல் தூரம் ராமபாணம்போல உள்ளேயே போய்க்கொண்டிருந்தால், நிலம், நீர் என்னும் உருக்கள் மாறிக்கல்லும் உருகி, எல்லாம் ஒரே குழம்பாகக் கொதித்துக்கொண்டிருக்கிற தென்றும், அப்படிக் கொதித்துக்கொண்டிருக்கும் கற்குழம்பே சில சமயங்களில் எரிமலைவாய் வழியாக நாலு புறத்திலும் வழிந்து பெருங்கேடு விளைவிக்கிற தென்றுஞ் சொல்லுவதை நாம் நம்பவேண்டும். இம்மாதிரி விஷயங்களை விசாரஞ் செய்வது ஓர் புதியதத்துவம். அதற்குப் "பூகோளதத்துவம்" என்றோ "பூகோளரகசியம்" என்றோ பெயரிடலாம்.

இந்தத்தத்துவ மூலியமாய் நாம் பல ரகசியங்களை யறிகிறோம். ஆனால், அவற்றுள் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது இது. பூமியில் எங்கே பார்த்தாலும் மேடும்பள்ளமுமாகவும், கிழவன் முகத்தில்விழும் திரைகளைப்போல் வரிசை வரிசையாகவும் காணும் மலைத் தொடர்ச்சிகளென்னும் பெருந்திரைகள் ஆங்காங்கு காணுவதற்கும், இவை அப்போதப்போது கிடை மாறிப்போவதற்கும், காரணமாவது, நாம் மேற்கூறியபடி நமது காற்கீழ் ஐம்பது மைல் தூரத்தில் சார்வ காலமும் கொதித்துக் கொண்டிருக்கும் குழம்பின் வைபவமேயாம். இக்குழம்பு உள்ளே கொதித்துக்கொண்டும், அத்துடனிருக்கும் ஆவி வெளியே போகவேண்டியுமிருப்பதில், அதுதான் பூமியின் மேல் பரப்பாகிய நமது வாசஸ்தானத்திற் குண்டாகும்சகல அனர்த்தங்களுக்கும்காரணமாகிறது ஆகவே இப்பெருங் குழம்புதான் ஆதிசேஷன் திக்குயானை முதலிய யாவற்றையும் உருக்கிவார்த்ததோர் பெரிய மிருத்தியுவென்னலாம்.

அன்றியும் இதுகாரணம்பற்றியே இப்பூமண்டலம் எவ்விடத்திலும், எக்காலத்திலும், அசைந்துகொண்டேயிருக்கிறது. ஆதலாலிதற்குத் 'தரை'யென்றால், அழிவற்றும், அசைவற்றும், ஸ்தாவரமாயிருப்பதாகப் பெயரிடுவது பிசகு. ஏனெனில், இப்போது சமுத்திர மூடியிருக்கும் அனேக இடங்கள் காலக்கிரமத்தில் திடராகியும், இப்போது தரையாகி மனிதர் வாசஞ்செய்யும் இடங்கள் முன்னொருக்கால் துவாரகாபுரியை விழுங்கியதுபோல் சமுத்திர ராஜன் வந்து தன் அலைகளால் மோதி விழுங்கியும், இருப்பது எக்காலத்திலும் பூமிக்குள்ள இயல்பாம். ஆதலால் ஓரிடத்தில் நயமும், ஓரிடத்தில் நஷ்டமு மாறி மாறியே வருகின்றன. அதாவது, ஓரிடத்தில் மலை முதலியன உற்பத்தியாவதாகவும், மற்றோரிடத்தைச்சமுத்திரம் விழுங்கிவிட்டதாகவும் நாம் சாதாரணமாய்ச் சொல்லிக்கொள்ளுவது ஒருவாறு வாஸ்தவமேயாம்.

இதற்குக் காரணம் இப்போது விளங்கும், நாம் மேற்கூறியபடி நமது கோளத்தின் மத்தியிலுள்ள குழம்பும், ஆவியும், இடைவிடாமல் தம்மிடத்திலுள்ள கனலைச் சுற்றிலுமுள்ள ஆகாசவெளியில் வீசி வருவதில், அதனால் அவற்றின் உருச்சுருங்கிப் போவதாம். கோளத்தின் உள்ளிருக்கும் பதார்த்தம் சுருங்கவே, அதைச் சுற்றி எல்லாப்

புறத்திலும் காணும் கெட்டித்தரையும் அதற் கேற்கச் சுருங்கி,மேடும்பள்ளமுமாக மாறிமாறி வருகிறது. தேகத்தில் ரத்த புஷ்டி குறைந்தால் முகத்திலும் அங்கங்களிலும் திரைகளுண்டா வது போலவும், அல்லது எலுமிச்சம் பழத்தை வாடவைத்தால், அதிலுள்ள ரசம் வற்ற வற் றச் சுளை சுருங்க, அதை யொட்டி மேற்றோ லும் சுருங்கியே தீரவேண்டியிருப்பது போல வும் என்றறிக.

பழம் சுருங்கியபின் அதன் தோலைப்பார்த் தால், சில இடங்களில் வரப்புபோல் உயர்ந்தும், சில இடங்களில் உழவுத்தாரைபோல் வாய்க் கால் படிந்தும் கிடக்கிறது. இதுபோலவே இப்பூகோளம் சுருங்குவதில் அதன் கெட்டித் தோலாகிய தரையில் பலவிடங்களில் மலைத் தொடர்களென்னும் வரப்புகளும், பள்ளத்தாக் குகளென்னும் உழவுத்தாரைகளுமாகின்றன.

இம்மாதிரி மாறுதல்கள் இந்தியாவிலேயே தற்காலம் சாதாரணமாய்க் காணலாம். செங் கற்பட்டுக்குக் கிழக்கில் சுமார் 18-மைல் தூரத்திலிருக்கும் "மகாபலிபுரம்" என்று வழங்கும் "மாமல்லபுரம்" இதற்கு நல்ல சாக்ஷி. முன்னொருகாலத்தில் அவ்விடத் தில் யாரோ தனவான்கள் கட்டிய கோயி லைப் பிறகு காலக்கிரமத்தில் சமுத்திரம் விழுங் கிவிட்டது. உடனே அந்தத் தெய்வ விஷ யத்தில் பக்தியுள்ளவர்கள் அந்த இடத்தை விட்டு அரைமைல் தூரம் பின்னிடைந்து முன் போலவே கோயிலை மறுபடி கட்டினார்கள். அக்காலத்தில் சமுத்திரம் இப்புதுக்கோயிலை அடுத்து மோதிக்கொண்டிருக்கவேண்டும். ஆனால் இதுவும் ஸ்திரப்படவில்லை. ஏனெ னில், தரை சிறிது சிறிதாக உயர்ந்தது. அவ்வ ளவிற்குச் சமுத்திரம் கோயிலைவிட்டு எட்டிப் போகவேண்டியதாயிற்று. ஆகவே முந்தியிருந்த கோயிலும் கிரமமாக ஒங்கிச் "சமுத்திர கிரக ணம்" நீங்கி, இப்பொழுது யாரும் போய் வழி படும் வண்ணம் இருக்கிறது. ஆனால் துவஜஸ் தம்பத்தைமட்டும் இன்னும் சமுத்திரத்தின் அலைகள் மோதிக்கொண்டு பழங் கதையைக் கேட்போருக்கெல்லாம் சொல்லுபவைகள்போ லிருக்கின்றன.

மற்றொரு சாக்ஷியம் வேண்டுவோர் ராமே சுவர யாத்திரை போதல் வேண்டும். அவ் விடத்தில் ராமேசுவரத்தீவில் ஸ்நான கட் டத்தில் ரத்னாகர மென்னும் இந்து மகா சமுத்திரத்தின் நீரும், பங்காளக்குடாவின் நீரும் சங்கமமாகும் புண்ணிய ஸ்தலத்தில் இத ற்குச்சாக்ஷியம் காணலாம். தனவான்களான நாட்டுக்கோட்டைச் செட்டிமார், யாத்திரிகர் களுடைய சௌகரியத்திற்காக முற்காலத்தில் ஸ்நான கட்டமாயிருந்த இடத்திற்கருகில், ஒன்றழிய மற்றொன்றாக மூன்று தரும சத்தி ரங்கள் முறையே கட்டினார்கள். ஆனால் மூன் றும் சமுத்திரத்தின் அலைகள் மோதிப் பாழா கிக் குட்டிச்சுவர்மட்டுமே நின்றிருக்கின்றன. ஆகவே, மேற்கூறிய இரண்டு மகா சமுத்திர ங்களும் கைகுலக்க வேண்டியதில், அதற்கு இட றுகட்டையாகக் கிடந்த கோவணம்போன்ற இப்பூமிக்குண்டான மாறுதல்களை நாம் எளிதி லறியலாம். சுமார் ஐம்பது வருஷத்திற்கு முன் இச்சத்திரங்களிலொன்று அக்காலத்திய ஸ்நான கட்டத்திற்கு அடுத்திருந்தது. இப் பொழுதோ வென்றால், ஸ்நானகட்டத்திற்கும் இதற்கும் 15-மைல் தூரமாகிவிட்டது! சுற்றி லும் மணல் நிறைந்த வெறும் பரப்புதவிர வேறொன்றுமில்லை!

இதுபோலவே இந்தியாவின் மேற்கிலுள்ள மலையாளக் கரையிலும், இப்போது காயல்களுக் கும் அரபி சமுத்திரத்திற்கும் இடையில் திடர் கள் அனேக இடங்களில் காணுகின்றன. இவை யெல்லாம் முற்காலத்தில் நீரிலமுந்தி, அரபிக் கடல் இடையறாது மலையாளக் கரையை மோ திக்கொண்டிருந்திருக்கத்தான் வேண்டும். இத் தியாதி காரணங்களால், தரையென்பது பல




மஹாபலிபுரம்—கோயில் பீமரதம்




மஹாபலிபுரம்--கடற்கரையிலுள்ள கோயில்

முறை ஆங்காங்கு நீரிலமுழ்ந்தியும், திடராக உயர்ந்தும் வந்திருக்கிறதென்பது நிச்சயம்.

ஆனால் சிலர் ஆக்ஷேபிக்கலாம். "தரையென்பது கெட்டியாகவும், சாதாரணமாய் ஸ்தாவரமாயுமிருக்க, அதை என் உயருகிறதென்றும், தாழ்கிறதென்றும் சொல்லவேண்டும்? சமுத்திர நீரோ எப்பொழுதும் அலைத்துக் கொண்டேயிருக்கிறது. ஆனதுபற்றி அந்த நீரைத்தான் பொங்குவதாகவும் இழிவதாகவும் சொல்லுதல் தகுதி," என்று. இந்த ஆக்ஷேபம் சாமன்னிய ஜனங்களுக்கும் சரியென்றே காணும். ஏனெனில் யுகப்பிரளயம் முதலிய பெரிய விநாச காலத்தில் சமுத்திரம் பொங்கிப் பூமியை முற்றும் விழுங்கி விடுவதாகவே புராணக் கதைகளில் எல்லோரும் கேட்டிருக்கிறார்கள்.

ஆனால் நமது தத்துவம் அனுபோகத்தை யாதாரமாகக் கொண்டிருப்பதால், அதற்கும் இதற்கும் ஒவ்வாது. ஏனெனில், சமுத்திரம் பொங்கிற்றென்றும், அதனால் ஹிமாசலத்தில் தற்காலத்திய சமுத்திர மட்டத்திற்கு மேல் $5\frac{1}{2}$-மைல் உயரங்கூடிய பெருஞ்சிகரமாகிய கௌரீ சங்கரப் (எவரஸ்டு சிகரம்) பருவதம் முழுகிற்றென்றும் வைத்துக் கொள்ளுவோம். இப்படியாவதில், அப்பருவதத்தின் அருகில்மட்டுமே ஜலம் பொங்குவது சாத்தியமன்று. பூமியில் எங்கே பார்த்தாலும் ஜலம் ஒரே மட்டமாகத்தானிருக்கப் பார்க்குமாதலால், இந்து மகா சமுத்திரம் பொங்கினால் அந்த நீர் நாலா பக்கத்திலும் பெருகி மற்ற சமுத்திரங்களோடு கலந்து ஒரு மட்டமாகித் தீரவேண்டும். ஆதலால் ஹிமாசலத்தை முழுக்கடிக்கவேண்டுமானால், பூமிதேவிக்குப் பாவாடையாகிற சமுத்திரங்களனைத்தும் இப்போதிருப்பதை விட $5\frac{1}{2}$-மைல் உயரமாகிக் கூடவேண்டும். அவ்வளவு ஜலம் எங்கிருந்தோ யுகாந்தத்தில் வந்து, "ஆபத்துக்குச் சிலேஷ்மமுதவுவது போல்," உதவுவதாகவே வைத்துக் கொள்ளுவோம். மறுபடி யிவ்வாறு பூகோளத்தில் தரைகாணவேண்டுமானால், இந்தச் சலமெல்லாம் எவ்விதமாக வற்றிப்போவது? சூரியஉஷ்ணத்தினால் ஆவியாகப் போவதென்றால், எப்படி? சமுத்திரத்திலிருந்து ஆவியாகக் கிளம்பும் ஜல அணுக்கள் மறுபடியும் உயரப் போகப் போகக்குளிரினால் இறுகி மழையாக விழுந்து "ஆகாசத்திலிருந்து விழும் நீரானது மறுபடி சமுத்திரத்தையே போய்ச் சேருகிறது," என்கிற நியாயப்படி யடைவதினால், இந்த மூலமாய் அவ்வளவு நீரும் குறைவது அசாத்தியம். ஆதலால் யுக்திவாத மாகவாவது அல்லது அனுபோகத்தினாலாவது, இதற்குச் சமாதானஞ் சொல்லுவதற் காகாது. புராணக்கதையென்றால் சுலபம். யாரோ ஒரு மகரிஷி, அகஸ்தியரோ, வாமதேவரோ, அத்தனை நீரையும் ஆபோசனஞ் செய்துவிட்டாரென்று முடிக்கலாம். அதை நம்மவர் யார் இக்காலத்தில் ஒப்புவார்கள்? ஆதலால் இந்தக் கக்ஷி கூடாததாக, நாம் முற்சொல்லியபடி, ஸ்தாவரமென்னும் இத்தரையே சமுத்திரமட்டத்தை மீறியுயர்ந்தோ, அல்லது தாழ்ந்தோ, வருகிறதென்றும், அவ்வாறு செய்வதில் புதிதாகத் தரையும், சமுத்திரமுமுண்டாகிறதென்றும் நாம் நிச்சயிக்கிறோம்.

ஒருமுறை யிவ்வாறு தரையில் ஏதோ ஒரு பாகம் நீரிலமிழ்ந்து விடுவதாக வைத்துக் கொள்ளுவோம். இப்படியானதும் அதையடுத்துள்ள பிரதேசங்களிலிருந்து பெருகும் நதிகள், வண்டலையும், அத்துடன் அப்பிரதேசத்திய புற்பூண்டுகளையும், பக்ஷி மிருகாதிகளையும், விடாமல் அடித்துக்கொண்டு போய்ச் சேர்த்துவருகின்றன. இவையெல்லாம் இந்தப் பள்ளத்திலமிழ்ந்து காலக்கிரமத்தில் திடர்களுண்டாகின்றன. அப்படித் திடர்களுண்டாகிச் சமுத்திரத்தின் அலைகளால் இவற்றிற்குச் சலனமில்லாமற் போகுங்கால், நாம் இத்திடர்களைப் பரீக்ஷித்து, வண்டல் இன்ன

வகை யென்றும், புற்பூண்டு, பசுபக்ஷிமுதலியவை இன்னின்ன இனங்களைச்சேர்ந்தனவென்றும், மற்றும் அனேக விசித்திர வினோதங்களையும் காணலாம். இப்படியொன்றுமில்லாவிட்டால், அந்தப் பிரதேசம் சமுத்திரமட்டத்திற்குத் தாழவேயில்லை யென்றும், அதாவது அதைச் சமுத்திரம் ஆக்கிரமிக்கவில்லையென்றும், ஊகிக்கலாம்.

ஆதலால், பூமியில் எப்பிரதேசத்திலுமுள்ள பாறைகளையும் அவற்றுளமர்ந்து காணும் பழஞ்செடிவர்க்கம், பழைய மிருகவர்க்கம், இவைகளையும் பரிசோதித்துப்பார்த்து அப்பிரதேசம் சமுத்திரத்தில் எப்பொழுதாவது ஆழ்ந்திருந்ததுண்டு, இல்லை, என்பதை நிஷ்கரிஷை செய்துவிடலாம். இந்தியாவில் இருவகைப் பிரதேசங்களுமுண்டு. இவைகளை ஜாக்கிரதையாய்ப் பரிசோதித்து வருவதில், படிப்படியாக இந்தியாவின் உருவம் மாறி வந்திருப்பது தெளிவாகிறது. ஆனால் பரீக்ஷையேதோ இங்குமங்கும் சில இடங்களில்மட்டும் ஆகியிருப்பதாலும், அதுவும் நுனிப்புல் மேய்வதென்னும் நியாயப்படி யிருப்பதாலும், தற்காலம் நாம் சொல்லக்கூடியவைகள் எல்லாம் வாஸ்தவத்தில் அப்படியேதானிருந்திருக்க வேண்டுமென்று பிடிவாதமாகச் சாதிப்பதற்கில்லை. சாக்ஷியங்கள் அவ்வளவுதூரம் உறைப்பானவையல்ல.

என்றாலும் இருப்பவைகளைக்கொண்டு ஒருவாறு முன்னொரு காலத்தில் இந்தப் பரதகண்டம் எப்படி யிருந்ததென்றும், பின்னிட்டுப் படிப்படியாக எவ்வாறு மாறிப்போய்க் கடைசியாய் நாம் இப்போது படத்திற்காணும் உருவம் அதற்குக் கிடைத்ததென்றும் சொல்லலாம். இந்தப்படிப்பு நமக்கு எவ்வெவ்விதத்தில் உபகாரமாகுமென்றும், என்ன பலனைக் கொடுக்கு மென்றும் நாம் அடுத்த முறை விசாரிப்போம்.

---

## பிராசீன ஜாதியாரின் நாகரீகம்

### பூர்வவிருத்தாந்தி

#### முன்னுரை

உலகம் தோன்றியகால முதற்கொண்டு, இப்பரந்த பூவுலகின்கண், ஆங்காங்கு வசதியாயுள்ள பலவிடங்களில் வாழ்ந்து காலங்கழித்த பிராசீன ஜாதியார் பலராவார். என்றாலும், அநாகரீகமாகிய பெரும் அந்தகாரத்தில் உலகமுழுவதும் மடங்கிக்கிடந்த பண்டைக்காலத்தில், நான்கு ராச்சியங்களே மலைமேலேற்றிய தீபங்களைப்போல விளங்கி நாகரீகத்தால் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவை, நீலநதிப் பிரதேசத்திலிருந்த எகிப்து ராச்சியமும், தைகிரிஸ்-யூப்ராதிஸ் நதிக்கரைகளிலிருந்த பாபிலோனிய ராச்சியமும், ஹோயான்ஹோ யாங்தீஸ்கயாங் நதிக்கரைகளிலுள்ள சீனராச்சியமும், கங்கை-ஸிந்து நதிப்பிரதேசத்துள்ள பாரதவருஷமுமாம். இவ்விராச்சியங்கள் இற்றைக்கு எவ்வளவு நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஸ்தாபிக்கப்பட்டனவென்பது ஒருவாற்றானும் அறுதியிட்டுச் சொல்லமுடியாததாகவிருக்கிறது. பொதுப்படக் கூறுமிடத்து, ஒவ்வொரு பிராசீன ஜாதியாரும் தங்களது புராதனத்தை வெளியிடுவதிலேயே கருத்துள்ளவராக விருந்தனரென்பது தெரியவரும். எகிப்தியர்கள் இருபத்தையாயிரம் வருஷங்களுக்கு முன்னேயும், பாபிலோனியர் லக்ஷக்கணக்கான வருஷங்களுக்கு முன்னேயும், சீனர் கோடிக்கணக்கான வருஷங்களுக்கு முன்னேயும் தோன்றியதாக அவரவர்களுடைய சரித்திரங்கள் கூறுகின்றன. இந்தியர்களுடைய நான்கு யுகங்கள் மட்டுமே மற்றையோருடைய காலப்பிரமாணத்துக்கு அதிகமானதாக விருக்குமென்பதை நாம் தனியே சொல்லவேண்டியதில்லை.

சரித்திர சம்மந்தமான விஷயங்கள் ரிகார்டு ஆவதற்கு முன்னமேயே ஒவ்வொரு ஜாதியாரும் நாகரீகத்தை அடைந்திருக்க வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

முதன் முதலில் மகா ஜனங்களுக்குள் ஒருவித மான பாஷை யேற்பட்டிருக்கவேண்டும். இது திடீரென்று உண்டாகக்கூடியதன்று. மற்றைய ஜீவப்பிராணிகளைப்போலவே, மானிடர்களும் முதலில் பாஷையற்றவராயும், ஜாடைகளினல் மட்டுமே அபிப்பிராயத்தை வெளிப்படுத்திக் கொண்டவராயும், பலகாலமோ சிலகாலமோ இருந்தபின்னரே தான், பாஷையொன்று எற்பட்டிருக்கவேண்டும். இப்படிப் பாஷையில்லாவிடில் நாகரீகமே இராது.

இரண்டாவதாக, பிராசீன மனிதர், உடுத்துக்கொள்வதற்கு உடையையும் தங்கியிருக்க வீட்டையும் பெற்றிருக்கவேண்டும். ஆதியில் மனிதர்கள் உஷ்ணப் பிரதேசங்களிலேயே வாழ்ந்திருக்கவேண்டுமென்றும், குளிரினின்றுந் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளச் சவுகரியமான உடையையும் இடத்தையும் பெற்றபின்னரே குளிர்ப் பிரதேசங்களுக்குச் சென்றிருக்கவேண்டுமென்றும், விற்பன்னர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

நாகரீகத்தில் மூன்ருவது படி, நெருப்பின் உபயோகமாம். நெருப்பின் உபயோகத்தையும் அதை வேண்டும்போது பெறுவதற்கேற்ற வழியையும் கண்டுபிடித்த மகானுபாவன் யாவனே அறியோம். உஷ்ண தேசங்களினின்றும் குளிர்த் தேசங்களுக்குச் சென்ற மனிதர்களுக்கு உடையும் இடமும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமாம் நெருப்பும். நெருப்பில்லாவிடில் மனிதர்கள் சீதளப் பிரதேசத்துக்கும், அப்பால் பனிக்கட்டிகள் பாறை பாறையாய்க் கிடக்கும் துருவவலயத்துக்கும், சென்றிருக்கமாட்டார்கள். முதன் முதலில் உலர்ந்த குச்சிகளை ஒன்ருேடொன்று தேய்ப்பதினல் நெருப்புண்டாக்கப்பட்டது. இதற்கு நம்மவர் அரணி கடைவதென்கிருர்கள். இப்போதும் யாகஞ் செய்பவர் இப்படித்தான் நெருப்புண்டாக்குவது. தீப்பெட்டியின் உதவியாலல்ல. இவ்வழக்கம் நாகரீகமடையாது வாழும் காட்டு மிராண்டிகளிடம் இன்னும் நடையாடி வருகிறதென்பது நமக்குத் தெரிந்த விஷயம். இரும்பு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர்தான் சிக்கிமுக்கிக் கல்லி னுபயோகம் தலையெடுத்திருக்கவேண்டும். பைஸாவுக்கு ஒரு பெட்டி நிறையக் கிடைக்கும் தீக்குச்சிகளோ கிறிஸ்தவாப்தம் பத்தொன்பதாவது நூற்ருண்டில் கண்டுபிடிக்கப்பட்ட அதிசயங்களிற் சேர்ந்தவை.

அப்பால், பிராசீன மனிதனுடைய ஆயுதங்களை நாகரீகத்தின் நான்காவது படியாகச் சொல்லவேண்டும். ஆதியில், தடிமட்டுமே அவனுடைய ஆயுதமாக விருந்திருக்க வேண்டும். வரவர யுக்தியினல், உலோகமுனைபெற்ற ஈட்டிகளும், கோடரிகளும், வேல்களும், வாள்களும், வில்லம்புகளும் தலையெடுத்தன. உடைக்காகத் தோல்களைப் பதமிடும் கருவிகளும், ஓரிடமிருந்து மற்ருேரிடத்துக்குத் தண்ணீர் மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் போக்குவரவுக்கு ஏற்ற தோணிகளும், சகடங்களும், மட்பாண்டங்களை நிருமிக்கக் குயவன் சக்கரமும் காலக்கிரமத்தில் உண்டானவையேயாம்.

ஐந்தாவது படி, பிராணிகளைப் பழக்குதலாம். ஆதியில் வேட்டையாடுவதில் உதவி செய்வதற்காக நாய் பழக்கப்பட்டிருக்கவேண்டும்; பின்னர் மனிதனுடைய உணவுக்கும் உடைக்குமாகச் சாகபக்ஷணிகளான பிராணிகள் பழக்கப்பட்டன.

ஆருவது கிருஷித்தொழில். முதலில் வேட்டையாடியே பிழைத்த மனிதன் சாகபக்ஷணிகளான ஜந்துக்களைப் பழக்க வாரம்பித்ததும் மாடு மேய்ப்பவனுனன். இதுவே அவன் பயிர்த்தொழிலில் தலைபிடுவதற்கும் காரணமாம். என்ருலும் ஒரு தரம் பயிரிட்டு மாசூலை அறுத்தவிடத்தில் மறுதரம் பயிர் செய்யாமல் நெடுங்காலம் தேசசஞ்சாரம் செய்த பின்னரே நிலையாக வோரிடத்தில் தங்கிப் பயிரிடுதலை மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஏழாவது ராஜரீகம். மேற் கூறியவாறு ஓரிடத்தில் நிலையாகத் தங்கிய பிறகு, மற்றைச் சாதியாராலும் வகுப்பாராலும் தீங்கு முதலியன நேரிடாவண்ணம் காத்துக்கொள்வதற்காக ராஜரீகம் ஏற்பட்டது. ஆரம்பத்தில் குடும்பத்தின் தலைவனே அதற்குப் போஷகனாகவும் காவற்காரனாகவுமிருந்தான். பின்னர் அநேக குடும்பங்கள் ஒன்று சேர்ந்து, பராக்கிரமமும் பலமும் பொருந்திய ஒருவனைத் தலைவனாக்கிக் கொண்டன. இதுவே அரசாதிகாரம் வந்தவாறாகும். பூர்வத்தில் குடியரசு என்பதும், அராஜரீகம் என்பதும் தெரிந்திருந்ததில்லை. அவையிரண்டும், வெகுகாலங்கழித்து ஐரோப்பாவி லுண்டானவைகளாம்.

எட்டாவது கலைஞானம். இதன்கண் சித்திரமெழுதலும், கல்லுருவடிப்பதும், கட்டிடங்கள் கட்டுவதும், இவைபோல்வனவு மடங்கும். இஃது உயிர் வாழ்க்கைக்கு முக்கியமானதன்றாயினும், நாகரீகம் முதிரமுதிரத் தானே தோன்றியதாகும். நாகரீகத்தில் உச்சிப்படி, எழுத்துகளைக் கண்டுபிடித்ததாம். இதைக் காட்டிலும் மேம்பட்டவிஷயம் ஒன்றுமேயில்லையெனத் திட்டமாய்ச் சொல்லலாம். ஆதியில் படங்கள், உருவங்கள் மூலமாகவே எழுத்துக்கள் எழுதப்பட்டன. எகிப்தியர்கள், மேல் ஆசியாவிலிருந்த ஹித்தைத்தியர்கள், சீனர்கள், மெக்ஸிகநாட்டு இந்தியர்கள் இவர்களிடம் ஒவ்வொருவிதமான சித்திரவெழுத்துக்கள் நடையாடிவந்தன. பின்னர் பாபிலோனியர் சப்தத்தைக் குறிக்கும் சொற்களைக் கண்டுபிடித்தனர். அப்பால், நெடுங்காலத்துக்குப் பிறகுதான் இப்போது வழங்கும் நெடுங்கணக்குக கண்டுபிடிக்கப்பட்டது. இப்படிக் கண்டுபிடிககப்பட்டு விஷயங்கள் எழுதப்படத் தொடங்கினகாலம் முதற்கொண்டுதான் நாகரீகத்தின் வளர்ச்சி செம்மையாகத் தெரிகின்றது. இவ்வாறு நாகரீகமடைந்த பல ஜாதியாரையும் பற்றிய விவரங்களையும், அவர்களுடைய பழக்க வழக்கங்களையும், நாம் தெரிந்து இன்புறுவதற்காகவே பின்வரும் விஷயங்கள் எழுதப்படுகின்றன. முதன்முதலில் "மாயாதேசம்" என்னப்படும் எகிப்துதேசத்தைப்பற்றிப் பேசுவோம்.

## 1. எகிப்தியர்

ஆப்பிரிக்கா கண்டத்தின் வடபாரிசத்தில் செழிப்பைப் பரப்பும் நீலநதி பாயப்பெற்ற எகிப்து தேசம் வெகு புராதனமானது. கிறிஸ்த வாப்தத்துக்கு 5,000 வருஷங்களுக்கு முன்பாகவே அந்நாட்டில் நாகரீகம்முதிர்ந்திருந்த தென்றால் அதன் பழமையைக் கூறவும் வேண்டுமோ? அந்நாட்டிற்கு மேற்கே எளிதில் கடக்க முடியாத "ஸஹாரா" என்னும் பரந்த பாலைவனம் வெகுதூரம் வரையில் வியாபித்து நிற்கின்றது. கிழக்கிலும் ஒரு பாலைவனமுண்டு; ஆயினும் அது சிறியது. அதைத் தாண்டிச் சென்று செங்கடலையடைந்து பார்த்தால் அராபிய பாலைவனம் தோன்றும். எகிப்து தேசத்துக்குத் தெற்கில் நூபியா என்னும் கற்றரைப் பிரதேசம் வெகுதூரம் வரையில் பரவியிருந்தது. வடக்கிலோ மத்தியதரைக் கடலுள்ளது. இவ்வாறு நான்கு பக்கங்களிலும் இயற்கையாகவே அமைந்த அரண்களுக்கு நடுவே வாழ்ந்த பிராசீன எகிப்தியர்கள் அந்நாட்டிலுண்டான தனதான்னியங்களைச் சத்துருக்களின் பீடையின்றி இன்பமாக அனுபவித்தனர். வருஷாவருஷம் ஏராளமான வண்டலுடன் பிரவாகித்து வரும் நீலநதியினால் எகிப்தியருக்கு உணவு தானியங்களை உற்பத்தி செய்வதற்குப் போதுமான சவுகரியம் ஏற்பட்டது. இதனால் அவர்கள் நிலையுள்ளவர்களானார்கள். இதுவே அவர்களுடைய நாகரீகத்துக்கும் முதற்காரணமாக விருந்தது.

இவ்வாறிருந்த எகிப்துதேசம் செல்வ வளத்தினாலும் காலக்கொடுமையினாலும் அரபியர், கிரேக்கர், பின்னர் மகம்மதியர், ஆரியா, இவர்களால் முறையே கைக்கொள்ளப்பட்டதென்றாலும், ஆதிய நாகரீகமாகிய பெருந்தீயில், பின்

வந்தவர்களுடைய நாகரீகம் மறைந்து போயிற்று. வெளிப்பார்வைக்கு எகிப்துதேசம் இப்போது அரபிய ராச்சியமாகத் தோன்றினாலும், ஜனங்களுடைய பழக்க வழக்கங்களைக் கவனித்தால் பண்டைச் சீரும் சிறப்பும் தெளிவாகத் தோன்றும்.

எகிப்து தேசத்தைப்பற்றிய விவரங்கள் எல்லாம் சுமார் நூறு வருஷங்களுக்குள்ளான காலத்தில் தான் தெரியவந்தன. நெப்போலியன் என்னும் மஹாவீரன் எகிப்து நாட்டின் மீது படையெடுத்துப் போனபோது, பிராசீனவிஷயங்களை ஆராய்ச்சி செய்யும் விற்பன்னர்கள் பலர் அவருடன் சென்றனர். அவர்களுக்குக்கிடைத்த அரும் பொருள்களுள் முக்கியமானவற்றில் சில இங்கிலாந்துக்குக்கிடைத்தன,

பின்னர், ஜெர்மானியர், ஆங்கிலேயர், இதாலியர் முதலியோர் பிராசீன ஆராய்ச்சிக்காக எகிப்து தேசம் சென்று செய்த அரும்பெரும் பாட்டினால், நமது அறிவுக்கெட்டிய சரித்திர விஷயங்களும், வெளிவந்த சிலாசாசனங்களும், கோபுரங்களும் அனந்தம். இம்மகோபகாரிகளின் ஆராய்ச்சியினாலேயே பின்னர் எழுதப்படும் விஷயங்களும்,விநோதங்களும் வெளிவந்தனவாதலால், நாம் அனைவரும் அவர்களுக்கு நன்கு கடமைப்பட்டவர்களாவோம்.

எகிப்தியரின் ஆதிவரலாற்றைப்பற்றி ஒன்றும் விசதமாகத் தெரிந்தபாடில்லை. அவர்கள் ஆசியாகண்டத்திலிருந்து சென்றவர்கள் என்பர் ஒருசாரார்; எதியோபியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பர் மற்றொருசாரார்; பின்னொருசாரார், இவர்கள் இந்தியாவிலிருந்த பூர்வவாசிகளின் சந்ததியா ரென்கின்றனர். இஃதெவ்வாறாயினு மாகுக. ஒன்றுமட்டும் விசதம். கிறிஸ்தவாப்தத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே நீல நதிப்பிரதேசத்தில் எகிப்தியர்கள் மகோன்னதமான நாகரீகத்தையுடையராயிருந்தன ரென்பது மறுக்க வொண்ணாத விஷயம்.

## 1. எகிப்திய சரித்திரப்போக்கு

புராதன காலத்தில் எகிப்திய ராச்சியம் இருபிரிவாக விருந்ததென்றும், நதிமுகப் பிரதேசத்தில் * செம்முடி அரசர்களும்,மேல் எகிப்தில் † வெண்முடி அரசர்களும் தனித்தனியே சருவாதிகாரத்தோடு ஆண்டுவந்தன ரென்றும் தெரிகின்றது. கிறிஸ்தவாப்தத்துக்கு 4400 வருஷங்களுக்கு முன் மீனிஸ் என்றோர் அரசன் இவ்விருவம்சங்களையும் ஒன்றாக்கி, ஏகசக்கிராதிபதியாய் ஆளத்தொடங்கினான். அதுமுதல் ராஜபரம்பரை இடையறாது வருகின்றது. அதற்கு முற்பட்டகாலத்தில் அந்நாட்டில் தேவதைகளும் அவதாரபுருஷர்களுமே ஆண்டுவந்தன ரென்று எகிப்தியரின் பண்டை நூல்கள் கூறுகின்றன. இதற்குப் பொருள், அக்காலத்திய சரித்திரத்தைக் குறித்து நமக்கொன்றும் தெரியாதென்பதாம். மீனிஸ் அரசன் முதல் வரும் அரசபரம்பரை, பழைய மெம்பிஸ் ராச்சியமெனவும், மத்திய ராச்சியம் அல்லது பழைய தீபன் ராச்சியமெனவும், புதியதீபன் ராச்சியமெனவும் மூவகைப்படும். ஒவ்வொன்றிலும் பற்பல ராஜவம்சங்கள் ஆண்டுவந்தன அவைகளைப்பற்றிய சரிதங்கள் எல்லாவற்றையும் விஸ்தாரமாக எழுதுவதற்கு இது இடமன்று; ஆதலால் அவர்களுடைய சரித்திரப்போக்கை மட்டும் ஒருவாறு கூறி இவ்விஷயத்தை முடிவு செய்வோம்.

மீனிஸ் அரசனால் ஐக்கியப்படுத்தப்பட்ட எகிப்திய வகுப்பினர் இருவரும், ஒரே நோக்கமுடையவராகி, செல்வாக்கிலும் பலத்திலும் வரவர விருத்தியடைந்தனர். அவர்கள் அக்காலத்தில் அடைந்திருந்த நாகரீகத்துக்கு, அவர்கள் எழுப்பிய ஜயகோபுரங்களே சாக்ஷியாம். சில நூற்றாண்டுகள் சென்ற பின்னர், அவர்களால் செய்யமுடியாதது ஒன்றுமில்லை யென்னலாம்படியான சக்தி அவர்களுக்கு வந்துவிட்டது. பழைய மெம்பிஸ் ராச்சியகாலத்தில்,

* (Delta region) † (Upper Egypt)

எகிப்து நாட்டில் நாகரீகம் மகோன்னத நிலையி லிருந்தது; உறுதியான ராச்சியாதிகாரமும், அரிய சாமர்த்தியமும், பலவழியாலும் விருத்தியடைந்து வந்த மார்க்கக் கொள்கையும், முதிர்ச்சியடைந்த கலைஞானமும், முதிரவிருந்த பாஷாஞானமும், அவர்கள் நிருமித்த ஒவ்வொரு கோபுரங்களிலும் விளங்கின. ஆனால் பழைய மெம்பிஸ் ராச்சியம் ஆயிரத்தெழுநூறு வருஷங்களுக்கப்பால் திடீரென்று சீர்குலைந்து போயிற்று. ஐக்கியப்பட்ட ராச்சியம் பற்பல பாகங்களாக மறுபடியும் பிரிந்தது. நாகரீகமும் க்ஷீணிக்கத் தலைப்பட்டது. என்றாலும் கூடிய சீக்கிரத்தில் முன்பதவியை யடைந்து எகிப்து ராச்சியம் ஒரே அரசன் கீழ் மறுபடியும் வந்தது. இதற்கு மத்திய ராச்சியகாலமெனப் பெயர். இப்பொழுதுதான் எகிப்தியர்கள் பிறநாடுகளின்மேற் படையெடுத்துப்போயினர். நூபியாதேசம் எகிப்துக்குக் கீழ்ப்பட்டது; மத்திய தரைக்கடலைச் சார்ந்துள்ள நாடுகளோடு எகிப்தியர் வியாபாரக் கூட்டுறவு செய்து வந்தனர்.

ஆயினும் இவ்வுன்னதபதவி சுமார் இருநூறு வருஷங்களுக்குள் மாறிவிட்டது. ராஜாங்கம் மறுபடியும் க்ஷீணிக்க ஆரம்பித்தது. ஆதலால், இதற்கப்புறம் சில நூற்றாண்டுகள் வரையில் எகிப்து ராச்சியம் இருந்த விடங்கூடத் தெரியாமல் போயிற்று. ஸிரிய-அரபியப்பாலைவனத்திலிருந்து வந்த பெடூயின் ஜாதியாரைச் சேர்ந்த ஹைக்ஸாஸ் என்னும் அந்நிய ஜாதியார் வெகுகாலம் எகிப்தில் அரசு செலுத்தினர். அவர்கள் அரசன் நதிமுகப் பிரதேசத்தில் தலைநகரைக் கட்டிக்கொண்டு ஆண்டனர். எகிப்து நாட்டின் மற்றைய பாகங்களில் எகிப்திய அரசர்கள் ஹைக்ஸாஸ் அரசனுக்குக் கீழ் அமர்ந்து ஆண்டுவந்தனர்.

காலக்கிரமத்தில் அந்நிய அரசனின் சக்தி தளர்வடைய, எகிப்தியக் குறுநிலமன்னர்கள், அச்சந்தர்ப்பத்தில் தங்கள் தங்கள் நாடுகளைப் பெருக்கிக் கொண்டனர். ஆகவே நெடுந்தூரத்துக்கு அப்பாலிருந்த தீப்ஸ் நகரத்தில் சிற்றரசு புரிந்த ஒரு எகிப்தியன் வெகு பலவானாகி, மற்றைக் குறுநிலமன்னர்களை யடக்கினது மன்றி, சார்வபௌமனாக அரசாண்ட அந்நியஜாதிச் சக்கிரவர்த்தியையும் வென்று விரட்டிவிட்டான். ஆகவே கி. மு. 1600 வாக்கில் எகிப்திய ராச்சியத்தை எகிப்தியரே ஆளத் தொடங்கினார்கள். இவ்வம்சத்துக்குத்தான் புதிய தீபன் ராஜவம்சம் என்று பெயர். இதில் அரசாண்டவர்களுடைய சாகஸச் செயல்கள் அனந்தம். முதலாம் தெகுதைம்ஸ் என்னுமரசனும், அவன் மகனும் ரணரங்கசூரனுமான மூன்றாம் தெகுதைம்ஸ் என்பவனும், ஸிரியாவுக்கு வடக்கே வியாபித்துள்ள பாகங்களையும், ஸௌடானுக்குத் தெற்கிலுள்ள பாகங்களையும் வென்றனர். எகிப்து ராச்சியமும், யூப்ராதிஸ் நதிக்கரைகளில் கிளம்பிக்கொண்டிருந்த அஸிரிய ராச்சியமும் ஒன்றுடனொன்று நெருங்கின. இதனால், இவர்களுக்குள் விசேஷமான வியாபாரம் நடந்தது.

அதன் பயனாக, எகிப்து நாட்டில் ஏராளமான செல்வம் நுழைந்தது. நுழையவே எகிப்தியர்கள் பெருமித வாழ்க்கையில் இறங்கிவிட்டனர். விலையுயர்ந்த ஆடையாபரணங்கள், பொன் வெள்ளிச் சாமான்கள் முதலிய டம்பப்பொருள்களெல்லாம் எகிப்தியரிடம் வந்தன. ஆசியாகண்டத்தாரின் நடையுடைபாவனைகளும் எகிப்தியருக்குள் பிரபலிக்கத்தொடங்கின. சுருக்கிச் சொல்லுங்கால், எகிப்தியருக்கு அந்நிய ஜாதியாரிடமிருந்த அருவெறுப்பும் த்வேஷமும் மாறிவிட்டன. அவர்களுடைய நாகரீகத்தைப் பார்த்து வியப்பதும், அவைகளை அனுசரிப்பதும் நவீன அபிப்பிராயங்களை உட்கொள்ளுவதும் எகிப்துக்கு இயற்கையாகிவிட்டன.

ஆயினும் வெகு காலமாக நடையாடிவந்த பழையகொள்கைகளை மாற்றுவது எளிதாகவிருக்கவில்லை. கி. மு. 1400 வாக்கில் நான்காம் அமென்ஹோதெப் என்னுமரசன் ஸிரியா,

பாபிலோனியா முதலிய தேசங்களில் இருந்த படி எகிப்துநாட்டிலும் எல்லோரும் சூரியனே யேதெய்வமாகக் கொண்டாடவேண்டுமென்று விதித்தான். ஆனால் பிரஜைகளில் பழைமைபிரியே யிருக்கப் பிரியப்பட்ட பெரும்பாலார், ஸிரியர்கள், எகிப்தியர்கள், எதியோபியர்கள் எல்லோரும் சமமானவர் என்ற எண்ணத்தைப் பொருதவர்களாய், இக்கொள்கையை அங்கீகரிக்காமல் தள்ளிவிட்டனர். கக்ஷி யிரண்டுபட்டது. ஆதலால் இதுவே எகிப்து நாட்டின் சீரழிவைக் கொண்டு வந்தது. அடுத்த நூற்றாண்டில், வெளிப்பார்வைக்குமட்டும் எகிப்து ராச்சியம் நன்னிலமைபிலிருப்பதாகத் தோன்றினாலும், அதன் சக்தி முழுமையும் குன்றிப்போயிருந்தது. ராஜகீய விஷயத்தில் தன் முதன்மை ஸ்தானத்தை நிலை நிறுத்திக் கொள்ள எகிப்துக்கு வலிமை இல்லை. ஆகவே எகிப்துக்கு மரணாவஸ்தை தொடங்கிவிட்டதென்று கூறலாம். ராச்சியாதிகாரம் அரசனிடமிருந்து குருக்கள் மாரிடமும், குருக்களிடமிருந்து ஸிரிய சைன்னியத்தின் தளகர்த்தர்களிடமும் போயிற்று. பின்னர், எகிப்து ராச்சியமும் எதியோபியருக்கு வசமாகிப்போயிற்று. பின்னர் எகிப்தைத் தமதாக்கிக்கொள்ளவேண்டி அவர்களுடன் அஸிரியர் போட்டி போட்டனர். ஐந்நூறு வருஷங்கள் வரையில் இவ்விராச்சியம் இத்துன்பங்களி லேவேதனைமொன்றை அனுபவித்தே வந்ததென்பதைக் கேட்க வெகு பரிதாபமாயிருக்கின்றது.

என்றாலும் அதிகமான மாறுதல் ஒன்றும் உண்டாகவில்லை. அஸிரிய ராச்சியம் தலைகவிழ்ந்து போன பிறகு, எகிப்து நாட்டுக்கு அனுகூலமாக மீட்டுமொருமுறை ராஜகீய விஷயங்கள் மாறின. முதலாம் ஸாம்தெக் என்பவனும் அவனது சந்ததியார்களும், செல்வத்தையும், சக்தியையும் மீட்டும் பெற்றனரென்றாலும், இவ்வதிருஷ்டத்துக்குத் தக்கபடி நடந்துகொள்ள எகிப்துக்குச் சாமர்த்தியம் இல்லாமற் போய்விட்டது. பண்டைக்காலத்து நடையுடைபாவனைகளை அனுசரிக்கமுயன்றதே இதற்குக்காரணமாம். கி. மு. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் எகிப்துக்கு மறுபடியும் துர்த்தசை உண்டாயிற்று. பாரஸீக அரசனான கேம்பைஸிஸ் என்பவன் எகிப்து நாட்டை ஜெயித்துப் பாரஸீக ராச்சியத்தோடு சேர்த்துக்கொண்டான். எகிப்தியர் பன்முறை முயன்று பார்த்துக் கடைசியாக கி. மு. 400 வாக்கில் சுயேச்சையை யடைந்தனர். ஆயினும் சில வருஷங்கள் செல்லு முன்னரே, அவ்விராச்சியம் மறுபடியும் பாரஸீகர் வசம்போயிற்று. அது முதல் கொண்டு எகிப்து நாட்டில் அந்நியரே தான் ஆண்டு வருகின்றனர்.

பாரஸீகரிடமிருந்து மகா அலெக்ஸாந்தர் எகிப்தைக் கைப்பற்றிக்கொண்டார். அவர் இறந்ததும், அவ்விராச்சியம் அவரது தளகர்த்தனான டாலமி என்பவனுக்குக் கிடைத்தது. அவனது சந்ததியார் வசம் அந்நாடு கி. மு. 30 வரையில் இருந்து வந்தது. அவ்வருஷத்தில் எகிப்து தேசம் உரோம ஸார்வ பௌமத்தின் பாகமாயிற்று. பிற்பாடு வெகு காலத்துக்குப் பிறகு அரபியர்களால் ஜெயிக்கப்பட்டு அவர்கள் வசமே இன்னுமிருந்து வருகின்றது. இப்போது எகிப்து தேசம், துருக்கி சுல்தானுக்கு வருஷமொன்றுக்கு ஆறுலக்ஷத்து எழுபதினாயிரம் பவுன் கப்பங்கட்டிக்கொண்டு 'கெடிவ்' என்ற அரசனால் ஆளப்படுகின்றது. மற்றைய விஷயங்களில் சுயேச்சாதிகாரத்தோடு ஆளப்பட்டாலும், எகிப்திய ராச்சியத்தை ஆங்கிலேயர் தமது குடைக்கீழ் வைத்துப் பாலித்து வருகிறார்கள். வெளிப்பார்வைக்கு எகிப்திய நாடு அரபிய நாடாகத்தோன்றினாலும், நாகரீகத்தைக் கவனிக்குமிடத்து, எகிப்தியரின் பண்டைச்சீரும் சிறப்பும் நன்றாய் விளங்குவதை இன்னும் காணலாம்.

## ஜெடில் குத்தல்

உலகத்தில் 'தெய்வவணக்கம்' என்பது அனேகமாய் மனித ஜாதிக்கெல்லாம் பொதுவான லக்ஷணம். ஆனல் அப்படி வணங்குவதில் ஏற்பட்டிருக்கும் தாரதம்மியம்தான் நாகரீகமிருப்பதற்கும், இல்லாததற்கும் விசேஷித்துள்ள வித்தியாசமாம்.

உதாரணமாக, நமக்குள் பள்ளர், பறையர் முதலியோருடைய தெய்வங்களுக்குக் கள்ளு, சாராயம், மாமிசம் முதலியவையே நன்ருயேற்ற நைவேத்தியங்கள். கிராம தேவதைகளாகிய 'பட்டத்தலைச்சி,' 'செல்லாண்டை,' 'பச்சாயி,' முதலிய தெய்வங்களுக்கும் அவ்வாறே ஆடு, கோழி முதலியவைகளும், பொங்கல் முதலியவுங் கூடித் திருப்தியுண்டாக்குகின்றன. வசூரி, மகாமாரி, காலரா முதலிய நோய்கள் ஜனங்களை உபத்திரவத்தால் இம்மாதிரிப் பலிகள் இன்னும் அதிகமாகின்றன. பவானி தாலூக்காவில் ஒரு கோவிலில் சில சந்தர்ப்பங்களில் மூன்று நாள் இடையருமல் ரத்தம் தாரையாக ஒரு தெய்வத்தின் தலையில் அபிஷேகமாகி வருவதாகச் சமாசாரம்.

பழையகாலத்தில் நாகரிக முதிர்ந்த கார்த்தசீனியர் என்ருெரு ஜாதியார் ஆப்பிரிக்கா வடபாகத்தில் பிரபலித்திருந்தார்கள். அவர்களுடைய தெய்வமாகிய 'மோலாக்கு' என்னும் பூதத்திற்கு நரபலி யிடுவது சாதாரணம். வியாதி, நஷ்டம் முதலிய கொடுமைகளினின்றும் தப்பவேண்டியவர்கள் சில சமயங்களில் தம்மக்களையே பலியிடுவதுண்டு. அதிலும் ஒரே பிள்ளையாயும், சுந்தர மூர்த்தியாயுமிருந்தால் அம்மகவைப் பலியேற்க அத்தெய்வத்திற்கு வெகு ஆசையாயிருந்ததாம். கலகம் முதலியவை இல்லாமல் தேசம் க்ஷேமமாயிருக்கையிலேயே இவ்வாறு நடப்பதானல், யுத்தம் முதலிய பயகாலத்தில் நடக்கும் சம்பிரமங்களுக்குக் கேட்பானேன்.

தவிர யுத்தத்தில் ஜெயமடைந்து எதிரிவருக்கத்தில் ஜனங்கள் சிறையாக அகப்பட்டால், அவர்களில் வேண்டிய பெயரை இத்தெய்வத்திற்குப் பலியிடுதல் இவர்களுக்குள் சாதாரணமாயிருந்த பதிவு.

இவ்வாருக மனிதருக்குள் தங்கள் வஸ்து, வாகனதிகள், பெண்டுபிள்ளை முதலிய சகலரையும் பலியிட்டுத் தெய்வங்களைத் திருப்திப்படுத்துதல் ஒருமுறை. இதைவிட்டு ஒரு படி அதிகமாகப் போகும்போது, அவரவர் தத்தம் தேகத்தைப் பலவிதமாக உபத்திரவித்துக் கடவுளுக்குத் திருப்தியுண்டாக்குவதும் ஒரு சாமான்னிய முறையாகக் காணும். இந்தியாவில் யோகாப்பியாசம் என்று பெயர் வழங்கும் முறையொன்றுண்டு. இந்தப் பெயரை வைத்து மனிதர்கள் தங்களுடைய தேகங்களுக்குச் செய்துகொள்ளும் உபத்திரவம் இத்தனை வகைத்தென்பதற்கில்லை. சிலர் சீதோஷ்ணதிகளைக் கவனியாமல் எக்காலத்தும் வஸ்திரமற்று மாத்தடியிலுட்கார்ந்தும், சிலர் ஆகாராதிகளை வேண்டாமல் புல்பூண்டைத் தின்றும், சிலர் ஜலத்திலேயேகிடந்தும், சிலர் அக்கினி மத்தியிலேயே யிருந்தும், சிலர் காலை மடித்தோ வேறு விதமாக ஆசனமிட்டோ கிடந்தும் வந்திருக்கிருர்கள். இன்னும் பலவிதமாக இருந்துகொண்டும் வருகிருர்கள்.

ஐரோப்பாவில் முன்னெருகாலத்தில், சிலர் பாலைவன மத்தியில், ஜயஸ்தம்பங்கள் போன்ற கட்டிடங்களின் உச்சியிலிருந்துகொண்டு நெடுங்காலம் கீழேயிறங்காமல், வெய்யில் மழையைப்பாராட்டாமல், ஏதோ கிடைத்ததைத் தின்றுவிட்டுக் காலங்கழித்ததாக நமக்குத்தெரியும். இவர்களில் இரண்டொருவருக்கு, நெடுநாள் ஸ்நானம் முதலியது இல்லாமல், உடம்பில் அழுக்குப்படிந்து, புழுத்துச்சொரிந்ததாகவும், அப்புழுக்களில் ஏதாகிலும் ஒன்று கீழேவிழுந்தால், அதை அவர் ஜாக்கிரதையாய் மறுபடிஎடுத்துத் தேகத்தில்விட்டு, "ஓ புழுவே, ஈசுவரன் உனக்கு அருளியதைத்



ஜெடில்குத்தல்—சோழவந்தான்

தின்று தேக்கிடு'' என்று சொல்லிவந்ததாகவும் தெரிகிறது. இன்னொரு காலத்தில் ஐரோப்பாவில் கொள்ளைநோய் வலுத்ததின்பேரில் அதற்குப் பரிகாரமாகப் பாதிரிமார்களில் சிலர் மணிக்குறடாக்களைக் கொண்டு ஒவ்வொருவரும் தாங்களே முதுகில் ரத்தம் பீறிட அடித்துக் கொண்டுநகரத்தெருக்களில் ஊர்கோலம் செய்து வந்தார்களென்றும் நமக்குத் தெரிகிறது.

இம்மாதிரிச் சித்திரவதைகள் தெய்வ விஷயமாய் எந்நாட்டிலு மிருந்தே வந்திருப்பதால், இந்தியாவிலும் இருந்து வந்திருப்பது அதிசயமல்ல. ஆனால் நாகரிக முதிர முதிர இவைகள் நசித்துப்போகின்றனவென்பதற் கையமில்லை. 'சதி' என்னும் 'உடன்கட்டை' ஒரு காலத்தில் சில இடங்களில் பிரபலித்திருந்ததும், இப்போது அதைக் குற்றமாக்கி யிருப்பதும் நமக்கெல்லோருக்கும் தெரியுமல்லவா?

'குண்டங் குதிப்பது' இன்னும் அனேக இடங்களில் நடந்து வருகிறது. குழிவெட்டி இருபது அடி சுமார் நீளம்காட்டி, அதில் விறகுகளைக்கொளுத்தித் தழலாக்கி, அதை 'டிமிஸ்' செய்து, விசிறிகொண்டு ஒரே தழலாகக் கனல் வீசும்படி செய்து, அதில் இறங்கி ஜனங்கள் சாதாரணமாக நடந்து வருவதும், அதனாலவர்களுக்கு ஒரு கொடுமையும் உண்டாகாமலிருப்பதும், யார்வேண்டுமானாலும் பரீக்ஷித்தறியக் கூடிய விஷயமே. தெரியாதவர்கள் இதில் ஏதோ மாயமிருப்பதாகவும், தழைச்சாறு முதலியவற்றைக் குதிப்பவர்கள் பூசிக்கொண்டு போவதாகவும் சொல்லுவதுண்டு. வயிற்றைக் கிழித்துக்காட்டிய போதிலும் கஜகர்ணவித்தையென்பவருக்கு நாம் திருப்தியுண்டாக்கு

வது அசாத்தியம். வேண்டுமானல் அவர்கள் பரீக்ஷித்தறிய இடமிருப்பதால், கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டாமல் அவர்கள் இந்த ரகசியத்தை அறிந்துகொள்வாராக. ஒரு விஷயமட்டும் நிச்சயம். இம்மாதிரிக் குண்டம் குதிப்பதில் நாளதுவரை யாருக்காகிலும் அபாயம் நேரிட்டதாக நமக்குத் தெரியவில்லை. ஆனதுகொண்டே நமது கவர்ன்மெண்டாரும் அதைத்தடுக்கப் பிரயத்தனப்படவில்லை.

ஆனல் தஞ்சாவூரின் தென்புறத்திலும், மதுரை, திருநெல்வேலி, ஜில்லாக்களிலும், காணும் கள்ளர் நாடு என்று சொல்லக்கூடிய பிரதேசத்தில் தெய்வ விஷயமாய் அவர்களுக்குள் ஒரு வழக்கம் சென்ற தலைமுறைவரை சாதாரணமாய் நடந்துவந்தது. அதைக் கொஞ்சகாலமாகச் சர்க்கார் குற்றமாக்கி நிறுத்திவிட்டார்கள். அதைப்பற்றித்தான் நாமிவ்விடம் பேசவந்தது. காரணம் படிக்கப்படிக்க விளங்கும்.

படத்தையுற்றுப் பாருங்கள். மதுரைக்கடுத்த 'சோழவந்தான்' என்னும் ஊர்த்தெருக்களில் ஒன்று காணுகிறது. அதில் 'ஜெடில்' மகோற்சவத்தினிமித்தம் ஆயிரக்கணக்காக ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். மத்தியில் 'சட்டத்தேர்' என்று சொல்லும் சாமான்னிய வண்டி காணுகிறது. அது எட்டுச் சக்கரங்கள் கூடி அந்தச் சமயத்திற்காகவென்று நிர்மாணிக்கப்பட்டது. நடுவில் இரண்டு சட்டங்கள் எடுப்பாகக் காணுகின்றன. அவைகளை ஏணிப்படிபோன்ற மூன்று குறுக்குச் சட்டங்கள் போட்டு இறுக்கியிருக்கிறார்கள். இச்சட்டங்களுள் மேலாகக் காணும் சட்டத்திற்குச் சேர்த்து ஆணி கோர்த்து ஒரு பெரிய மூங்கில் வளைகாணுகிறது. கல்யாணப் பந்தற்கால்களுக்குச் செய்கிறமாதிரி இந்த வளைக்கும் வர்ணக்காகிதங்கள் ஒட்டியிருக்கிறது. 'கையேற்றம்,' 'குரங்கேற்றம்,' என்று தென்னிந்தியாவில் எங்கும் காணும் கருவியில், முதுகுமரமென்று சொல்லும் சட்டமானது மத்தியில் ஆணியில் கோர்த்திருக்க, மேலுங்கீழுமாக இழுத்துவிடுவதற்கு எப்படி உதவுகிறதோ, அதுபோலவே இந்தவளையும் உயர்த்தவும், தாழ்த்தவும் சாத்தியமாகிறது. படத்தில் அதை உயர்த்தியிருக்கக்காணுகிறோம். அந்தத் தலைப்பில் ஒருவளையம் அடித்திருக்கிறது. அதற்கு எதிர்த்தலைப்பில் கல்முதலிய பாரங்கூட்டித் தேர்ச்சட்டத்துடன் இறுக்கிக் கட்டியிருக்கிறார்கள். ஆதலால் உயரக்காணும் தலைப்பு, ஒருமனிதனுடைய கனம் பூராவாகச்சேர்த்தும், கீழே யிறங்காமல் அப்படியே நின்றிருக்கிறது. இப்படி நாம் பார்க்கும் கோலத்தில் அந்தத்தேரை நாலுவீதியிலும் கோயிலைச்சுற்றியிழுத்து வந்தபின், மறுபடி மூங்கில் வளையைக் கட்டவிழ்த்துக் கீழே தாழ்த்தி அதில் மேற்சொல்லிய வளையத்திற்குச் சேர்த்துக் கட்டியிருக்கும் மனிதனை விடுவித்து விடுகிறார்கள். இவன் யாரென்றும், ஏனிப்படிச் சித்திரவதைக்குட்படுகிறான் என்றும் நாம் இப்போது விசாரிக்கவேண்டும்.

மேற்கூறியபடி அனேக இடங்களில் அனேக தேவதைகளுக்குப் பிரீத்தியர்த்தமாக அனேக உபத்திரவங்களை மனிதர்செய்துவந்திருக்கிறார்களல்லவா? ஒரு குடும்பத்தில் பிள்ளையில்லையென்று வைத்துக்கொள்ளுவோம். 'பிள்ளையுண்டானல் திருப்பதிக்கோவிலுக்குவேட்பிலை தின்றுவருகிறேன்,' எனவொருவர் ஸ்ரீ வேங்கடேசனைப் பிரார்த்தித்துக் கொள்ளலாம். அல்லது அயோத்தியா மாகாணத்தில் 'மகாவீரன்' என்ற பெயருடன் ஸ்ரீ ஆஞ்சநேய சந்நிதியிருப்பதில், அவரைக் குலதெய்வமாகக் கொள்வோர் வழக்கமாய்ச் செய்கிறபடி, தங்கள் கிராமத்திலிருந்துகோயில்வரை 'அடிதெண்டமிட்டு' உடம்பெல்லாம் ரத்த காயமாகச் சன்னிதியில் வந்து நிற்கலாம்.* அல்லது திருப்பதிக்குப்

* இது எவ்வளவு கேவலமாகப் போகக்கூடுமென்பதற்கு ஒரு கதையுண்டு. சமீபகாலத்தில் 16-வயதுள்ள ஒரு சிறு பிள்ளையாண்டான் இவ்வாறு நமஸ்காரஞ்செய்து கொண்டுவந்து உடம்பெல்லாம் காயமும், புழுதியும், படிந்து கிடக்கச் சன்னிதியில் வந்து நின்றானும். சுற்றியிருந்தவர், "ஏனிப்படி வந்தாய? உனக்கென்ன பிரார்த்தனை?" என, அவன் தலையைக்குனிந்து வெட்கிய முகத்துடன், 'மகாவீரன் எனக்கு நல்ல அழகிய பெண்ணைப் பாரியை யாக்க வேண்டும்,' என, எல்லோரும் சிரித்து, 'அவருக்கே பாரியைக்கு வழியில்லையே,' என்றாராம்,

போகிறவர்கள் செய்கிறமாதிரி 'வாய்ப்பூட்டு' இட்டுக்கொண்டோ, முட்பாதகுறடு போட்டு நடந்துகொண்டோ போகலாம். இல்லையென்ருல் மேற்சொல்லியபடிக் குண்டங் குதிக்கலாம்.

இப்படி யெத்தனையோ லக்ஷம் வகையிருப்பதால், கள்ளருக்குள் இஷ்டதேவதையைத் திருப்தி படுத்துவதற்கு இந்த வழக்கமேற்பட்டதாகச் சாமான்னியமாய்ச் சொல்லலாம். இந்நாட்டு ஜனங்களின் ஜாதி, மதம், முதலியவற்றை விவரித்தெழுதியிருக்கும் ஸ்ரீமான்-தரஸ்டன் துரை இவ்விதமாகத்தான் ஏதோ பிரார்த்தனை செய்துகொள்ளும் கள்ளஜாதிப் புருஷர்கள் ஜெடில் குத்திக்கொண்டு, பிரார்த்தனை செலுத்தி, மனோரதங்களை நிறைவேற்றி வந்ததாக எழுதுகிருர். அவருக்கு இப்படி யார் சொல்லி எழுதிவைத்தார்களோ தெரியவில்லை. ஆனல் வேறிடங்களில் எப்படி யிருந்தபோதிலும், சோழவந்தான் பூசாரிகளைக் கேட்டதில் அவர்கள் அப்படி யொன்றுமில்லை யென்று சாதிக்கிருர்கள்.

ஆகவே இந்த வழக்கம் ஏதோ இஷ்டதேவதையை யுத்தேசித்து ஏற்பட்டபோதிலும், வருஷாவருஷம் குத்துண்பவர்கள் ஏதாகிலும் மனோரதம் நிறைவேறுவதற்காகப் பிரார்த்தனை செய்துகொண்டு அதைச் செலுத்துவதற்காக வந்தவர்களல்ல. பழைய காலத்தில் சந்திர சூரிய வம்சம் முதலிய க்ஷத்திரிய முதல்வர்களுக்குத் திக்கு விஜயம் என்பது எப்படிக் குலதருமமாயிருந்ததோ, அப்படியே இக்கள்ள நாட்டாருக்கும் இது காலக்கிரமத்தில் குலதருமமாகிவிட்டதாகக் காணுகிறது. ஆகவே வைகைநதி பாயும் வளநாட்டில், சோழவந்தான் வகைரா நாலு கிராமங்களிலுள்ள "காவற்கார" ஜாதியவர்தான் இதற்கு மிராசு பாத்தியம் படைத்தவர். மற்றைய ஜாதியாருக்கு இந்தப்புகழ் சம்பாதிப்பதற்கு யாதொரு உரிமையுங் கிடையாது. பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட யாவனுக்கும் இந்த அதிருஷ்டம் கிடைக்கலாம். ஒரு முறை இவ்வாறு குத்துண்டு ஊர்கோலம் வருவதாகிய பெரும்பதவி ஈசுவர கிருபையினல்தான் கிடைக்குமென்றும், அவ்வாறு லபித்தால் அந்தப் புருஷன் பிறந்த குடும்பத்திற்கும், அவனுக்கும், அவன் சந்ததியாருக்கும், அழியாப் புகழுண்டென்றும், இக்கள்ளர்களுக்குள் நம்பிக்கை. சாமான்னியமாய் இந்த விரதத்தைச் செய்து முடித்தவருக்குத் தங்கள் ஜாதியாரிலும், இதரர்களுக்குள்ளும், செல்வாக்கு அதிகரிப்பதுடன், நல்ல தக்ஷிணையுங் கிடைப்பதுண்டு.

ஒவ்வொரு வருஷமும் வைகாசி மாதத்தில் ரதோற்சவ தினங்களில் மூன்றும்நாள், 'இக்கள்ள புருஷர்களில்,' 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் எல்லோரும், தங்கள் குலதெய்வமாகிய மாரியம்மன் கோவில் பிராகாரத்துள்ளடங்கிய வெளியிடத்தில் வந்து சேருவார்கள். பிறகு ஸ்நானம் முதலிய முதற் சடங்குகள் நடக்கும். அதன் பின் வந்திருப்பவர் பெயர்களை நறுக்குகளில் எழுதிக் கலசத்தில் போட்டுக் குலுக்கிக் கொட்டிவிடுவார்கள். இக்குவியலிலிருந்து ஏதாகிலும் ஒரு நறுக்கை யெடுத்துக் கொடுக்கும்படி ஒரு சிறு குழந்தையைக் கேட்பார்கள். அந்தச் சீட்டில் யார் பெயர் எழுதியிருக்கிறதோ அவனை அதிர்ஷ்டசாலி யென்று எல்லோருங் கொண்டாடுவார்கள். அவன் பேரில்தான் இஷ்டதேவதைக்குக் கிருபை பூரணமாய் இருப்பதாக எல்லோரும் பாவிப்பது.

உடனே மேளவாத்தியங்கள் முழங்க இந்தப் பக்தனுக்கு மஞ்சளில் நனைத்த ஜவுளிமொன்றை உடுக்கக் கொடுத்து, அந்த க்ஷணம் முதல் பண்டிகை கழியும்வரை அவனைக் கோவில்விட்டுப் புறம்பே போகவொட்டாமல் வைத்திருப்பது வழக்கம். இப்படியேற்பட்ட விரத தினங்கள் கழியுமட்டும் அவனுக்கும், அவன் குடும்பத்தாருக்கும், முக்கியமாக அவன்

பெண்ஜாதிக்கும், யாதொரு சம்பந்தமுமிருக்கக் கூடாது. இருப்பதும் இல்லை. மாரி அம்மனுக்கு நைவேத்தியம் செய்த பிரசாதம் தான் அவனுக்கு ஆகாரம்.

உற்சவமாரம்பமாகிப் பத்தாநாள், குறித்த முகூர்த்தத்தில், இவனை இதற்கென்றேற்பட்டிருக்கும் இடத்திற்குக் கொண்டுபோகிறார்கள். அவ்விடத்தில் 'ஜெடில்' என்னும் இருப்புக் கொக்கிகளை மாட்டுவதற்கு ஏற்பட்டிருக்கும் மிராசு பாத்தியஸ்தன் தயாராக இருக்கிறான். குத்துண்போன் வந்ததும், அவனைப்பிடித்துக் கிழக்கு முகமாக நிறுத்தி நடு முதுகில், இரண்டு தோளெலும்புகளுக்கும் மத்தியில் அறையோ, குத்தோ, கொடுக்கிறான். அதனால் அவ்விடத்தில் சதை பொருமித்தற்காலம் நோய் சற்று மந்தித்துக்காணும். உடனே இப்படிப் பொருமியிருக்கும் சதையில் இரண்டு வலுத்த கொக்கிகளை உட்செலுத்தி மாட்டி யிரண்டையும் சேர்த்துப் பிகிந்து விடுகிறான்.

இந்தக் காரியம் முடிந்ததும் மேள்தாளங்களுடன் இந்தப் பக்தனை முந்திக்கூறிய தேர் நிற்குமிடத்திற்குக் கூட்டிப் போகிறார்கள். போனதும் மேற்கூறிய மூங்கில் வளையைத் தாழ்த்தி அதன் மேல்தலைப்பில் உள்ள வளயத்திற்கு இந்தக்கொக்கிகளைச் சேர்த்துக்கட்டி விடுகிறார்கள். உடனே மூங்கில் வளையின் மறுதலைப்பை நாம் மேற்கூறியபடி தாழ்த்துகிறார்கள். ஜெடில் குத்துண்டவனுடன் எதிர்த்தலைப்பு உயர்ந்து விடுகிறது. ஆகவே யிவன் இந்த ஸ்திதியில் கைகால்களை விரித்துக்கொண்டு, ஆகாயத்தில் சுமார் 40 அடியுயரத்தில் வேறு ஓராதரவு மில்லாமல் கொக்கிகள் சதையைப் பிடுங்கி யிழுக்க ஊசலாடுகிறான்.

இச்சமயத்திலும் இவனுக்கு வெய்யிலினாலுபத்திரவம் உண்டாகக்கூடாதது போலும். ஆகவே 'நெஞ்சுநோமென்று தலைதூமிப்பான் தண்ணளிபோல்' இவன் தலைக்குமேல் குடைபோன்ற மூங்கிற்கூடை கட்டியிருக்கிறது. அதற்குமேல் பட்டுப் போர்த்திருப்பதுபோல் காணுகிறது. அவன் கைகளில் பட்டு வஸ்திரமும், புஷ்பமாலையு மிருக்கின்றன. இந்தச் சம்பிரமங்களுடன் தேரைக் கோயிலைச்சுற்றி யிழுத்துப் போகிறார்கள். போகையில் அந்த ஆட்டத்தினாலும், அதிர்ச்சியினாலும், அவன் கையிலுள்ள புஷ்பமாலையிலிருந்து புஷ்பங்கள் உதிரும். அவைகளைச் சுற்றியிருக்கும் ஜனங்கள் வெகு ஆசையுடன் பொறுக்கி யெடுத்துக் கொள்ளுவார்கள். அவைகளைச் சரகாக்கி வைத்திருந்தால், விசித்திர ரோகங்களுக்கு ஔஷதங்களாகவும், வேறு அனேக மகிமைகளுக்குக் காரணமாகவும், ஆகலாமென்பது இச்சனங்களின் நம்பிக்கை.

இவ்வாறு தேரையிழுத்துவந்து கிடைசேர்த்தியதும், வளையைக் கட்டவிழ்த்துத் தாழ்த்தி விடுகிறார்கள். பக்தன் கீழே இறங்கினவுடன், கொக்கியை வாங்கிக் காயத்தை ஆற்றுவதற்கென்று மிராசுபாத்தியம் வகித்த வைத்தியன் வந்து, தன் மாமூலை நடத்தி, நாலைந்து தினத்திற்குள் காயத்தை ஆற்றிவிடுகிறான்.

இவ்வளவு பயங்கரமானதும், கோரமானதுமான காரியம், வருஷா வருஷம் நடந்து வருவதில், யாராகிலும் கீழே விழுந்து மாரியம்மனுக்குப் பலியாகிவிடலாமேயென்று நாமெண்ண இடமுண்டு. என்றாலும் அப்படி அதிகமாய் ஜனங்கள் விழுந்திறந்ததாகவாவது வேறு விதமாக அபாயம் நேர்ந்ததாகவாவது காணவில்லை. இதனால் இந்த ஜாதியாருக்குள் தேகம் எவ்வளவு தூரம் சுவாதீனமென்றும், மனோதைரியம் அபாரமென்றும், மூடபக்தியென்றாலும் தெய்வபக்தி வாஸ்தவமெனறும் நாம், தெரிந்துகொள்ளலாம். ஆனால் அந்தப்பக்தியை முரட்டு வழிகளிலும், ஒருவருக்கும் உபயோகமற்ற முறைகளிலும் காண்பிப்பதைவிட இக்கால தருமத்திற்கேற்குமாறு வேறு வகைகளில் காண்பிப்பது அழகென்றும், இப்போது சர்க்கார் அதைக் குற்றமாக்கி யிருப்பதுபோலவே, இம்மாதிரி வேறு அபாயகரமான காரியங்களையும் தடுப்பது மகா ஜனங்களுக்கு அனுகூலமேதவிர வேறல்லவென்றும், விவேகிகளுக்கெல்லாம் நன்கு விளங்கும்.

## நாட்டுவாசமும் நகரவாசமும்

ஸ்ரீமதி எஸ். பொன்னம்மாள்

நகர வாசத்திற்கும் நாட்டுவாசத்திற்குமுள்ள குணுதுணங்களை யெடுத்து அவ்வவற்றின் பேதாபேதங்களை விசாரித்தெழுதப் புகுந்திடில், அவை ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற அனுகூலங்களும் பிரதிகூலங்களும் பலவகை உண்டென்பதற்குச் சந்தேகமில்லை. நகரவாசமே சௌக்கியமா ? நாட்டு வாசமே சௌக்கியமா ? வென்ருல், அதற்குப் பதில் அவரவர்களுடைய மனோதருமம், புத்தியின் நிலைமை, விருப்பம் முதலியவைகளை யனுசரித்துத் தான் சொல்லுவது சாத்தியம். ஆதலால், ஒருவர் சொல்லுவதை மற்றவர் ஒப்புக்கொள்ளுவது வேறு எந்த விஷயத்தில் சாத்தியமாயினும், இதில் ஆகாது. இவ்விரண்டிலுமுள்ள தாரதம்மியங்களைச் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். நமக்கு முக்கியமாக வேண்டியது தேக சௌக்கியமன்ருே? அதைக் கவனிக்குமிடத்து, நகர வாசிகளுக்கு அனேக அசௌகரியங்க ளிருப்பது பிரத்தியக்ஷம். முதலாவது, அனேக பட்டணங்களில் குடிக்கத் தண்ணீர் கிடையாது. நல்ல காற்றும் கிடையாது. திருச்சிருப்பள்ளிபோன்ற சில இடங்களில் ஜல சௌக்கியமிருப்பதாக வைத்துக்கொண்டாலும், குடியிருக்கும் வீடுகள் டொம்பர் குடிசைகளைவிட மோசமாயும், வெளியில் கிளம்பினல் நாசி முதலிய துவாரங்கள் அனைத்திலும் தெருப்புழுதி யடைந்தும், அவஸ்தைப்பட வேண்டியிருக்கிறது. இதனுல் தேகசுகங் குறைந்து அவ்வளவிற்கு மனச்சுகமுங்குறைந்து அலுத்துப்போகிறது. அல்லது போக்கிரிகள் மத்தியிலகப்பட்டுப் பலவிதமாய் நஷ்டமுண்டாகிறது. அக்காலத்தில் இவ்விதச் சங்கடங்களுடன் இந்நகரத்தில் வருந்துவதைப் பார்க்கிலும் வேறு எங்கேயாவது ஒருவருமற்ற மூலைக்காட்டில் போய் வசிக்க வேண்டுமென்று துணிவுண்டாகிறது. அதற்கு ஆரணியமே தகுந்த ஸ்தலம். அவ்விடத்திற்குச் சீக்கிரம் போய்விட வேண்டுமென்கிற ஆக்கிரகம்உண்டாவதன்றியில் இம்மாதிரியான பாடல்களும் ஞாபகத்திற்கு வருகின்றன.

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்கள் கண்ணிற் றெரியாத தூரத்தே
நீங்குவதே நல்ல நெறி.

இவ்வாறு நகரத்தைக் கசந்து நாட்டிலுள்ள ஏகாந்தமான இடங்களையும், காடுமலைகளையும், அருவிகளையும், பசும்புற்றரைகளையும், மனதினைத்து களிகூரலாம்.

ஆனுல், இவ்விஷயத்தில் நாட்டு வாசிகளைக் கேட்டால், அவர்கள் சொல்லுங்கதை வேறு ஏனெனில், ஒரு நாளைப்போலவே எந்நாளும் உண்டுடுத்து உயிர் வாழ்க்கை ருசியற்றுப் போய், நேராகப் பொழுது போக்கில்லாமல் சோம்பேறிகளாய்த் தெருத்திண்ணைகளில் வம்புகள் பேசிக் காலங்கழிப்பவர் பிழைப்பும் ஒரு பிழைப்பாவென்று அவர்கள் கேட்கிருர்கள். ஆதலால் "கெட்டும் பட்டினஞ் சேர்" என்கிருர்கள். கிராமவாசிகளில் சாமான்னியக் குடியானவர்களோ, விளைச்சல், மழை, வெயில், தண்ணீர், விலைவாசி இவைகளைத்தவிர வேறு பேச்சுகள் அறிவதில்லை. கொஞ்சகாலமாகக் கோர்ட்டுகளுக்குப் போவதும், சிவில் வியாஜ்ஜியம் செய்வதும், அதில் தோற்றவன் அடிதடி செய்து கிரிமினல் வழக்குத் தொடர்வதும், அம்மூலமாக அடிக்கடி நகரங்களுக்குப்போய் அவ்விடத்தில் பெரிய வக்கீல்தாரர்களுடையவும், அவர்களுடைய பெண்டு பிள்ளைகளுடையவும், நாகரீக வைபவங்களை வருணித்துச் சிலருக்குக் காலங் கழிகிறது. பழைய அக்கிரஹாரங்களிலோ, சிட்டாட்டமும் வேறு விதமான விருதாகாலக்ஷேபங்களும், செழித்து சர்வமான்னியங்களெல்லாம் ஒரு தலை முறையில்லாவிட்டால், அடுத்த தலை முறையில் இறக்கை கட்டிக்கொள்ளுகின்றன. ஆதலால், நாட்டுவாசிகள்

நகரமே சிலாக்கியமென்று சொல்லுகிறார்கள். ஏனெனில், அவ்விடத்தில் சோம்பலாயிருக்க ஆஸ்பதமில்லை. எக்காலத்திலும் புலன்களையும் புத்தியையும் ஆசைகளையும் திருப்தி செய்விக்கத் தருணங்கள் வாய்த்துக்கொண்டிருக்கின்றன. பலவித வியாபாரங்களும், ஜனக்கூட்டமும் இருப்பதால், எவ்வகைப்பட்ட மனிதனும் தனது புத்திக்கும் சக்திக்குந் தக்கபடி அலுவல் தேடிக்கொள்ள அநுகூலங்கள் உண்டு. முழுமூடனானாலும் நகரத்திலுள்ள புத்திமான்களுடைய சேர்க்கையினால் நாகரீகமும், கல்வியும் அடையலாம். மேலும், பலதேசத்து ஜனங்கள் வந்து கலப்பதால் நடையுடை பாவனைகளில் தேர்ச்சி யடைவதற்கு இடமுண்டு. ஜனங்கள் இனிதாகப் பொழுது போக்குவதற்கேற்ற விநோத சாலைகளும், காட்சி மண்டபங்களும், நாடக சாலைகளும், பிரசங்க சபைகளும், விளையாட்டுக்கூடங்களும், சித்திர சாலைகளும், நிறைந்திருப்பதினால், கிராமவாசிகள் மாதிரி திண்ணையைக் காத்துக்கொண்டிருக்கவேண்டியதில்லை.

மேலே நாம் சொல்லியபடி இவ்விஷயத்தில் அவரவர் மனோதருமம் முக்கிய காரணம். சாமான்னியமாகச் சிறுவயதில் ஜனங்கள் நகரவாசத்தைத் தேடுவதும், அதிற்கிடைக்கும் சுகங்களை நாடுவதும், வயதாகி முதுமை வருமளவிற்கு, அவைகளில் அசிரத்தை யுண்டாகி, நாட்டுப்புறத்தையும் அரண்ணியத்தையும் தேடுவதும், வெகு நாளைய அனுபவம். ஆதலால், இங்கிலீஷ்கவி யொருவர் இவ்விஷயத்திற் சொல்லியிருப்பது யுக்தியுக்த மென்று நமக்குங்காணுகிறது. அதாவது,

பலவகைச் சனஞ்செறி பட்டினத் துழல்வதும்,
பட்டினந் துடாப் பாழி ருத்தலும்,
இரண்டு மதியீன மென்மனர் புலவர்.

## விறகுவெட்டியும் வித்வசபையும்

ஜே. எஸ். மாசிலாமணிப் பண்டிதர்

(200-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

### நாலாங்காட்சி

இடம்—உறையூர் வித்வசபாமண்டபம்.
காலம்—மாலை.

[கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், முதலியவர்களெல்லாம் வந்து ஆசனத் தமருகின்றார்கள். அரசன் மந்திரி சகிதமாய் வருகின்றான். எல்லாரும் எழுந்து நிற்கின்றார்கள். அரசன் அமர, கவிராஜபாவலர் பாடுகின்றார்.]

கவிராஜபாவலர் கலிவிருத்தம்

உலகெ லாமுவந் தோம்பிடு காவலன்
கலகம் யாவுங் கடிதகற் றுண்மையன்
குலமிக் கோங்குங் குலோத்துங்க சோழனும்
புலவர் தோழன் பொன்னாமுகங் காண்மினே.

மற்றைப்புலவர்.— ஜே! ஜே! ஜே!
குலோத்துங்க சோழகுரிசில் பெருமாற்கு
ஜே! ஜே! ஜே!

மந்திரி.—வானுடனத்தகு சோணாட் டதிபதீ
உத்தரங் கொடுத்த சித்தப் படியே
வந்துளார் இந்த வளர்பெரும் சபையில்
கல்விக் கடலைக் கரைகண் டுணர்ந்து
எல்லையில் அறிவும் தெள்ளிய ஞானமும்
அருங்கவிப் புலமையும் பெருங்கவி வாய்மையும்
ஒருங்கே பெற்று ஒப்புயர் வற்றஇவ்
வித்துவக் குழாமெலாம் மெத்தவும் நல்லது

குலோத்.—உத்தம அமைச்சே! ஓங்கும்இச்சபையில்
புவிச்சக்ர மெல்லாம் புகழுத லுற்றமா
கவிச்சக்ர வர்த்தியாம் கம்பநாட் டாழ்வார்
வந்துளார் கொல்லோ?

கம்பர்.— வந்துளேன் வந்துளேன்
ஏந்தெழிற் புலிக்கொடி வாய்ந்த நன்னிருப!

குலோத்.—அகமுற மிகவும் மகிழ்ந்தனம், அப்பால்
நகர்க்கொரு அழகாய் ஜொலிக்குமிச் சபையில்
பட்ட வர்த்தனப் பார்த்திப ரேற்றும்நம்
ஒட்டக் கூத்தர் உவந்துவந் துளரோ?

ஒட்டக்.—உவந்தே வந்துளேன் ஓங்கிய புகழோய்.

குலோத்.—மெத்தவும் உத்தமம்! மேவுமிச் சபையில்
இசல்லேவந்த ரெல்லாம் ஏற்றியே துதித்த
புகழேந்திப் புலவர் பொருந்தியிங்குளரோ?

புகழ்.—பொருந்தியே இங்குளேன் அருந்திரு
வுடையோய்.

துலோத்.—நல்லது ! நல்லது ! நலங்கொள் இச்
சேர சோழ பாண்டிய மென்னக் [சபையில்
கூறும் மூன்று குவலயந் தன்னிலும்
ஒக்கப் புகழ்பெற் றோங்கி யுயர்ந்து
ஞானமே பரிந்தொரு மேனிகொண் டாலென
உலகினி லுதித்த கலைமக ளம்சமாம்
ஔவையா ரெனும்நம அன்னையிங் குளரோ ?

ஔவை.—உளேஎன் உளேஎன் ஒளிதிகழ்
வேலோய்.

துலோத்.—சாலவு மினிதே, ஞாலமேல் நவிலரும்
நற்றிற முற்ற மந்திரிஇச் சபையில்
இவரே யொழியமற் றெவரேனும் உளரோ?

மந்திரி.—பலர்உளார் பலருளார், பார்த்திப ரேறே !
அதோஒ உள்ளார் அமிர்த கவிராயர்
சீருங்கலை யாவையும் ஒருங்கே யுணர்ந்தவர்
எழுத்து, சொல்,பொருள், யாப்பு, அணி யென
வழுத்திய ஐவகை இலக்கண மனைத்தையும்
ஐயந் திரிபற நொய்தினி லுணர்ந்தவர்
அரிசைச் செம்பிய நினது
பேரிசை கேட்டுநின் பேட்டி தன்னைப்
பெறும்படி யிங்கே விரும்பி வந்துளார்.

துலோத்.—வெகுசந் தோஷம் வெகுசந் தோஷம்

அமிர்த.—ஆழியுள் ளளவும் வாழ்கநின் திருமுடி.

மந்திரி.—அப்பால்
வீற்றிருக் கின்றஅவ் வியன்கவிப் புலவர்
நாற்றிசை யெல்லாம் நாடிய புகழினர்
இசைத்தமிழ் முழுதையும் நசையுறக் கற்றவர்
ஒருதலை மன்னிய இருதல மீதினும்
ஓங்குசீர் பெற்றசங் கீதநூற் குறுவதாம்
மூவகை யிசையும் நால்வகைத் தகுதியும்
ஐவகைக் கருவியும் அறுவகைப் பாவும்
எழுவகைச் சுரமும் எண்வகைக் கரணமும்
ஒன்பது வகைநவ சந்தி தாளமும்
பத்து வகைத்தா ளப்பிர மாணமும்
கல்யாணி கமாசு காம்போதி காப்பி
சங்கரா பரணம் சயிந்தவி சாவேரி
புன்னாக வராளி பூபாளம் லாவணி
ஆனந்த பைரவி அமிர்த கல்யாணி
என்ப தாதிய இன்னிசை இராகமும்
கீதநூற் கின்னும் ஓதிய பலவும்
காசறக் கற்றவர், கவிராஜ பாவலர்
எனப்பேர் பெற்றவர் மனவெத் திக்கினும்
ஓங்கு நின்புகழ் ஓதக் கேட்டிவர்
ஈங்கு வந்தனர் எழிலுறு படையோய்.

துலோத்.—நன்று நன்று, சாலவும் நன்றே.

கவிராஜ்.—சந்திர சூரியர் அந்தரத் துறும்வரை
வீங்கும் நின்புகழ் ஓங்கியே வளருக.

மந்திரி.—ஆயிடை
நலமே அமர்ந்துள நடராஜ நாவலர்
முத்தமி ழுலகெலாம் மெச்சிய புகழினர்
இதயமுஞ் செவியும் பதமுற லன்றிக்
கண்ணும் அளவிலாக் காட்சியா னந்தம்
நண்ணிட நடிக்கும் நாடகக் கவிஞர்
அகத்தினு ளமர்ந்த ஐம்பொறி யனைத்தையும்
நினைத்த படிநனி நிருத்தமாட் டிடுமுயர்
மனத்தினைப் போல, திரைப்புற மிருந்து
பன்னாள் பல்லிடத்துப் படர்ந்தன யாவையும்
கண்ணெதிர் நடத்தல்போல் காட்டுதல் வல்லுனர்
நாடகர் பல்லோர் நண்ணிய தலைவர்
கூடல் மாநகர் குடியிருப் புடையவர்
அகலும் நின்புகழ் புகலக் கேட்டிவர்
இந்நகர் மேவினர் பொன்னித் துறைவ

துலோத்.—சாலவும் இனிதே,சாலவும் இனிதே.[சை

நடராஜ நாவலர்.--ஊழிநீ டூழியாய் வாழ்கநின் பேரி

துலோத்.—ஆரறி வமைச்ச ! சேருமிச் சபையில்
கூறியவர் தவிர வேறியாரும் உளரோ ?

மந்திரி.—உளாஅர் உளாஅர் உயர்புலித் துவச
இலக்கணம் இலக்கியம் எளிதுணர் புலவரும்
உறுபெரு நூலுக் குரைதரு புலவரும்
இயல்இசை நாடகம் என்னுமுத் தமிழையும்
மயலறக் கற்ற மாண்புறு புலவரும்
ஆசு மதுரம் சித்திரம்வித் தாரமாம்
நால்வகைக் கவியையும் நன்குணர் புலவரும்
அகத்தியந் தொல்காப் பியமா தியவும்
எஞ்சலில் அழகுறு பஞ்சகா வியமும்
எட்டுத் தொகையும் பத்துப் பாடலும்
பதினெண் கீழ்க்கணக் காதிய பலவுமாம்
அரும்பெரு நூலெலாம் ஆய்ந்தமா புலவரும்
இன்னும் பலதிறன் நண்ணிய பலருமாய்
ஓங்குமிச் சபையைத் தாங்க வந்துளார்
ஒப்புயர் வொழிந்த மற்புயச் சூரிய ! [ந்தோம்

துலோத்.—மகிழ்ந்தோம் மகிழ்ந்தோம் அகமிக மகிழ்
அருந்தமி ழுணர்ந்த பெருந்தகைப் புலவீர்

அமிழ்தினு மினிய தமிழ்மொழிச் செல்வீர்
ஆகா உம்மைக் காணக் காண
அடங்கொணு மகிழ்ச்சி அகத்திலுறு கின்றது
தாமரை யில்லாத் தடாகம் போலவும்
பூமண மில்லாப் புஷ்பம் போலவும்
சந்திர னில்லா அந்தரம் போலவும்
நதிநன் றில்லா நாடு போலவும்நன்
மடக்கொடி யில்லா மனையைப் போலவும்
கடக்கொணு அறிவுடைக் கவிகள் கூடியஇவ்
வித்துவ சபையொன் றில்லா வியனகர்
என்னும்! என்னும்! நல்லது நல்லது
நாடும்இச் சபையில் கூடிய புலவிர்நாம்
கேட்கும் வினக்கட் கேற்கவிடை கூறீர்.

[விறகுவெட்டிச் சிங்கன் வெகு வேகமாய் ஓடி வருகின்றான். சேவகன் அவனை அதட்டுகின்றான்.]

சேவகன்—அடே! டே! டே! ஆரடா அங்குப் போகிறது.

சிங்கன்.—அட இரையாதே ராஜாவைப் பார்க்கப் போறேன்.

சேவகன்.—அடே நில்லடா அங்கே.

[சேவகன் தடுக்கச் சிங்கன் திமிருகின்றான்]

சிங்கன்.—அட இரையாதே நான் ரெம்ப அவசரமாய் ராஜாவிடம் போறேன்.

[சிங்கன் கடந்துபோய் விடுகின்றான்]

சேவகன்.—வெகு அவசரமாய்ப் போகிறானே. ஏதோ ஒரு விசேஷ சமாசாரங்கொண்டுவருகிறானே என்னமோ தெரியவில்லை.

[விறகுவெட்டிச் சிங்கன் சபைக்குட் பிரவேசித்துக்கம்பரை வணங்குகின்றான்]

சிங்கன்.—சாமி சேவிக்கிறேன்.

கம்பர்.—நீயார், என்ன வேண்டும்?

சிங்கன்.—சாமி, நான் ராஜாமேலே கவிபாடிக்கொண்டு வந்திருக்கிறேன்.

கம்பர்.—ஓகோ இதில் ஏதோ விசேஷமிருக்கிறது. நம்மை நாடிய இவனுக்கு நன்மை செய்வதே நல்லது, சரி, உனக்கென்னவேண்டும்? (தனக்குள்.)

சிங்கன்.—சாமி, இங்கே என் கவியைப்பாடி ஏதாவது வெகுமதி வாங்கிக்கொண்டு போக வேண்டும்.

கம்பர்.—அப்படியா? ஆனால், நானல்ல ராஜா அதோ இருக்கின்றார் மகாராஜா, அவரைப் போய் வணங்கும்.

[அரசனுக்கு.]

ஆர்கலி யுலகாள் சீர்மலிச்சோழ! யாரோ ஒரு வித்துவான் தங்கள்மேல் கவிபாடிக்கொண்டு வந்திருக்கின்றாராம். தங்கள் சமுகபேட்டியை விரும்புகின்றார்.

சிங்கன்.—சேவிக்கிறேன், சாமி; சேவிக்கிறேன்.

[பாடுகின்றான்]

மண்ணுண்ணி மாப்பிள்ளையே ஆலமர நாயகனே
உங்க ளப்பன் கோவிற் பெருச்சாளி
காவி றையே கூவி றையே
கன்னுப் பின்னு மன்னுத் தென்னு
குலோத் துங்கசோழ மகாரா ஜாவே!

குலோத்.—ஓஹோ இதென்ன கொடுமை, கொடுமை? (நகைத்து)

புகழ்.—பயித்திய காரன் பயித்திய காரன்
இறைவ! ஏதோ இந்த வெறிமகன்
புத்தி மாறாட் டத்தால் இத்திறம்
கத்திக் கதறினன்

குலோத்.— இருக்கலாம் இருக்கலாம்.

அமிர்தகவி.—அல்லதிவ் விழிமகன் தெள்ளிய பனை
கள்ளைக் குடித்து மிக்க வெறித்து [மின்
வெறியின் குணத்தால் நெறியற இவ்விதம்
அறைதலுற் றனனோ?

குலோத்.— அதுவும் இருக்கலாம்.

ஒட்டக்.—அன்றி, ஆரே உண்மை அறிந்தவர்
வென்றி சேரும்நம்
ஆருயிர் அரசற்குச் சதிசெய நினைத்து
ஆரோ ஏவிய ஆளா யிருக்கலாம்
நாடியிவ் வேடம் நண்ணிய இவனே

குலோத்.—அப்படிக் கூட இருக்க லாமோ?

கவிராஜ.—இப்படி யிருக்கினென்? இல்லா திருக்கி
தரைய னைத்திற் கும்த லைவநின் [னென்?
தரிசனம் இத்தனை சமான மாமோ?
இப்படி யெல்லாம் விட்டால் நினது
ஆருயிர்க் கெத்தனை அபாயமோ நேரும்?

நடராஜ.—ஆமாம் ஆமாம் ஆரின் மாலைய!
இவனையும் இவனை உள்வர விட்ட
காவற் சேவகன் தன்னையும் தகும்படி

உடனே சிக்ஷை யுறத்துதல் வேண்டும்.
ஒருபுலவர்.—தடையின்றி யதனைச் செய்வதே தகுதி.
குலோத்.—ஆரடா சேவக.
சேவகன்.—அடியேன் மகாராஜ்.
குலோத்.—ஏனடா சீச்சீ இந்தக் கட்குடி
காரனை பயித்திய காரனை அல்லது
நஞ்சநெஞ் சத்து வஞ்சகச் சதியனை
உள்ளே இவனைநீ செல்ல விட்டாய்
தகுந்த படியுனைத் தண்டிக்கப் போகிறேன்.

சேவகன்.—மன்னிக்கணும், மன்னிக்கணும், மகாராஜா. அவன் வருகிற அவசரத்தைப் பார்த்துவிட்டு ஏதோ அசலூரிலிருந்து அவசரச் செய்திகொண்டு வருகிறான் என்று நினைத்து உள்ளே விட்டுவிட்டேன். மன்னிக்கணும் மன்னிக்கணும் மகாராஜ்.

குலோத்.—அடே நீ சொல்லுங் காரணம் வெகு நன்றாயிருக்கின்றது. உன்னைக் கட்டாயமாய்த் தண்டிக்கவே போகிறேன். அமைச்சரே என்ன பேசாமலிருக்கின்றீர்?

மந்திரி.—ஏதோ இவ்விஷ யத்தில் கம்பரும்
ஔவை யாரும் மௌன மாக
இருந்ததை யோசித் திருந்தனன் யானும்
அன்றி விசேஷமற் றெதுவு மின்று
குன்றலில் திறலுறு கோழி வேந்தே.
குலோத்.—ஔவையார் அவ்விதம் இருப்பது சகஜமே
ஆனால்
கம்பர்மா கவியே உம்மபிப் பிராயம்
ஏதோ வென்றெமக் கோதி ரீங்கே.
கம்பர்.—குறுமுனி பயந்த மறுவறு செந்தமிழ்
ஏர்பெற வளர்க்கும் சோழநாட் டதிபதி!
வரும்பொரு ளுணரும் அருந்தகை அமாத்திய!
மோனை முத்தமிழ் முழுதுணர் புலவீர்!
நம்மைப் போல நற்றமி ழாய்ந்தஓர்
வித்வானைப் பார்த்து இத்திறம் உரைப்பது
என்ன விபரீதம் என்ன விபரீதம்!
முழுவதும் உணர்ந்த பழுதறு புலவர்கள்
இவரைப் போலவே
நீறு பூத்த நெருப்பைப் போலவும்
சிப்பியுட் சிக்கிய முத்தைப் போலவும்
குப்பையுட் புதைந்த ரத்தினம் போலவும்
இருப்பர். இவர்களை இகழ்தல் தகாது
ஒட்டக் கூத்தரே! மற்றுள்ள புலவரே!

இவ்வித்வ சிரோமணி செப்பிய இப்பாட்டானது வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்றைவகைப் பாக்களிலாவது துறை, தாழிசை, விருத்தம் என்னும் மூவகைப் பாவினங்களிலாவது ஏதனோடு சம்பந்தப்பட்டது? இதன் தாற்பரியம் யாது? என்று அறிந்து சொல்வதல்லவோ வித்வ சாமர்த்தியம். அதைவிட்டுப் பாட்டைக்கேட்டு நகைப்பது நன்றாமோ, பாட்டைப் பாடியவரைப் பொருள் சொல்லச் சொன்னால், யாதொரு பிரயாசமுமின்றி, மகா சாதுரியமாக ஒரு நொடிக்குள்ளே சொல்லி விடுவார். ஆயினும் தமிழிலே தொன்று தொட்டு வழங்கி வருகிற ஒரு நியதியின்படி கவிபாடியவரே தாம் பாடிய கவிக்குப் பொருள் சொல்லுகிறது சம்பிரதாயம் அல்லவே. இதுபற்றி அவரை அர்த்தம் சொல்லச் சொல்லுகிறது நியாயமும் அல்ல. மேலும் மகா வித்வான்களாக நாமிருந்துகொண்டு அவரை அர்த்தம் சொல்லச்சொன்னால், நமக்கு என்ன பெருமை யிருக்கின்றது?

ஆகையால்,

புகழேந்திப் புலவரே அமிர்தகவி ராயரே
நற்றமி ழுண்ட ஒட்டக் கூத்தரே
முத்தமிழ் உணர்ந்த வித்வசிரோ மணிகளே
நம்மில்
ஆராவ திதற்கு அருத்தம் சொல்லலே
நேர்மையாம் வேறு நிகழ்த்துதற் கில்லை.
நடராஜ.—பாருமேன் பாருமேன் கம்ப ரதுசா
மர்த்தி யத்தை, பைத்தியங் கொண்டவன்
தாறு மாறாக் குழறிய உழறலைப்
பாட்டெனப் பாவித்து அதற்குநல் லுரையும்
நாட்ட வேண்டுமாம் நாமே, ஆகா
இவரது ஞானம் இருந்தவா றென்னே!
அமிர்தகவி.—இவரது திறமை எத்துணை ஆசா
யாவனோ ஒருவன் இவ்விடம் மேவி
கள்ளைக் குடித்துத் தள்ளிய வெறியால்
அறிவு கலங்கி உழறினால் அதற்குப்
பொருள்சொல்ல வேண்டு மாம்புல வர்கள்
ஆகா வெகுநன் றாயிருக் கின்றது!

ஒட்டக்.—சித்தப் பிரமையால் பித்தங் கொண்ட அப்
பைத்திய காரனோ அல்லதவன் பகர்ந்த
அனைத்தையும் பாட்டென நினைத்த இந்தக்
கம்பர்மா கவியோ இவ்விரு வருக்குள்
யாரோ பெரிய பயித்திய காரன்
என்பது எனக்குச் சந்தேகம்மே.

கவிராஜ.—இத்தனை பாடும் எதற்கு ஏதோ
அர்த்தம் சொல்லுவ தாக விருந்தால்
கம்பரே அஃதைக் கழறலா காதோ? [ண்ட

கம்பர்.—இம்பர்வா ரிதியென இடனெழில் கொ
தமிழ்க்கட லுண்டதை யுமிழ்தரு தாகையீர்
யானும் உங்களுள் ஒருவனே யானே
சொல்வதும் நீங்கள் சொல்வதும் ஒன்றே
ஆயினும் உங்கள் அபீஷ்டப் படியே
மேயவிக் கவிக்கு வீளம்புவன் அருத்தம்

இப்பாவலர் பெருமான் பகர்ந்தவிப்பாட்டானது வெண்பா முதலிய ஐவகைப் பாக்களுள்ளே ஆசிரியப்பா வாகும். வெண்பாவுக்குச் சங்கராபரணராகமும், கலித்துறைக்குப் பைரவிராகமும், விருத்தத்துக்குக் கல்யாணி, தோடி, நாட்டை முதலிய ராகங்களும், ஏற்பட்டிருக்கிறதுபோல, இவ்வாசிரியப்பாவுக்கு ஏற்பட்ட ராகம் ஆரபி.

[ஆரபி ராகத்தில் பாடுகின்றார்,]

மண்ணுண்ணி மாப்பிள்ளையே ஆலமர நாயகனே
உங்க ளப்பன் கோவிற் பெருச்சாளி
காவி றைய கூவி றையே
கன்னப் பின்ன மன்னத் தென்ன
குலோத்துங்க சோழ மகாரா ஜாவே,

இப்பாடல் இடையே சில சீர் குறைந்து வருவதனால் இணைக்குறளாசிரியப்பாவின் பாற்படும், என்னை? "இடைபல குன்றின் இணைக்க்குறள்" என்பது சூத்திரமாகலின். இதன் பொருள், மண்ணுண்ணி, மண் உண்ணி, மண்-பூமியை, உண்ணி-உண்டவனே, என்றால், பிரிதிவீபதியாகிய மகா விஷ்ணுவே, என்றபடி,

மா பிள்ளையே, மா-லக்ஷ்மியினுடைய, பிள்ளையே-புதல்வனே,

ஆலமர நாயகனே-ஆல், அமர, நாயகனே,-ஆல்-ஆலகாலமென்ற விஷத்தை அமுது செய்தருளிய, அமர நாயகனே-தேவத் தலைவனாகிய நீலகண்டனே,

காவிறையே-கா, இறையே, கா-கற்பகவனத்துக்கு, இறையே-தலைவனே, என்றால் தேவேந்திரனே என்றபடி,

கூவிறையே,-கூ, இறையே, கூ-பூமிக்கு, இறையே-தலைவனே, என்றால், லோகசக்கிராதிபதியே என்றபடி,

கன்னா-கன்னனே,

பின்னா-கன்னனுக்குப் பின்னோனாகிய தருமனே,

மன்னா-என்றும் நிலைபெற்றவனே,

தென்னா-தென்னனாகிய பாண்டியனைப்போன்றவனே, குலோத்துங்க சோழ மகாராஜாவே-குலோத்துங்க சோழ மகாராஜாவே,

உங்கள் அப்பன் கோ-உங்கள் தாதை அரசனாவான்,

விற் பெருச்சாளி-வில், பெருசு, ஆளி, வில்-வில்வித்தையில் பெருசு-பெரிதாகிய, ஆளி-சிங்கம் போல்வாய். இது பதவுரை, இனி,

திருமாலைப்போல உலகபரிபாலனம் பண்ணுகின்றவனே, மகாலக்ஷ்மி கடாக்ஷம் பெற்றவனே, பரமசிவனைப்போல சரணமடைந்தவருக்குத் துயர் தீர்க்கின்றவனே, தேவேந்திரனைப்போல சகல சம்பிரமானுபவனே, லோகத்துக்கு ஏக சக்கிராதிபதியே, கொடையில் கர்ணனைப் போன்றவனே, நீதியில் தருமனைப் போன்றவனே, தமிழ்ப் புலமையில் பாண்டியனைப்போன்றவனே, அழியாப் புகழுடம்பெய்தியவனே, குலோத்துங்க சோழ மகாராஜனே, உங்கள் தாதை மூதாதை முதலியோரெல்லாம் அரசாளப்பெற்ற பரம்பரைச் சக்கிரவர்த்திகள், நீயோ வில்வித்தையில் புறங்கொடாது ஜெயிக்கும் திறலுடையவன். இது இப்பாட்டினது திரண்ட பொருள். இனி,

உங்களப்பன்-எழுவாய், கோ-பயனிலை, அன்

றியும் நீ தோன்று எழுவாயும், விற்பெருச் சாளி பயனிலையுமாம். மற்றவை யனைத்தும் விளிவேற்றுமை. இவை அரசனை முன்னிலைப் படுத்தியதினால் ஆடூஉ முன்னிலை. மூன்றும் நான்காம் அடிகள் முற்றெதுகை. இச்செய்யுளில் இடையிடையே உபமாலங்காரம், ரூபகாலங்காரம், சுவபாவாலங்காரம் முதலிய அலங்காரங்களுட் சிலவும், சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல் முதலிய அழகுகளில் பலவும் ஆங்காங்குக் காணப்படுகின்றது. இது இலக்கணக் குறிப்பு. இனி, இப்பாட்டினது தாற்பரியத்துக்கு விசேஷார்த்தம் சொல்லப்புகுந்தால், காலதாமதம் ஏற்படுமாகையால், விரிவஞ்சி, இத்துடன் நிறுத்துகின்றனன்.

துலோத்.—மெச்சினேன் மெச்சினேன் கம்பரே உ
வித்வ சாமர்த்யமேசா மர்த்தியம். [மது

மந்தி.—பொருந்தும் பொருந்தும் பொருந்தும் இவர்க்குக்
கவிச்சக்கர வர்த்தியெனும் கவினுர் நாமம்
பொருந்தும் பொருந்தும்.

ஒருபுலவர்— பொருகட லுலகில்
கல்வியிற் பெரியவர் கம்பர் என்ற
சொல்லும் உண்மையே.

வேறொருபுலவர்.— தொல்புவி மேலிவர்
சார்தா பீடமெனக் கூறலும் தகுதியே.

கம்பர்.—அரசரே அமைச்சரே அருங்கவிப் புலவரே
இத்தனை துதிக்கும் யானே பாத்திரன்
இத்தகை எழிற்கவி இயற்றிய பாவலர்
நிற்கிறார் ஆங்கே நிகழ்த்திய புகழெலாம்
அமைவுறு மிந்த அரும்புல வோர்க்கே.

துலோத்.—அமர்க அமர்கஅவ் வாசன மீதே
(சிங்கனுக்கு)
இவரையோ அல்லது அவரையோ இவர்களுள்
எவரையோ புகழ்வ தென்றியான் அறியேன்
இவரது நாமதேயம் என்னவோ?

கம்பர்.—உங்கள் பெயரென்ன? (சிங்கனுக்கு)

சிங்கன்.— சிங்கன் சிங்கன்.

கம்பர்.—கவிச்சிங்கப் புலவராம், காவல்!
(அரசனுக்கு) ஆகா

துலோத்.—ஒக்கும் ஒக்கும் இவருக் கிப்பெயர்.

கம்பர்.—சீரிய தமிழ்வளர் நேரிய! இவரொரு
வித்வசிரோ ரத்தினம், இவரது கவிக்குப்
பதப்பொரு ளுரைப்பவர் மிகச்சிலர் ஆகையால்
தக்க பரிசும் மிக்சமரி யாதையும்
ஒக்கநாம் கொடுத்து உபசரித் தனுப்பலே
நன்றென எனக்குத் தோன்று கின்றது. [மை.

ஒருபுலவர்.—கம்பர் சொன்னது நிரம்பவும் உண்

வேறொருபுலவர்.—அத்திறம் செய்தலே மெத்தவும் நன்று.

துலோத்.—ஆமாம் அவ்வித மேசெய் வோம்நாம்
அருந்திறலமைச்சஇப் பெருந்தகைப் புலவர்க்குப்
பட்டுடை முதலிய பலவும் உடுத்து
ரத்தினக் கடுக்கனும் வஜ்ஜிரப் பதக்கமும்
தங்கதோ டாவும் இங்கித மிட்டுச்
சந்தன புஷ்பதாம் பூலந் தரித்துப்
பரிசாம் ஆயிரம் பொன்னைஇப் பாவலர்
சிரசின்மேல் கொட்டி சொர்ணபி ஷேகம்
செவ்வையாய்ச் செய்து இன்னும் இவர்மனம்
வவ்விய பலவும் வகையுட னிவர்க்குக்
கொடுத்து வீட்டுக்கு விடுத்தனுப் புவிப்பாய்.

மந்திரி.—சித்தப் படியே செய்குவன் உத்தம!
[சேவகனொருவன் வருகின்றான்]

சேவகன்.—வந்தனம் வந்தனம் வந்தனம் இறைவ!
மதுரையாம் முதுநகர் வழுதியர் கோமான்
விடுத்த தூதுவர் பலர்இந் நகர்மேவி
அடுத்தனர் வந்துநம் அரண்மனை வாசலைப்
பாண்டியர் பெருமான் ஈண்டுனக் கனுப்பிய
யாதோ அவசர தூதொன் றுளதாம்.

துலோத்.—சரிசரி அவர்களவ் விடமே தங்குக
அரைநா ழிகையினுன் வருவேன் அவ்விடம்.

சேவகன்.—வந்தனம் வேந்தே.
[சேவகன் போகின்றான்]

துலோத்.— அந்தமில் திறலமர்
கவிச்சிங் கப்புல வரேஉமது கவிப்பிர
சங்கத்தை வேறொரு சமயம்நாம் கேட்போம்.
வேறுபல வேலைகள் நமக்குள தாகையில்
நமது
வித்துவ சபையும் இத்துடன் கலைந்தது.
திரும்பநாம் சேர்வது வரும்புதன் கிழமை
ஆண்ட தற்கு வேண்டிய விபரம்
அனைத்தையும் நமது அமைச்சர் கூறுவர்

அற்றைநாள் நீவீர் அனைவரும் வம்மின்
நற்றமிழ் கடைந்த சொற்புல வீரே.

[அரசன் மந்திரி சேவகன் இவர்கள் போகின்றார்கள்]

புலவர்கள்.—ஜே! ஜே! ஜே!
குலோத்துங்க சோழ குரிசில் பெருமாற்கு
ஜே! ஜே! ஜே!

## ஐந்தாம் காட்சி

இடம்— உறையூர் அரமனைத்தெரு.
காலம்—சாயரக்ஷை.

[கம்பர் வருகின்றார். பரிசுபெற்று மரியாதைக் கோலத்துடனே வருகின்ற சிங்கனைத் தூரத்தே காண்கின்றார்.]

கம்பர்.—என்ன விந்தை என்ன விந்தை
சற்று நேரத் தின்முன்
வற்றிய வுடலின்மேல் சுற்றிய பீற்றலும்,
விறகும் எருவும் பிறவுஞ் சுமந்து
மொட்டையாம் தலைமேல் கட்டிய கந்தையும்,
தளர்ந்த நடையும், உலர்ந்த வுடலும்,
முடையுறு நாற்றமும், மூத்தவள் முகமுமாய்,
அறஇழி வான தூர்க்கோ லம்போய்,
விறகு வெட்டிச் சிங்கன் வியன்பெரு
கவிச்சிங்கப் புலவராய், கண்டவர் திகைக்க,
உறுபுன லாடி, நறுமலர் சூடி,
சந்தனக் குழம்பில் அங்கம் தோய்த்து,
தாம்பூல மாம்பல தகையுறத் தின்று,
பட்டாடை யுடுத்துமே லுத்தரீயம் படியபொற்,
பதக்க மணிந்துநற், பாகையுந் தாங்கி,
பொற்றோ டாவும் நற்கையி லணிந்து,
சிங்க நடையும் சிறந்தநன் னோக்குமாய்,
மறுரூப மாகி வருகிற தோற்றம்
என்ன விந்தை! என்ன விந்தை!
ஆகா

[சிங்கனும் ஒரு அரமனைபோவலைக்காரனும், வருகின்றான்.]

(வாடாசிங்கா)

சிங்கன்.— சாமி

கம்பர்.—ஒகோ மறந்தே போனேன். ராஜ
வித்துவ சபையில் மெச்சிடப் பாடி
பரிசொடு சிறப்புப் பெயர்பெற் றவரை
மரியாதை யாகவே மதித்திடல் வேண்டும்
கவிச்சிங்கப் புலவரே!

சிங்கன்.— சாமி சாமி [ஷ்டமே

கம்பர்.—இவ்வித நல்நிலை அடைந்த துஉமது அதிர்

சிங்கன்.—சாமி! நான் கெட்ட கேட்டுக்கு அதிர்ஷ்டம் ஒன்று. ஏதோ உங்கள் தயவும், கடவுள் கிருபையும் இப்படியானது.

கம்பர்.—இதுயார்? அது என்ன?

சிங்கன்.—சாமி இதுதான் மகாராஜா எனக்குக் கொடுத்த பரிசுகள் பட்டுச்சேலை: கெண்டைவேஷ்டி, சரிகை உருமா, வெத்தலைப்பாக்குச், சந்தனப்பூவு, பழம்பலகாரம், சகலமும் ஒன்று பாக்கியில்லாமல், கூடை நிறையக்கொடுத்து ஒரு ஆளையும் அனுப்பினர் தூக்கிச்சுமக்க, எனது ஜென்மப் பிறப்பிலும் இந்தமாதிரி கண்டதேயில்லை. இதெல்லாம் உங்களுடைய—

கம்பர்.—போதும் போதும், கவிச்சிங்கப்புலவரே, உம்மிடம் சொல்லவேண்டிய விஷயம் ஒன்றிருக்கின்றது. அதற்காய்த்தான் உம்மை அழைத்தேன் இவ்விடம்.

சிங்கன்.—அதென்ன சாமி சொல்லுங்கள் சொல்லுங்கள்.

கம்பர்.—கடவுளுடைய கடாக்ஷத்தாலும், உமது நல்அதிர்ஷ்டத்தாலும், எனது சாமார்த்தியத்தாலும் இன்று நீர் இச்சிறப்புப் பெற்றீர். மகாராஜாவும் உம்மையொரு மகாவித்வானாகவே மதித்திருக்கின்றார். இன்னொரு சமயம் உம்மைத் தமது வித்வசபைக்கழைப்பித்து கவிப்பிரசங்கம் செய்யச் சொல்லப் போவதாகவும் கூறியிருக்கின்றார். அப்படி அரசன் செய்யும் பட்சத்தில் உமது பண்டோளம் வெளிப்பட்டு வருவதுந்தவிர எனது பெருமைக்கும் பங்கமுண்டாம். ஆகையால்—

சிங்கன்.—அதற்கென்ன சாமி செய்யணும்:

கம்பர்.—அது தானே சொல்ல வந்தேன். தினந்தோறும் நீர் என்னிடம் வந்து நிகண்டு இலக்கணம் இலக்கியம் தருக்கம் முதலியவெல்லாம் ஒழுங்காய்க் கற்றுவருவீரானால், வெகு சீக்கிரத்தில் உன்னை மகாவித்வானுக்கி, அரசசபையில் உம்மைக்கொண்டு கவிப்பிரசங்கமும் செய்விப்பேன். உமக்கது பிரியந்தானே.

சிங்கன்.—ஆமாம் சாமி, தடையென்ன.

கம்பர்.—மெத்தவும் நல்லது. சிங்கரே, நாளை தொடுத்தே நீர் நமது கற்றுச் சொல்லிகளோடு ஒருவராய் வித்தியாரம்பம் செய்யவேண்டும். அதோ இருக்கின்றது நமது வீடு. நாளைமுதலே வருவீரோ?

சிங்கன்.—தடையென்னசாமி, நாளையே வருவேன்.

கம்பர்.—சரிசரி, கவிச்சிங்கப்புலவரே, நேரமுமானது பொழுதும்போனது, இருட்டுமுன் வீட்டுக்கு நடப்பது நல்லது.

சிங்கன்.—சாமி நீங்கள் என்றைக்கும் நன்றாயிருக்கணும் நன்றாயிருக்கணும்.

[சிங்கன் கம்பரை வணங்கிப்போய் விடுகின்றான்.]

கம்பர்.—இவ்வித மாகச் செய்தலும் சிற்சில
சமயங்க ளுக்குறும் அமைவே என்னே
குலத்தினும், தொழிலினும், குணவொழுக் கத்தி
இழிந்தவ னாக இருப்பினும், நம்மை [னும்,
நாடிய இவனுக்கு நன்மைசெய் திடவும்,
கூடிய ஒட்டக் கூத்த ராதிய
பாவலர் கர்வத்தைப் பங்கப் படுத்தவும்,
நரபதி தனக்கு நங்கவித் திறமையைக்
காட்டவும், உறுபுகழ் நாட்டவும், கருத்தில்
நினைத்துச் செய்தன அனைத்தும் நன்றே
முடிந்தன. ஆயினும், நடந்தன வெல்லாம்
கூத்தர்முன் நம்மேல் கொண்ட பொறாமையை
நாற்றிறம் பெருக்கிடும் நமக்கது என்னும்
பொறாமையாம் பொல்லா சுழித்தலை யுழன்றும்
தராதலத் தமர்ந்த தன்மையா ரெவரே.

வாழ்த்து

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

வாழி சுவேத மன்ன ராட்சி
வாழி எங்கள் தேசமும்
வாழி தூய னடியார் யாரும்
வாழி நல்ல செந்தமிழ்
வாழி கம்பர் மாட்சி சாற்றிக்
காதை மன்று ணடிப்பவர்
வாழி காண்போர் வாழி கேட்போர்
வாழி நூனி மேரியே.

முற்றிற்று

## இறப்பதா, இருப்பதா?

### விமர்சனம்-பிரதிவாதி

சென்ற மாதத்தில் ஸ்ரீமான் பி. டி. ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்கள் தேசீய பாஷைகளை உத்தாரஞ்செய்வதற்காக எழுதிய வியாசத்தைச் சுருக்கி உரைத்தோம். இப்பொழுது அதிற்காணுவதெல்லாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயமா? அல்லது ஏதாகிலும் சில அம்சங்களுக்கு எதிர்க்கக்ஷி உண்டாவென்பதை விசாரிக்கவேண்டும். ஆதலால் சுவாமிகள் எடுத்துக்கொண்ட முக்கிய பிரகரணங்களை ஒவ்வொன்றாக விசாரித்துவிட்டு விடுகிறோம். பண்டிதர்களைக் குறித்துச் சுவாமிகள் சொல்லியதை முன்னமே சுருக்கியுரைத்து நமது விசேஷ உரையும் சேர்த்துவிட்டிருக்கிறோமாதலால், இனி அதைக்குறித்து மறுபடி பேசவேண்டியது அனாவசியம். தெலுங்கு முதலிய பாஷைகளைக் குறித்து சுவாமிகள் எழுதியிருப்பதையும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

பொதுவாகப் பாஷைகள் மனிதஜாதியாருக்குள் எவ்வாறு உண்டாயிற்றென்றும், எவ்வாறு பெருகிற்றென்றும், அவற்றுட் சில எப்படி நாசமடைந்தன வென்றும், இவ்விஷயத்தை ஆராய்ந்த வித்வான்களெல்லோருக்கும் நன்றாய்த் தெரியும். அதாவது சுவாமிகள் கூறியபடி மற்ற வித்தைகளைச் சிறிது சிறிதாக ஆரம்பித்து, புத்திமான்கள் பலர் உழைத்து, எப்படிச் சுவாதீனமாக்கிக் கொண்டார்களோ, அப்படியேதான் இவ்விஷயத்திலுமென்று. இதை ஆக்ஷேபிப்பவர்களுடன் நமக்கு வாதமில்லை. அவர்களுக்குள்ள தெய்வபக்தி நமக்கில்லை. கிறிஸ்தவப் பாதிரிமார் ஹீப்ரு பாஷையை இப்போது நாம் படிக்கிறபடி ஆதாமன் வாய் வழியாக ஜீஹோவா பிறப்பித்தார் என்றும்; சம்ஸ்கிருதத்தைக் காளிதாஸன் முதலிய மஹா கவிகள் உபயோகித்திருக்குமாறு தேவலோகத்

தில் யாரோ நிர்மாணித்தாரென்றும், தமிழை ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் அகஸ்தியர் மூலமாய் யமக முதலிய கழைக்கூத்துகளுக் கிணங்க நகாசு செய்து அருளினரென்றும், பேசுபவர்களுடன் நம்மைப் போலொத்த சாமான்னியர்கள் வாதாடுவது வீண். ஒரு விஷயமட்டும் நாம் சொல்லிவிடவேண்டும். பாஷைகளைக் கடவுள் மேற்சொல்லியவாறு உண்டாக்கினால்தான் அவருடைய சக்திக்கு லோபமொன்றுமில்லை யென்றும், வேறுவிதமாக மனிதனுடைய புத்தியைத் தூண்டிவிட்டு, அம்மூலமாய்ப் பாஷையை அபிவிருத்தியாகும்படி செய்தாரென்றால், அவருடைய சக்திக்கு ஏதோ லோபம் வருமென்றும், நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் நமக்கும் ஒற்றுமையிருப்பது சாத்தியம். ஒரு தருணத்தில் ஒரு அமெரிக்கப் பெண்குழந்தையைச் சுற்றியிருந்தவர், "உன்னை யார் சிருஷ்டித்தார்?" என்று கேட்க, அதற்கு அவள், "கடவுள் என்னை ஒரு சாண் குழந்தையாகச் சிருஷ்டித்தார். பிறகு நானே வளர்ந்து வருகிறேன்," என்று சொன்னதாக நாம் படித்திருக்கிறோம். இக்குழந்தைக்கும் விவேகிகளென்று சொல்லிக்கொள்ளும் சிலருக்கும் எதாகிலும் தாரதம்மிய மிருக்கவேண்டுமென்று தான் நாம் நினைக்கிறோம். நிற்க.

ஆதலால் பாஷைகள் ஆரம்பமாகி வளர்ந்து வரும் விஷயத்தில் சுவாமிகள் சொல்லுவதை நாம் தாராளமாய் ஒப்புக்கொள்ளுகிறோம். பிராகிருத நடையிலிருந்து பண்டித நடையுண்டாயிற்றா? அல்லது இதற்கு எதிர்மாறாகப்பாஷைகள் செழித்து வருகின்றனவா? என்னும் வியவஹாரத்திலும் நாம் சுவாமிகள் சொல்லுவதை ஆக்ஷேபிக்கவில்லை. சம்ஸ்கிருதத்தையும், காவியத்தமிழையும்பற்றி அவர் எழுதியிருப்பது மொத்தத்தில் சரியென்றே நமக்குக் காணுகிறது. அதாவது மேற் சொல்லிய நியாயத்தை யனுசரித்துச் சாமான்னியர் பேசும் பாஷையைப் புத்திமான்கள் சிறிது சிறிதாகத் திருத்திக் காவியாதிகளுக் குதவுமாறு அமைத்துக்கொண்டார்களென்பது, யுக்தி அனுபவம் இரண்டிற்குஞ் சரியெனத்தோன்றும். ஆனால், காலக்கிரமத்தில் சம்ஸ்கிருதமும், காவியத்தமிழும் சாமான்னியர்களுக்குக் கட்டோடு உதவாமற்போனது வாஸ்தவமே. இதில் சம்ஸ்கிருதம் இப்படியானதற்குச் சுமாராக நமக்குக்காரணம் விளங்கும். தமிழுக்குமட்டும் இந்தக் கதி ஏன் வந்ததென்று அந்தளை சுலபமாய்ச் சொலலுவதற்காவதில்லை. ஏனெனில், தமிழோ நாளது வரை நடை பெறும் பாஷை. வெகு காலமாக நடைபெற்றும் வந்திருக்கிறது. சாமான்னிய ஜனங்களுக்குள் நடை பெறும் பாடல்களும், வேண்டுமளவிற்கிருக்கின்றன. சித்தர் பாடல், அல்லியரசானி முதலிய மாலைகள், தேசிங்குராஜன் கதைபோன்ற வீரர்கதைகள், முதலியவை யெல்லாம் சாமான்னியர்களுடைமையேயன்றிப் பண்டிதர்களுடையதல்ல. பண்டிதர்களுச்சி மேற்கொள்வதோ சில அருங்காவியங்களும், இலக்கணங்களுமே. ஆகிலும் இவைகளைச் சுவாமிகள் சொலலியவாறு கற்றறிமூடர் செய்த காரியமாகவும், கேவலம் குப்பையென்றும் தள்ளிவிடுவது சரியாகக்காணவில்லை. ஏனெனில், சுவாமிகள் வெகுவாய்ச் சிலாகிக்கும் இங்கிலீஷிலும், மில்டன் ஒருவர் இருக்கிறாரல்லவா? ஷெல்லி யொருவர் இருக்கிறாரல்லவா? இவர்களுடைய கிருதிகளைச் சாமான்னியர் படிப்பதற்காகுமா? அக்கவிகளே சாமான்னிய ஜனங்கள் எங்களுடைய கிருதிகளைப் படிக்கவேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆதலால், மகா ஜனங்களைப் பண்டிதர்கள் கை நழுவவிட்டார்களென்னும் ஆக்கிரகத்தினால் கக்ஷிபேச ஆரம்பித்ததில், சுவாமிகள் ஜனங்களுக்குள் விவேக தாரதம்மியத்தையும், அதையனுசரித்துள்ள ருசி தாரதம்மியத்தையும், ருசி பேதத்தையும், கட்

டோடு மறந்துவிட்டாரென்பது நமது கொள்கை. இது பெரிய பிசகு. ஏனெனில், உலகத்தில் எங்குப் பார்த்தபோதிலும், உச்சிமேற்புலவர்கொள்ளும் காவியரத்தினங்கள் விசேஷமாய்ப் பண்டித ஜனங்களுக்குத்தான் உதவி வந்திருக்கின்றன. எருத்தின்முன் தேங்காய் உடைப்பதில் என்ன பிரயோஜனம்?

ஆனல், காவியமென்று நாம் சொல்லவந்தது உத்தம காவியங்களை மட்டுமேயன்றி, யமக முதலிய கழைக்கூத்துகள் நிறைந்து அருத்தங் குறைந்து, சப்தம் வலுத்துப் பெருகியிருக்கும் மத்தியமக் கவிச்சிங்கங்களுடைய கிருதிகளையல்ல. தமிழில், சிந்தாமணி முதலிய பழங்காவியங்களும், கம்பராமாயணம், தேவாரம், திருவாசகம், தாயுமானவர் பாடல் முதலியவற்றையும் யாரும் உத்தமக் கிரந்தங்களாக ஒப்புக்கொள்ளுவார்கள். இவைகளால் சாமான்னிய ஜனங்களுக்கென்ன பிரயோஜனம் என்ருல், இனி ஆகவேண்டிய பிரயோஜனம் வெகுவாயுண்டென்றே நாம் சாதிக்கிறோம். ஒவ்வொருவிஷயத்திலும் உத்தாரஞ் செய்வதாக வருபவர்கள் இருக்கிறதென்னவென்று முதலில் அறியவேண்டும். தமிழை யுத்தாரஞ்செய்ய வருபவர்கள் தமிழிலுள்ள சரக்கைக் கணக்கெடுக்க வேண்டும். அவ்வாறெடுப்பதில், சிந்தாமணி முதலிய கிரந்தங்களைப் படிக்கவேண்டியதவசியமாகாது. இவற்றைப் படித்துப்பிறகு தற்காலம் வேண்டியவைகளையுங் கவனித்து முன்பின் ஒட்டி வேலைசெய்வதே விவேகிகளுக்கழகாம். இதைச்சுவாமிகளும் ஒரு சந்தர்ப்பத்தில் ஒப்புக்கொண்டே தானிருக்கிருர்கள்.

அப்படியானல் இதுவரைப் பண்டிதர்கள் என் பிராகிருத ஜனங்களுக்கு இவ்வாறு உதவவில்லையென்று சுவாமிகள் வெகுகோபங்கொண்டு கேட்கிருர்கள். அதற்கு ஒரே நியாயந்தான் நாம் சொல்லக்கூடும். ஐரோப்பாவில், சாமான்னியருக்குள் வியாபாரமுதலிய லௌகிகப்பிரவிருத்திகள் அதிகமாகிவர, அதனல் அவர்களுக்கு ஜீவகளை விசேஷித்து, அம்மூலமாய் அவர்கள் பேசும் பாஷையும் செழித்து, சாமான்னியக் காவியாதிகளும் மலிந்தன. திராவிட நாட்டிலோவென்ருல், ராஜவம்சங்கள் தழைப்பதும், தாழ்வதும், "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந் தோரூர் நண்ணுவதும்," "அறத்திடுபிச்சை கூவியிரப்போர், அரசோடிருந்து அரசாளுவதும்," இச்சம்பிரமங்கள் சக்கிரம்போல் மாறிமாறிக் கணக்குக் கடங்காமல் வந்திருக்கின்றனவென்ருலும், சாமான்னியத் திராவிடர்களுக்கு இதனல் ஒரு சலனமும் இருந்திருக்கவில்லையென்பது இன்றைக்கும் பிரத்தியக்ஷமாய்க் காணக்கூடிய விஷயம். வேண்டுவோர் "ராமனண்டாலென்ன, ராவணனண்டாலென்ன?" என்பதுபோன்ற பழமொழிகளையும், கிராமங்களில் எத்தனையோ காலமாக நடந்துவரும் பதிவுகளையுங் கவனிக்கவேண்டும். ஆதலால், ஓ, சுவாமிகளே! இம்மாதிரிப் பிரதேசத்திற்கு, ரெயில், ஆகாயக் கப்பல் முதலிய சாதனங்களைத் தருவித்து, ஜனங்களுக்குள் போக்குவரவும், செல்வமும் தழைக்கும்படி செய்துவிடுங்கள். புதுக்கல்விதானக உண்டாகிறது. இப்பொழுதும், சிறிதுசிறிதாக உண்டாகிக்கொண்டே வருவதால், பண்டிதர்கள்மேல் தாங்கள் கோபஞ் செய்வதைவிட்டு, காலக்கிரமத்தில் நமது மனோரதம் நிறைவேறத்தான் வேண்டுமென்று நம்பி அதற்கேற்றபடி உழைப்போமாக.

ஒரு விஷயத்தில்மட்டும் சுவாமிகள் முன்பின் விரோதமாக எழுதிவிட்டாரென்று நமக்குப்படுகிறது. 'கரியமிலவாயு,' 'நேர்கோணச் சமநேர் கோட்டுருவம்,' முதலிய பதங்களையும், 'பாராமாத்திரி' முதலிய பரிபாஷை விசித்திரங்களையும், 'என்னல் வாழப்படுகிறது,' 'இந்தக்குகையில் நுழைதலைச் செய்தேன்,' முதலிய வாக்கிய விந்தைகளையும், பண்டிதர்கள் என்ன பாடுபட்டும், திராவிட மகாஜனங்களுக்

குள் செல்லாக்க முடியவில்லையென்றும், தங்களுக்கு வேண்டியபடி. ஏதோ ஒரு போக்கில், 'துப்பட்டிக்காட்டு மேயில்,' 'கெரகம்,' முதலிய பதங்களையும், வாக்கியங்களையும், மகாஜனங்கள் அமைத்துக் கொள்ளுகிறார்களென்றும், சுவாமிகளுக்கு நன்றாய்த் தெரியுமாதலால், சம்ஸ்கிருத பதங்களைக் கட்டோடுவிட்டு, இங்கிலீஷ் பதங்களை உள்ளபடியே அமைத்துக் கொள்ள வேண்டுமென்று, வெகு சிரமப்பட்டு நியாயங் கூறி வாதிப்பது யுக்திக்குச் சரியென்று நமக்குப் புலப்படவில்லை. ஏனெனில் பாஷா தத்துவத்தை நன்குணர்ந்த பெரியோரொருவர், "மகா ஜனங்களுக்குள் எது வழங்கிவருகிறதோ அதுதான் பாஷைக்குரியவிதி," என்கிறார். ஆகையால், நாம் எவ்வளவு யுக்தியாக இலக்கணங்களை யமைத்து 'எஸ்பிரான்டோ' என்று சமீபத்திலுண்டாயிருக்கும் பாஷையைப்போல் சுலப நடையிலமைத்துக் கொடுத்தாலும், மகா ஜனங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால், அதனால் யாருக்கும் ஒரு பலனுமில்லாமற் போகும்.—புத்தியுக்தியில் வல்லவர்களும், சமர்த்தாகப் பேசி யெழுதக்கூடியவர்களும் காலக்கிரமத்தில் அனேகபாஷைப் புதுமைகளை நடைபெறும்படி செய்யலாமென்றாலும், சில விஷயத்தில் ஏக சக்கிராதிபத்தியம் செய்வதற்கு ஒருவருக்கும் இடமில்லை. ஆதலால், வல்லான் வகுத்ததே வாய்க்காலாவதென்று பாஷைவிஷயத்தில் நியாயம் ஏற்படுவது அசாத்தியம்.

அதெப்படியாவ திருக்கட்டும். சுவாமிகள் சம்ஸ்கிருதத்தை யிகழ்ந்து, இங்லீஷைப் பெருமைப்படுத்துவதற்கென்று வக்கீலாகத்தீக்ஷித்துக்கொண்டு, வெகு ஆக்கிரகத்துடன் வாதம்செய்திருப்பதொன்றுதான் நமக்கு இன்னும் ரகசியமாகவேயிருக்கிறது. சமஸ்கிருதபதங்கள் திராவிட நாட்டில்வந்திருப்பதுபோலவே இங்கிலீஷும் வரலாம் என்றுமட்டும் சொல்லியிருப்பாராகில் அது சகஜமாகவே காணும், அதைவிட்டு இங்கிலீஷுக்காகக் கக்ஷி பேசியிருப்பதில், அதற்குக்காரணம் சுவாமிகளுடைய மனோ தருமமட்டுமல்லாது, வேறேதாகிலும் ரகசியம் இருக்கலாமோவென்று நாம் சங்கிக்கிறோம். அப்படியிருந்தால் அது சுவாமிகளுடைய படிப்புக்கும் அனுபவத்திற்கும் ஏற்றதல்லவென்று நாம் சொல்லித்தான் தீரவேண்டும்.

இதிலும், பரிபாஷைகள் விஷயமாகமட்டுமேயென்றால், நமக்கு ஆக்ஷேபம் அதிகமில்லை. ஆனால், காவியாதிகளுக்கும் கூசாமல் இங்கிலீஷ்ப் பதங்களை உபயோகிக்கலாமென்பது போதாமல், உபயோகிக்கவே வேண்டுமென்று வற்புறுத்தும்பொழுது, சுவாமிகள் முன் பின்னெட்டிப் பேசுகிறாரா அல்லது உன்மத்தன் போல் தலைவிரிகோலமாகக் கக்ஷி பேசுகிறாரா, என்று நாம் சந்தேகிக்கவேண்டி வருகிறது. இதை நன்றாயோசிக்குங்கால் காவிய மென்பதற்குச் சுவாமிகள் கொண்டிருக்கும் பொருள் வேறு, சாமான்னிய ஜனங்கள் கொள்ளும் பொருள் வேறென்று காணுகிறது. ஆகவே, சுவாமிகள் இஷ்டப்படி தமிழ்நடை பெறுமாகில், இம்மாதிரி சொற்சுவை, பொருட்சுவை நிறைந்த பாடல்கள் மகா ஜனங்களுக்குள் காலக்கிரமத்தில் பிரபலத்திற்கு வரலாமென்று தோன்றுகிறது.—

"வொயிட்டுஜாக் கெட்டு மாட்டும்
ஒழுங்கரே கேளீ ரெந்தன்
சயிட்டுக்கு லயிட்டு தானுஞ்
சரிப்பட வில்லை யிப்போ
நயிட்டினில் மூனி ருக்க
நாமனை வருமே சேர்ந்து
கொயிட்டாகப் போவோ மாகில்
குட்டாக விருக்கும் பாரீர்."

இம்மாதிரிப் பாடல்களை நமது பாடசாலைகளிலும், கிராமாந்திரங்களிலும், பிள்ளைகள்

கற்றுவர வேண்டுமென்றும், 'தீவினை மற' 'தந்தைதாய்ப் பேண்,' 'திரைகடலோடியுந் திரவியந்தேடு,' 'மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்க்கூற்றம்,' முதலியவைகளை இனி அகற்ற வேண்டுமென்றும் ஐயங்கார் சுவாமிகள் அபிப்பிராயப் படுவாரென்றால், அவ்வபிப்பிராயம் அவருடையதாகவே மட்டுந்தான் இருக்க வேண்டும். ஆதலால், காவியாதிகளில் பழையதை யொட்டிப் போவதற்கு, வேறு உபாயங்கள் தேடவேண்டுமென்பது நமது அபிப்பிராயம். சாமான்னிய வசன நடை, புதிதாகவரும் தத்துவங்கள், இவைகள் விஷயத்திலோவென்றால், நமக்கும் சுவாமிகளுக்கும் அபிப்பிராய பேதம் விசேஷமாயில்லை. மொத்தத்தில், அவர் சொல்லுவதை நாமும் ஒத்துக்கொள்ளுகிறோம்.

நெடுங்கணக்கு விஷயத்தில்மட்டும் சுவாமிகள் ஒன்றுமே சொல்லாமல் விட்டுவிட்டார். ஆனால் அதை யோசித்திருப்பாராகில், அவருடைய மனோதருமத்தை யனுசரித்துப் பார்க்குமிடத்து, நமது நண்பராகிய நோல்ஸ் பாதிரியர் சொல்லிவருமாறு ரோமன் நெடுங்கணக்கையே திராவிட பாஷை நான்கிற்கும் உபயோகித்து எழுதி வரலாமென்று சுவாமிகள் சாதித்தாலும் சாதிப்பது சாத்தியமென்றே நமக்குக் காணுகிறது. ஆனால், அப்படியோ, அல்லது வேறு விதமாயோ திருத்தங்கள் செய்துவிட்டால், அதைச் சுவாமிகள்போன்ற சில விவேகிகள் மட்டும் தங்களுக்குள் நடைபெறும்படி செய்து கொள்ளுவது வெகு சுலபம். அப்படிச் செய்வதில் ஒரு சில்லரைத் தோஷமட்டுங் காணும்—அதை மகா ஜனங்கள் ஒரு சமயம் ஒப்புக்கொள்ளுவதில்லை யென்று முரட்டுத்தனமாயிருந்து விட்டாலும் விடலாம். ஏனெனில், மகா ஜனங்கள் எப்பொழுதும் முட்டாள்களே. தவிர அவர்களிலாராவது திருப்பி நம்மைக் கேட்பார்கள். நமக்குதவாதபடி நாம் பேசும்பாஷையை யமகமுதலிய கழைக்கூத்துகளால் கெடுத்து விட்டதற்காக, பண்டிதர்களை வயிறு நிறையத்திட்டியநீர், இப்பொழுது நமக்குதவாத எழுத்துக்களை யமைத்துக்கொண்டு விவேகிகளான நீங்கள் நாலைந்து பேர்மட்டும் அதை யுபயோகித்து வருதல் நியாயமா? என்று. இப்படிக் கேட்பவர் முட்டாளாயினும் அதற்குப் பதிலுரைப்பது கடினமென்றே நமக்குக் காணுகிறது. ஐயங்கார் சுவாமிகளுக்கும் அப்படித்தான் காணுமென்று நம்புகிறோம்.

## புஸ்தக விமர்சனம்

ஜீவவர்க்க போதினி.—முதற்பாகம்.—வி. ஆர். துரைசாமி சாஸ்திரியாரவர்கள், எம். ஏ. எல். டி., மதிராசு கணேஷ் கம்பெனி. விலை அணா 10.

சித்திர விளக்கத்துடன் கூடிய இச்சிறு புஸ்தகத்தைப் பார்வைக்காக அனுப்பிய முதலாளிகளுக்கு வந்தனம். எழுதியவர் இவ்விஷயத்தையே எம். ஏ. வரை கற்றும், தற்காலம் அவ்விஷயத்திலேயே உழைத்தும் வருவதால், அவருக்கு நாம் கொடுக்கவேண்டியதாக யோக்கியதைப் பத்திரமொன்றும் காணவில்லை. 'விஹாரிணியில்' பூச்சிப்புலவர் சொல்லிய தோஷத்தைப் பரிகரித்து, நம்மவர்களுக்குச் சுற்றியிருக்கும் பசு, பக்ஷி, மிருகாதிகளைப் புத்திபூர்வமாய்ப் பரீக்ஷித்தறிவதற்கு இது வெகு நல்ல சாதனமென்று நாம் தாராளமாய்ச் சொல்லலாம். ஸ்ரீமான்-ரங்காசாரியர் 'ஓஷதி' வர்க்கத்தைக் குறித்தெழுதிய புஸ்தகத்திற்கு இதையும், இனிவரும் பாகங்களையும் துணையாக்கிக்கொண்டு, எலிமெண்டரி உபாத்திமார்களும், சாமான்னிய ஜனங்களும், முக்கியமாகப் பெண்களும், இவற்றையும், இவைபோல் இனித் தக்க வித்துவான்களால் எழுதப்பெற்றுவரும் மற்ற புஸ்தகங்களையும் வாசித்து நற்பயனடைவாராக. இக்காலத்தில் அனேகம் சரக்குகள் செட்டிமுடுக்கினால் விலையாக வேண்டியவை. ஆனால் இம்மாதிரி சில அபூர்வவஸ்துக்களோ, சரக்கு முடுக்கினாலேயே முன்னுக்கு வர வேண்டியவையென்று நாம் தடையில்லாமல் சொல்லலாம்.

பொய்யா மொழிப்புலவர் சரித்திரம்—தீஞ்சுவைப் பொக்கிஷம், இலக்கம் 1. கோவை, சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள். விலை அணா. 2.

ஸ்ரீமான் முதலியாரவர்கள் சிறிது காலமாகச் செய்துவரும் வேலையை நாம் கவனித்ததில், அவருக்குச் சாரித்திர சம்பிரதாயமாய்த் தமிழையும், தமிழாசிரியரையும், பற்றிய வர்த்தமானங்களை ஆராய்ந்து, எல்லோருமறியும் சாமான்னிய நடையில் எழுதவேண்டுமென்கிற ஆக்கிரகம் வலுத்திருப்பதாகக் காணுகிறது. ஆதலால் இப்புஸ்தகத்தையும் இதுபோன்று இனி வெளியாகக்கூடிய வேறு புஸ்தகங்களையும் நாம் விஷயமறிய விரும்புவோருக்கு மனப்பூர்வமாய்ச் சிபார்சு செய்கிறோம். 'வண்டு மலர்சசேக்கை விரும்பும் செழும் பொழில்வாய்,' நெடுநாளாகத் தமிழபிமானிகள் 'வேம்பை' நாடியிருந்ததுகொண்டு, அவர்களுக்கு நல்லறிவும், உய்த்துணர்வும், பெருகுமாறு எடுத்திருக்கும் இக்காரியத்தை ஸ்ரீமான் முதலியாரவர்கள் சிரஜீவியாகவிருந்து, முடிவுபோகச் செய்வாரென்று நம்புகிறோம்.

## சஞ்சிகை வரவு

**வித்தியாபாநு.**—ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை. சௌமிய வருஷம், மார்கழிமீ-விவேகபாநு அச்சுக்கூடம்-மதுரை.

இதைப் பார்வைக்கு அனுப்பிய புரப்ரைட்டாவர்களுக்கு வந்தனம். சாரித்திர சம்பிரதாயமாகக்காணும் விஷயங்களில், 'அக்பரின் காலக்ஷேபம்,' 'திருவேங்கடவாராய்ச்சியின் வேறுபாடு,' இரண்டும் சிறந்து விளங்குகின்றன. 'அபிதான விளக்கம்' என்பது நல்ல யோசனை. அதை விடாமற் செய்து வந்தால், காலக்கிரமத்தில் இங்கிலீஷுக்கு ப்ரூவர் உதவுவது போல் உதவும்படி செய்வது சாத்தியம்.

விவேக போதினி—தைமூ.—இதில் 'மகரசங்கராந்தி,' 'தமிழ்வசன நூற்சரிதம்,' 'ராமேச சந்திரதத்தர்,' 'இத்தேசத்தின் பாசன முறைகள்,' ஆகிய பெரிய விஷயங்களும், மற்றும் சில்லரை விஷயங்களும், மாமூல் படியுள்ள குறிப்புகளும் காணுகின்றன. படிப்போருக்கு உபயோகம் அதிகரித்தே வருவது யாருங் காணக்கூடியது.

'பிழைக்கும் வழி'.—தைமீ-இந்நெம்பரில் 'பத்திராதிபர் குறிப்புகள்' விசேஷமாகக் கவனிக்கத்தக்கவை. தவிர 'பையன்கள் படிப்பு' 'நெல்சாகுபடி,' 'பசுந்தாள் உரம்,' 'கரும்புக்குத் தண்ணீர்,' 'தோல் வியாபாரம்,' ஆகிய விஷயங்கள், அவற்றை யாராய்ந்து தேறியிருப்பவர்கள் எழுதியிருப்பதால், யாவரும் கவனித்துப் படிக்கவேண்டியவை. 'பத்திரிகை ஆராய்ச்சி'யும், 'பகுதிக் குறிப்புகளும்,' வேண்டிய மட்டில் இருக்கின்றன. இத்துடன் புதுவருஷ மாரம்பமாதலால், 'பிழைக்கும் வழி' யினி மேன்மேலும் வளர்ந்து, நடத்துவோர், படிப்போர் இருதிறத்தாருக்கும் சுகத்தை விளைவிக்க வேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

## சமாசாரக் குறிப்புகள்

பொம்பாய் நகரம் ஜன நெருக்கத்தினுல் சுகங்கெட்டு வருவது கொண்டு, நெருக்கத்தைக் குறைக்கப் பிரயத்தனம் நடந்து வருகிறது. அதற்காக முனிஸிபாலிட்டியார் தேர்ந்தெடுத்திருக்கும் நிவேசனத்தைப் பூராவாகவோ, ஏகதேசமோ, வாங்கிக் கோ ஆபரேஷன் முறையில் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக, கனம் விட்டல்தாஸ் தாமோதர தாகர்ஸி அவர்களும் மற்றைய சிலரும் முயன்று வருவதாகக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். மதிராசிலும் இப்பிரயத்தனம் இம்முறையில் நடக்கலாமென்றுதான் நமக்கு வெகு நாளைய அபிப்பிராயம்.

***

சென்ற மாதத்தில் ஸேன் நதிப்பிரவகித்து அதனுல் பாரிஸ் நகரமும், வேறு அனேக இடங்களும் பலத்த நஷ்டமடைந்து போயினவென்று கேட்டு விசனிக்கிறோம். அதனுல் அந்நகர ஏழைகளுக்கு நேரிட்ட கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காக எங்கும் பிரயத்தனம் நடந்து வருகின்றது. நமது சக்கரவர்த்தியவர்களும் பணம் உபயம் செய்திருக்கிறுர்கள்.

***

சமீபத்தில் 'பாரஸ்டு' விஷயமாய் இங்கிலாந்தில் நமது கவர்ன்மெண்டில் பாரஸ்டு இலாகாவில் உத்தியோகமாயிருந்த ஒருவர் பிரசங்கம் செய்தார். அதில் முக்கிய அம்சங்கள், ஒரே ஜாதிமரம் எந்த இடத்திலும் வளராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், இலை வகைரா உதிர, உதிர, அவற்றைக் கூட்டியெடுத்துப்போவது கூடாதென்றும், மரங்கள் நன்ருய்ப் பக்குவமாகுமுன் அவற்றை வெட்டுவது பிசகென்றும், மற்ற விஷயங்களிலெப்படியோ அப்படிப் பாரஸ்டு விஷயத்திலும் வரவுக்குமேல் செலவாகக் கூடாதென்றும் சொல்லியவையாம். தேக்கு, சந்தனம் முதலிய முதல்தர மரங்கள் விஷயத்தில் தான் இதை நன்ருகக் கவனிக்கவேண்டுமென்று காணுகிறது.

'பிரமசாரிய உத்தாரணீ' யென்று ஒரு சபை ஸ்ரீ காசியில் ஆகியிருப்பதாகவும், அதற்குப் பிரசாரண கருவியாக 'பிரமசாரி' யென்றொரு பத்திரிகை வெளிவருவதாகவும் வதந்தி. இந்தச் சபையின் நோக்கம் வெகு சிறுவயதிலாகும் பதுமைக் கலியாணத்தை நிறுத்துவதாம். இதில் ஒருவர்தான் ஐந்து வருஷமுள்ள ஒரு மணமகனை, நீயேன் இத்தனை சீக்கிரம் கலியாணஞ் செய்துகொள்ளுகிறாய், என்று கேட்க, அவன், "என்ன முட்டாள்தனம்? எனக்குக் கலியாணம் தேவை. என் தகப்பனுக்குப் பெண்சாதி யிருக்கிறாள் அல்லவா? எனக்கு மட்டும் ஏன் வேண்டாம்? என் பெண்சாதிக்கு வயது மூன்று. பார்க்க வெகு லக்ஷணம். ஆதலால் நாங்களிருவரும் கூடிச் சுகமாக விளையாடப் போகிறோம்," என்று பதிலுரைத்ததாக எழுதுகிறார்.

***

மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் சில வருஷங்களாக 'வெட்டுண்டு' போகிறவர்கள் பெரும்பாலாராவது கொண்டு, அதன் உண்மையறியவேண்டுமென்று சென்றவருஷம் ஒருகமிஷன் ஏற்பட்டது. இந்தக் கமிஷன் ரிபோர்ட்டு என்ன வாயிற்றோ தெரியாது. அதற்குள் நாளது வருஷத்திய 'ஜமாபந்தி' வந்து 'பைசலும்' ஆகிவிட்டது. ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத்தாழ்ப்பாளாக முடிந்திருக்கிறது. பரீக்ஷைக்குப்போன பிள்ளைகளும், அவர்களைப் பெற்றோரும், அவர்களுக்குக் கல்விபயிற்றிய உபாத்தியாயர்களும், இன்னது செய்வதென்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் இந்த முறை நடந்த பரீக்ஷையில் ஏதோ கிருத்திருமமிருக்கவேண்டுமென்றும், 'வெட்டுண்டவர்களுக்கு' மறுபடி பரீக்ஷையாக வேண்டுமென்றும் மனு செய்யவேண்டுமென்று கூவிவந்ததில் மறுபடி சிலருக்கு அரையோக்கியதை கிடைத்திருக்கிறது.

***

இரண்டு மாசத்திற்கு முன் 'விஹாரிணி'யில் காகிதம் இந்தியாவிலேயே ஆகவேண்டிய அவசரமிருப்பதைக் குறித்துப் பேசினோம். இப்பவும் 'லக்ஷ்மீ' பேப்பர்மில், என்று திருவாங்கூரிலேற்பட்டிருக்கும் கம்பெனியாருடைய கடிதவகைகள் விற்பனைக்கு வந்திருப்பதாகவும்; யோக்கியதை விஷயத்தில் இக்கடிதங்கள் மேனாட்டுக்கடிதவகைகளுக்கு ஒரு விதத்திலும் குறைந்து போகவில்லையென்றும் கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

'மன்னார் குடியில்' நடந்த கலகத்தை யொட்டி ஸ்ரீமான் கே. பி. ராமநாத அய்யரவர்கள் ஒரு பிரசங்கம் செய்தார்கள். அவர்களுடைய நோக்கம் தெரியாமல் அப்பிரசங்கத்தில் இரண்டோர் அம்சத்தை ஆக்ஷேபித்துச் சிலர் எழுதிய கடிதத்தைப் படித்து விசாரப்படுகிறோம். முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று. அதைச் சென்ற மீ நாம் சொல்லி யிருக்கிறோம். மிஷனரிப் பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகளை யனுப்பிவரும் இந்துக்களுக்குத் தங்கள் மக்கள் கிறிஸ்தவராகிவிட்டதற்காக விசாரமிருக்கக்கூடாது. அப்படியாக வேண்டாமென்றாலும், தங்கள் மதம், ஆசாரம், இவைகளில் பற்றிருப்பது வாஸ்தவமானாலும், நம்மவர்கள் செய்யவேண்டிய காரியம் ஒன்றேதான். பணத்தைப்போட்டுப் பாடசாலைகளை நிர்மாணித்துக்கொண்டு, பிள்ளைகளுக்குத் தங்கள் மனம்போலக் கல்வி புகட்டப் பிரயத்தனப்படவேண்டும். விருதாவில் கூச்சல் போட்டாவது ஒன்றுமில்லை. இதைத்தான் ஐயரவர்களும் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

***

பாம்பு, தேள் முதலிய விஷக்கடிக்குப் பரிகாரமாக ஒருவிதக்கல் இருப்பதாக நமக்குள் அனேகருக்கு நம்பிக்கையுண்டு. இங்கிலீஷ்காரர் இதை நம்புவதில்லை. ஆனால் தேள்கடி விஷயத்தில் தானும் அனுபவப்பட்டு வேறு அனேகருக்கும் நன்மைசெய்திருப்பதாகவும், அது ஒரு விதக்கல் தானென்றும், கடிவாயில் அதை வைத்தால் அது விஷம் முற்றிலும் உறிஞ்சி விடுவதாகவும், அப்படி விஷம் முற்றிலும் வெளிவருமளவும் கல் அதைவிட்டு வருவதில்லையென்றும், பாம்பு விஷயத்தில்தான் அதைப் பரீக்ஷிக்கவில்லையென்றும், 'ஹிந்து'வுக்கு ஒருவர் எழுதுகிறார்.

***

மகாராஜா கிருஷ்ணப்பிரசாத் பஹதூர், என்னும் ஐதராபாத்து ஹிந்து திவான், 'மகாராஜா தோடர்மால்' என்னும் (ஆக்பர் சக்கரவர்த்தியவர்களுடைய சமஸ்தானத்து) சர்வே செட்டில்மெண்டு மந்திரி வமிசத்தவரென்று கேட்டிருக்கிறோம். ஆகவே அவர் தமது குடும்ப வழக்கப்படி ஹிந்து பாரியை யொருவளையும், மகம்மதீய பாரியை யொருவளையும் விவாகஞ் செய்துகொண்டதுமன்றியில், மகம்மதீய பாரியைக்குப் பிறந்த பெண்ணை மகம்மதீய மணமகனொருவனுக்குச் சமீப காலத்தில் விவாகஞ் செய்வித்ததாகவுங் கேட்டு மெத்தவும் சந்தோஷிக்கிறோம். ஹிந்து மகம்மதீயருடைய க்ஷேமத்தைக் கோரியிருப்பவரனைவரும் இதைக் கவனிப்பாராக.

கல்விமான்களால் யெழுதப்பட்ட அரிய தமிழ் புத்தகங்கள்

# வித்யா விஹாரிணி

சந்தாதாரர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்

வித்யா விஹாரிணி சந்தாதாரர்களுக்கு அடியிற் கண்ட புத்தகங்கள் ரூபாய்க்கு இரண்டு அணா குறைத்து கொடுக்கப்படும். சந்தாதாரராக ஆகாதவர்கள் வருஷ சந்தா துகை ரூ. 5 அனுப்பி, வேண்டிய புஸ்தகங்களுக்கு ஆர்டர் செய்யவும்.

## தேசாபிமானிகள் சரித்திரம்

இந்திய தேசத்திற்காக சுயநலத்தை நாடாது தொண்டு புரியும் பக்த சிகாமணிகளில், பன்னிரு மகான்களின் ஜீவிய சரிதையை, இனிய செந்தமிழில் வரைந்து நல்ல கடிதத்தில் சிறந்த எழுத்தில் பதிப்பித்து, அவர்களின் உருவப்படத்துடன் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. விலை. அணா 12.

## காமாக்ஷி

பால்ய விவாகத்தால் உண்டாகும் அசௌகரியத்தையும் விதவா விவாகத்தைச் செய்யலாமென்று சாஸ்திர ரீதியாயுள்ள அத்தாக்ஷிகளை விளக்கியும், சிறுவர் சிறுமியருக்கு தமது விவாகத்தில் வரனைத் தாங்களே தெரிந்தெடுக்கவேண்டியது அவசியமென்பதையும் விளக்கிக்காட்டும் ஓர் கைம்பெண்ணின் கதியைக் கதாரூபமாக ஸ்ரீமான் பிரணதார்த்திஹர சிவா அவர்களால் எளிய நடையில் வரைந்துளது.

விலை அணா 8.

## ஆநந்தமடம்

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| தேசபக்தி புகட்டுங் கதை ... ... | 0 | 8 | 0 |

## சந்திரசேகரன்

| | | | |
|---|---|---|---|
| இந்து மாதுகளின் நல்லொழுக்கங்களை விளக்கிக் காட்டுங் கதை ... ... ... | 0 | 8 | 0 |

## தமயந்தி

| | | | |
|---|---|---|---|
| ஓர் நவீன நாடகம் ... ... ... | 0 | 9 | 0 |
| பங்கஜாக்ஷி ... ... ... | 0 | 8 | 0 |
| ராஜாம்பாள் ... ... ... | 0 | 12 | 0 |

## ம-ா-ா-ஸ்ரீ பண்டித நடேசசாஸ்திரியாரால் எழுதப்பட்ட அரிய தமிழ் புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| தீனதயாளு (Third Edition) ... | 0 | 8 | 0 |
| மதிகெட்ட மனைவி ... ... ... | 1 | 0 | 0 |
| ஸ்ரீமாமி கொலுவிருக்கை ... ... | 0 | 8 | 0 |
| தலையணை மந்திரோபதேசம் ... ... | 0 | 8 | 0 |
| முத்திரா ராக்ஷஸம் ... ... ... | 0 | 4 | 0 |
| மிருச்சகடி ... ... ... ... | 0 | 4 | 0 |
| வேணி சம்ஹாரம் ... ... ... | 0 | 3 | 0 |
| ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள் ... | 0 | 6 | 0 |

## ப. சம்பந்தமுதலியார் இயற்றியநவீனநாடகங்கள்

| | | | |
|---|---|---|---|
| அமலாதித்யன் ... ... ... | 1 | 0 | 0 |
| காதலர்கண்கள் ... ... ... | 0 | 12 | 0 |
| வேதாளவுலகம் ... ... ... | 0 | 8 | 0 |
| சத்ருஜித் ... ... ... | 0 | 12 | 0 |
| யயாதி ... ... ... | 0 | 8 | 0 |
| மனோகரன் ... ... ... | 0 | 12 | 0 |
| சாரங்கதரன் ... ... ... | 0 | 8 | 0 |
| இரண்டுநண்பர்கள் ... ... ... | 0 | 12 | 0 |
| காலவரிஷி ... ... ... | 0 | 8 | 0 |
| லீலாவதிசுலோசனா ... ... ... | 0 | 12 | 0 |
| பேயல்ல பெண்மணியே ... ... | 0 | 8 | 0 |

## அருமையான தமிழ்ப் புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| போஜ சரித்திரம் (16 பக்கங்களுடையது) | 1 | 8 | 0 |
| குணசீலன் ... ... ... ... | 0 | 10 | 0 |
| பரிமளா ... ... ... ... | 0 | 10 | 0 |
| சுகுணாங்குதன் ... ... ... | 0 | 12 | 0 |
| வாஸந்திகா ... ... ... | 0 | 8 | 0 |
| மகாமகம் அதின் மகிமை ... ... | 0 | 4 | 0 |
| ஸுஜாதா ... ... ... | 0 | 8 | 0 |
| லலிதாங்கி ... ... ... | 0 | 8 | 0 |
| மானிட மர்மசாஸ்திரம் ... ... | 5 | 0 | 0 |

கணேஷ் கம்பெனி, தப்புசெட்டிதெரு, சென்னை.



ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் ஜேபம் செய்தல்